325

# செங்குந்த மித்திரன்

ஐப்பசி 1931

4 10

JL
Y492.5G;m211,N28
N31.4.10
158892

ered No. M. 1514 பிரமோதூத வருஷ ஐப்பசி மீ

2 S 1931




The Progressive Printers, 17, Coral Merchant Street, Madras

# "செங்குந்த மித்திரன்"

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்ற மடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சீரிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்த மித்திர'னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானல் நமது 'மித்திர' னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக் கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ. பை. | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிக்கா ,, | 2—0—0 | ஒன்றுக்கு 0—2—6 |

# "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு"

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இது கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது,' 'எழுப்பெழுபது', மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய களிப் பொருபது, திருக்கை வழக்கம், பிள்ளைத் தமிழ், கலித்துறை மாலை. தசாங்கம், ஊசல், லாலி, கட்டியம், எச்சரிக்கை, மங்களம் முதலியன செங்குந்த விநாயகர் மாலை, செங்குந்த சிலாக்கியர் மாலை, செங்குந்த வேற் பதிகம், செங்குந்த மரபு விளக்கம், சூறவளி, திருக்கை வழக்கத்தந்தாதி, செங்குந்த குலமாட்சி ஆகிய 15 பிரபந்தங்களும் அடங்கியது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத்திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

உயர்ந்த பதிப்பு காலிகோ பயிண்டில் பொன் கில்ட் செய்தது. விலை ரூ. 2-8-0.
தபாற் கூலி பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்கும் இடம்:—
மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
சேத்துப்பட்டு, சென்னை

326.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வணக்கம்:—செங்குந்த குலதிலகர்களாகிய இரட்டையர் பாடிய அம்மானை | 346 |
| பத்திரிகாசிரியர் முன்னுரை:—சட்டசபை நியமனம், செங்குந்த சமூகத்துக்குப் பிரதி நிதித்துவம் வேண்டும், தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கம் சென்னை, அவச நிருவாக சபைக்கூட்டம் | 347 |
| சமயப் பகுதி:—இந்து தெய்வ தத்துவார்த்த விளக்கம் | 349 |
| புது உலகமும் பழைய உலகமும்:—இந்திய வியாபாரநிலை—1929-30-ம் வருஷத்திய அறிக்கை | 352 |
| ,, ,, இந்திய விவசாயிகள் பொருள் நிலை | 354 |
| சீர் திருத்தப் பகுதி:—விவாத தோஷம் | 356 |
| ,, ஒற்றுமை மணத்தினுயர்வும், செங்குந்த மணங்களிற் சில சீர் திருத்தங்களும் | 359 |
| சுகாதாரப்பகுதி:—குடியால்விளையும் கேடுகள் | 361 |
| அறிவியல்பகுதி:—வானநூலும், இந்தியப் பஞ்சாங்கமும் | 364 |
| செங்குந்த யாத்திரைவாசி | 367 |
| செங்குந்தர் கிளர்ச்சி | 370 |
| நன்கொடைகள் | 375 |
| பஞ்சாங்கம் | 376 |


## சென்னைச் சர்வ கலாசாலைச் செங்குந்த பட்டதாரி

**கோட்டாறு திரு. C. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இவ்வருட பி. ஏ. ஹானர்ஸ் பரீக்ஷையில் தேறியதைக் கேள்வியுற்று மிக்க மகிழ்ச்சியடைகிறோம். சென்ற ஐந்தாறு வருஷங்களுக்கு இவர் ஒருவரே செங்குந்தர்களுள் ஹானர்ஸ் பரீக்ஷையில் தேறியுள்ளார். (ப. ஆ.)**

2 3 1931

## செங்குந்த குலதிலகர்களாகிய இரட்டையர் பாடிய அம்மானை

[திரு. R. V. கருப்பண்ண முதலியார் அனுப்பியவை]

(தொகுதி 4, பகுதி 9, 806-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடுந் திருச்சம்பு நாதர்க் கிருப்பிடத்தில்
ஓடுஞ் சலம்பெருகி யூற்றெடுத்த தாமானை
ஓடுஞ் சலம்பெருகி யூற்றெடுத்த தம்மாயின்
நாடு மொரு சிலந்தி நண்ணினதோ வம்மானை
நவைதீ ரொரு சிலந்தி நண்ணினதுண் டம்மானை

எண்ணரிய காஞ்சியில்வா ழேகாம் பரநாத
அண்ண றிருமேனியெங்கு மாகாச மம்மானை
அண்ண றிருமேனியெங்கு மாகாச மாமாயின்
வண்ணமுறு மார்பின் வடுப்படுமோ வம்மானை
மாவடியில் வாழ்பவர்க்கு வடுவரிதோ வம்மானை

பூங்கொன்றை நாதன் புகழ்கச்சி யேகம்பன்
சேங்கண்ணின் மீதேறுஞ் செல்வன்கா ணம்
[மானை
சேங்கண்ணின் மீதேறுஞ் செல்வனே யாமாயின்
மாங்கண்ணின் கீழிருக்க வந்ததே னம்மானை
வந்தல்லோ விவ்வாறு வடுபட்ட தம்மானை

சேற்றூன் மடையடைக்குஞ் சேவகனார் கூடலிலே
வேற்றாளாய் மண்சுமக்க வேண்டினர்கா
[ணம்மானை
வேற்றாளாய் மண்சுமக்க வேண்டினரே யாமாயின்
மாற்றா னடித்த வடுவிலையோ வம்மானை
மாவடியில் வாழ்பவர்க்கு வடுவரிதோ வம்மானை

எட்டுத்திக் குள்ளோரு மிறைஞ்சுமெங்கள்
[சொக்கலிங்கம்
கிட்டுகின்ற வேகசந்த கிராகிகா ணம்மானை
கிட்டுகின்ற வேகசந்த கிராகியே யாமாயின்
கொட்டிமக வான்பல்காற் குழலுவதே னம்மானை
குழறுனோ வாசாற்குக் கோளிழைத்தா லம்மானை

பதமலராற் சகடுதைத்த பார வடமலையர்
அதிகுணத்து நிலமகண்மே லாசைகொண்டா
[ரம்மானை
அதிகுணத்து நிலமகண்மே லாசைகொண்டா
[ராமாயின்
விதுமுகத்து மலர்மானை விட்டனரோ வம்மானை
விடுவாரோ மாலானுன் மேதினிக்கு ளம்மானை

மனஞ்சலியா மற்றினமு மாறுமற் றண்டலையார்
தினங்கீரை மாவடுவுந் தின்றுவந்தா ரம்மானை
தினங்கீரை மாவடுவுந் தின்றுவந்தா ராமாயின்
கனங்கொண்டு மெய்யிலனல் காணுதோ வம்மானை
கண்டதுகா ணெற்றியிலே கண்ணெரிச்ச
[லம்மானை

தண்டா மரைத்தடஞ்சூழ் தண்டலையா ரெப்
[பொழுதும்
உண்டா ரிளங்கீரை மாவடுவு மம்மானை
உண்டா ரிளங்கீரை மாவடுவே யாமாயின்
பண்டேதான் றின்று பழக்கமுண்டோ வம்மானை
பழக்க மில்லைத்தாயனார் பழக்கிவைத்தா ரம்மானை

பொன்னேறு மார்பர் புகழ்சேர் திருவரங்கர்
எந்நேர மும்பாம்பி லேகிடப்பா ரம்மானை
எந்நேர மும்பாம்பி லேகிடப்பா ராமாயின்
என்னே தறுக்குவிட மேறாதோ வம்மானை
ஏறுமோ செங்கருட னேறினா லம்மானை

எந்தவுல கும்பரவு மெங்கள்சொக்க லிங்கேசர்
சந்ததமும் பொன்மன்றிற் றாண்டிப்பா ரம்மானை
சந்ததமும் பொன்மன்றிற் றாண்டிப்பா ராமாயின்
அந்தவெள்ளி மன்றதனி லாடினதே னம்மானை
ஆடினார் கான்மாற் றதிகமென்றே யம்மானை

பிழை திருத்தம்

புரட்டாசி இதழில் வந்த அம்மானையில் 4-ஆம் பாட்டில் 'கொன்னக்' என்பதைச் 'சொன்னக்' எனவும் 6-ஆம் பாட்டில் 'கட்படுகர்' என்பதைக் 'கட்படுநர்' எனவும் திருத்துக.

---


# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

தொகுதி—ச] பிரமோதூத வருஷம் ஐப்பசி மாதம் [பகுதி—௰


### பத்திரிகாசிரியர் முன்னுரை

### சட்டசபை நியமனம்

### செங்குந்த சமூகத்துக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும்

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

### அவசர நிருவாகசபைக் கூட்டம்

திரு. S. குழந்தைவேல் முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் 18-9-30 மாலை 5-30 மணிக்குக் கூடிய நமது தலைச்சங்கத்து நிருவாக சபையின் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியுள்ளன:—

1. "புதிதாகக் கூடவிருக்கும் சென்னை மாகாணச் சட்டசபையில் செங்குந்த வகுப்பினரின் பிரதிநிதியாக ஒரு கனவானை நியமிக்க வேண்டுமெனச் சென்னை துரைத்தனத்தாரை ஷை வகுப்பாரின் மாகாணத் தலைச் சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் வேண்டிக்கொள்ளுகின்றது. இது சம்பந்தமாக, இச்சங்கமானது, செங்குந்த வகுப்பினர் சென்னை மாகாணத்தில் மட்டும் ஆறு லக்ஷத்திற்கு மேற்பட்ட தொகையினராயுள்ளனரென்பதையும், இது வரையில் இதற்குக் குறைந்த தொகையினராயுள்ள இதர வகுப்பினர்க்குச் சென்னை மாகாணச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் வழங்கப்பெற்றிருந்தும் செங்குந்த வகுப்பினர்க்கு மட்டும் அத்தகைய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை யென்பதையும், இச்சமயமும் செங்குந்த வகுப்பினருள் ஒருவரையேனும் சென்னைச் சட்டசபைக்குச் சென்னைத் துரைத்தனத்தார் நியமனஞ் செய்யாவிடின் இவ்வகுப்பினருள் மிக்க அதிருப்தி யுண்டாகுமென்பதையும், இவ்விஷயமாக ஈரோட்டில் 1929ஆம் ஜனவரிமீ கனம் சர். எம். கிருஷ்ணன் நாயர் அவர்களின் பேராதரவின் கீழ் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகா நாட்டில் ஒரு தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறித் துரைத்தனத்தாருக்கு

அறிவிக்கப்பட்டுள்ள தென்பதையும், செங்குந்த வகுப்பினர் சார்பாகச் சென்னைத் துரைத்தனத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது.

2. "செங்குந்க வகுப்பினரின் பிரதிநிதியாகச் சென்னைச் சட்டசபைக்கு நியமனஞ் செய்ய இவ்வகுப்பினருள் கல்வி கேள்விகளில் சிறந்தோரும், அறிவாற்றல்களில் மிகுந்தோரும், குலாபிமானம் நிறைந்தோருமாகிய திருவாளர் வீ இரத்தின முதலியார், பி.ஏ., பி.எல், அட்வோகேட், அவர்களை இச்சங்கம் சென்னைத் துரைத்தனத்தாருக்குச் சிபார்சு செய்கிறது.

3. "இத்தீர்மானங்களை உரிய துரைத்தன அதிகாரிகளுக்கும், இம்மாகாணத்திலுள்ள செங்குந்தர் கிளைச்சங்கங்களுக்கும், பத்திரிகைகளுக்கும், இதர முக்கியஸ்தர்களுக்கும் அறிவிக்கத் தலைவரை இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகின்றது."

கீழ்க்கண்ட செங்குந்தர் சங்கங்கள் கீழ்க்கண்ட தேதிகளில் கூடிய தமது கூட்டங்களில் திரு. வீ. இரத்தின முதலியார், பி.ஏ.,பி.எல்., அவர்களை ஏகமனமாகச் செங்குந்தர் பிரதிநிதியாகச் சென்னைச் சட்டசபையில் நியமனஞ் செய்யுமாறு சென்னைக் கவர்னர் அவர்களைத் தீர்மான மூலம் வேண்டிக் கொண்டு தந்திகளும் மனுக்களும் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளார்கள்:—

**சென்னை**

1. தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் (18-9-30)
2. திருமயிலைச் செங்குந்தர் சங்கம் (30-9-30)

செங்கல்பட்டு ஜில்லா

3. காஞ்சிபுரம் செங்குந்தர் மகாஜன சங்கம் (21-9-30)
4. சேர்க்காடு ,, (28-9-30)
5. பெருநகர் ,, (27-9-30)
6. மானம்பதி ,, (27-9-30)
7. கருங்குழி மேலவலம்பேட்டை

வடஆற்காடு ஜில்லா

8. கலவை ,, (20-9-30)
9. சத்துவாசாரி ,, (21-9-30)
10. திருமால்பூர் ,, (25-9-30)

சித்தூர் ஜில்லா

11. சோளிங்கபுரம் ,, (20-9-30)

சேலம் ஜில்லா

12. மோகனூர் ,, (23-9-30)

கோயம்புத்தூர் ஜில்லா

13. ஈரோட்டு ,, (20-9-30)
14. கோவை ,, (22-9-30)
15. மூலத்துறை ,, (30-9-30)

திருச்சிராப்பள்ளி ஜில்லா

16. உன்னியூர் (23-9-30)
17. பொன்பரப்பி ,, (30-9-30)
18. மண்ணச்சநல்லூர் ,, (21-9-30)

தஞ்சாவூர் ஜில்லா

19. மணக்குடி ,, (25-9-30)
20. பொருள்வைத்தசேரி (21-9-30)
21. வாழுமங்கலகம் ,, (25-9-30)
22. காரைக்கால் ,, (3-9-30)

மதுரை ஜில்லா

23. மதுரை வாலிபர் ,, (7-9-30)

இராமநாதபுரம் ஜில்லா

24. மண்டல மாணிக்கம் (27-9-30)
25. இராமேஸ்வரம் ,, (26-9-30)
26. ஸ்ரீவில்லிபுத்தூர் ,, (22-9-30)

திருநெல்வேலி ஜில்லா

27. சங்கரநாயனார் கோவில் (21-9-30)

மலையாளம் ஜில்லா

28. பாலப்புரம் ,, (28-9-30)

158892



## சமயப் பகுதி

## இந்து தெய்வ தத்துவார்த்த விளக்கம்

[திருவாளர். வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்.]

(தொகுதி 4, 199-ம் பக்கத் தொடர்ச்சி)

### சண்டேசுர மூர்த்தம்

இம் மூர்த்தம் நம் இந்து சிவாலயங்களில் மூலட்டான மூர்த்தி எழுந்தருளியிருக்கும் கர்ப்பக் கிருகத்துக்கு வடபாரிசத்தில், அதாவது மூலட்டான மூர்த்திக்கு அபிஷேகஞ் செய்யும் திருமஞ்சன ஜலம் வெளிவரும் கோமுகத்திற்கு அருகாக அமைக்கப்பட்டிருக்கும் ஒரு சிறிய கோயிலின்கண் காணப்படுகின்றது. தரிசனார்த்தங் கோயிலுக்கு வரும் ஜனங்களில் பெரும்பான்மையோர் இம்மூர்த்தத்தைச் "செவிட்டுப் பிள்ளையார்" என்றும், அதனால் தான் கையைத் தட்டி ஓசை செய்து அவரை வணங்க வேண்டுமென்றுங் கூறுகிறார்கள். சிலர் 'இவர் ஒரு ரிஷி; ஈசுரனை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருக்கிறார்' என்றுங் கூறுகிறார்கள். இன்னுஞ் சில பாமர ஜனங்கள் நமது சிவாலயங்களில் பிரதிஷ்டை செய்திருக்கும் அறுபத்து மூன்று நாயன்மார்களின் விக்கிரகங்களைப் பார்த்து, அவைகளில் "காரைக்காலம்மையார்" என்னும் விக்கிரகத்தைச் சுட்டிக்காட்டி, "இந்த அம்மையார் அறுபத்து மூன்று பிள்ளைகளைப் பெற்றும் மனஞ் சலிப்படையாமல் இன்னும் பிள்ளைவரம் கேட்கிறார்கள். என்ன ஆசை பாரு இவர்களுக்கு!" என்று கூறக் காதாரக் கேட்டுள்ளேன். என்னே இவர்களின் அறியாமை! மூடபுத்தி!! இதற்குக் காரணம் நம்மவர்களுக்குச் சரியான மதக் கல்வி போதிக்கப்படாமையே. ஆதலின் ஈண்டு இம்மூர்த்தியைப்பற்றி யொருசிறி தாராய்வோம்.

இது இறைவன் கொண்டருளிய அஷ்டாஷ்ட மூர்த்தங்களிலொன்றல்ல. இறைவன் கொண்டருளிய திருமூர்த்தங்கள் வேறு, இது வேறு. இறைவன் தமது அன்பர்களுக்குப் போகானுக்கிரஹஞ் செய்யும் பொருட்டு, விஷ்ணு பதம், பிரமபதம், இந்திர பதம், ருத்திரபதம் என்றிவைபோன்ற சில பதங்களை வகுத்திருக்கின்றனர். அவைகளில் சண்டேசுர பதம் பெற்ற ஒரு பெரியாரின் திவ்ய மூர்த்தமிம்மூர்த்தமாகும். இது எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானாலேயே பொன்றுப் பெரும் பதவியாகிய சண்டேசுர பதத்தை அனுக்கிரஹிக்கப்பட்ட பஞ்சமூர்த்திகளில் ஒருவராய் நாமெல்லோராலும் வைத்து வணங்கப்படும் பெருமையினை வாய்க்கப்பெற்ற மஹானை யுணர்த்தும் திவ்ய சொரூபம். இவர் சதாகாலம் சிவபெருமானை இடைவிடாது தியானம் செய்து கொண்டு சிவார்ச்சனையி லீடுபட்ட மனமுடையவராய்த் திகழ்ந்திருந்தாராதலின் இவரது மூர்த்தம் நிஷ்டையிலிருக்கும் பாவனையாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. தன் தந்தை யென்றும் பாராது சிவாபராத மிழைத்தற்குச் சினந்து அவரைத் தண்டிக்க ஒரு கோல் கொண்டு யத்தனிக்க, அதுவே யொரு மழுவாக, அதனால் தனது தந்தையின் கால்களைச் சேதித்தாராதலின், இம்மூர்த்தத்திற்கு அம் மழுவாயுதம் கையிலமைக்கப்பட்டிருக்கிறது. இம்மூர்த்தத்திற்குப் பெரிய புராணத்தில் "சண்டேசுர நாயனார் புராணம்" என்று ஒரு சரித்திரம் காணப்படுகின்றது. அதில் இவரது ஜீவிய சரிதை நன்கு விவரிக்கப்பட்டுள்ளது. எனினும் இங்கு நாமெல்லோரும் உணரும் பொருட்டு அவரது சரித்திரத்தையும், அவர் இறைவன் பால் செலுத்திய பக்தி வைராக்கிய மனோதிடப் பான்மையையும், பெருமான் அவரன்புக்கிரங்கிச் சண்டேசுர பதமளித்த பெருமையையும் ஒருவாறு சுருக்கிச் சங்கிரகமாகக் கூறுவோமாக.

எந்நாட்டிலும் முன்னுடாய் வைத்தெண்ணப்படுஞ் சோழவள நாட்டிலே, சண்முகப் பெருமானார் சூரசம்மார நிமித்தந் தென்திசை நோக்கிச் செல்லுகையில் சூரபதுமனாதி யரக்கரை வெற்றி கொள்வான் வேண்டிப் பரமபதியாகிய சிவபெருமானைப் பூசித்தருச்சித்த காரணத்தால் "திருச்சேய்ஞலூர்" (சேய் - முருகக் கடவுள்) எனுங் காரணப்பேர் பூண்ட திவ்ய ஸ்தலத்தில், நீதி மார்க்கம் நிறைந்திலங்கும் வேதியர் குலத்தில் காசிப கோத்திரத்திலே ஜனித்த 'எச்சதத்தன்' என்னும் பேர் பூண்ட பெரியார் ஒருவர் இருந்தார். அவர் "பவித்திரை" என்னும் கற்பின் மிக்க மனையாளொருவரை மணந்து இல்லற தர்மத்தை நடாத்தி வந்தனர். அவர் செய்த பூர்வ புண்ணிய முதிர்ச்சியினால் அவ்விருவருக்குஞ் சற்புத்திரராக நமது நாயனார் திருவவதாரஞ் செய்தார்கள். பெற்றோர்கள் அவருக்கு "விசாரசருமர்" என்னும் பிள்ளைத்திருநாமஞ் சூட்டினர். விசாரசருமருக்குத் தமது ஐந்தாவது ஆண்டுத் துவக்கத்திலே பூர்வ ஜன்மாந்திர அறிவுத் தொடர்ச்சியால் சகல வேதாகமபுராணேதிகாசங்களையும் சிவாகமங்களையும் யாவர்பாலும் ஓதா

துணரு மறிவு ஜனித்தது. தமது சிறுவயதிலேயே சகல கலைகளையு முணர்ந்து மிக்க பாண்டித்திய முடையவராயினர். முன்னறி தெய்வங்களாகிய அன்னையும் பிதாவும் அவருக்கு ஏழாம் ஆண்டிலே உபநயனச் சடங்கு செய்து வேதம் ஓதுவிக்கத் தொடங்கினார்கள். ஆசிரியர்கள் வேதங்களை ஓதுவித்தற்கு முன்னமே விசாரசருமர் அவைகளை யுணர்ந்திருந்ததை யறிந்து மிகவும் அதிசயித்தார்கள். ஓதாது வேத முதலிய கலைகளையுணர்ந்த பெருந்தகையார் சிவபெருமானே முழுமுதற் பொருளெனத் துணிந்து, அவர் திருவடியை மறவாச் சிந்தையராயினார்.

நாயனார் ஒரு நாள் வேதத்தியானஞ் செய்யுஞ் சிறுவர்களுடன் அவ்வூரவர்கள் பசுக்கூட்டங்களோடு கூடிப்போகும் பொழுது ஓரீற்றுப் பசு தன்னை மேய்ப்போனாகிய இடையனை முட்டப் போயிற்று. அவன் சிறிதுங் கூசாமல் தன் கையிலிருந்த கோலினால் அதை நையப் புடைத்தான். அதைக் கண்ட விசார சருமர் பதை பதைத்து அவன் அருகே போய்ப் பின்னும் அடியாதபடி யவனைத் தடுத்து, "பசுக்கள் தமது உறுப்புக்களில் தேவர்களையும் முனிவர்களையும் புண்ணிய தீர்த்தங்களையு முடையனவா யிருக்கின்றனவன்றோ? சிவபெருமானுக்குரிய அபிடேக திரவியங்கள் அவைகளளிக்கும் பஞ்சகவ்வியங்களன்றோ? பிறவிப் பிணியை யொழிக்குந் திருநீற்றிற்கு மூலம் அவைகளின் கோமயம் அன்றோ? அவைகள் பரமசிவனூர்தியாகிய இடபதேவர் குலத்தனவன்றோ?" என்று தனக்குள்ளே சிந்தித்து, "பசுக்களை மேய்த்துக் காப்பதைவிடச் சிறந்ததொன்றில்லை. அதுவே சிவபெருமானை வழிபடும் பெருநெறி" என்று உறுதிகொண்டு ஆயனைப் பார்த்து, "இனி இவ்வானிரையை நீ மேய்க்கவேண்டியதில்லை. நானே மேய்க்கப்போகின்றேன்" என்ன, அவன் அஞ்சி இறைஞ்சிப் பணிந்து போய்விட்டான். அன்றுமுதல் விசாரசருமர் தாமே பசுக்களை அவைகட்குரியாரின் அநுமதி பெற்று அவர்கள் சம்மதத்தின் பேரில் மண்ணியாற்றங் கரையிலே புல்லுள்ள விடங்களில் மேய்த்து வந்தனர்.

இப்படி மிகப் பரிவுடன் மேய்த்துவரும் நாளில் பசுக்கள் மிகவும் அழகாகச் செழித்து இரவும் பகலும் மடி சுரந்து பாலை அதிகமாகச் சொரிந்தன. அதுகண்டு பசுக்கட்குரிய பிராமணர்கள் பெரிதும் மகிழ்வெய்தினார்கள். பசுக்கள் தங்கள் கன்றுகளைப் பிரிந்தாலும் சிறிதும் தளராது தங்களைப் பேரன்போடு மேய்த்துவரும் பிரமசாரியார் சற்று நேரம் பிரிவாராயின் தாய்போலுருகி அவர் அருகே போய்க் கனைத்து மடி சுரந்து ஒருவருங் கறவாமல் தாமே பாலைச் சொரியும். அப்பாலைக் கண்ணுற்ற நமது நாயனார் அது சிவபெருமானுக்குத் திருமஞ்சனமாகுந் தகுதி நோக்கிச் சிவபூசை செய்யும் எண்ணத்தை மேற்கொண்டார். உடனே அவருக்குச் சிவார்ச்சனையில் பெரிதும் ஆசையுண்டாக, மண்ணியாற்றங் கரையிலே ஒரு மணற்றிட்டையில் ஆத்திமரத்தின் கீழே மணலினாலே ஒரு சிவலிங்கஞ் செய்து திருமதிலும் கோபுரங்களும் வகுத்து, சிவபெருமானுக்குரிய ஆத்தி முதலிய பத்திரபுட்பங்களைக் கொண்டு சிவார்ச்சனை செய்து, புதிய குடங்களைக் கொண்டுபோய்க் கறவைப் பசுக்களின் மடியைத் தீண்டியளவில் அவைகள் தாமே பாலைச் சொரிய அவற்றைக் கொண்டுபோய்ப் பெருமானுக்கு அபிடேகஞ் செய்தார். சர்வ வியாபியாகிய சங்கரர் அம்மணலிலிருந்து அன்பர் செய்யும் பூஜையை இன்புடன் ஏற்றார். மறையவர் பெருமான் மங்கைபாகன் பூசைக்கு அங்கமாகிய திருமஞ்சன முதலியவற்றுள் கிடையாதனவற்றை மானஸீகமாகப் பாவித்து முறைமைப்படி அர்ச்சித்துச் சிவபூசையை முடிப்பர். இவ்விதமாக நமது பெரியார் நெடுநாள் வழக்கமாகச் சிவார்ச்சனை செய்துவரப் பசுக்களும் பரமன் திருமஞ்சனத்துக்குப் பாலைச் சுரந்து கொடுத்தும் வேதியர்களுக்கு வீட்டில் முன்போல் குறைவில்லாமல் பாலைக் கொடுத்துக்கொண்டு வந்தன.

இங்ஙனம் நிகழ்ந்துகொண்டு வரும் நாளையில் ஒரு தினம் ஒருவன் சேய்ஞலூர்ப் பிள்ளையாரின் செய்கையை விளையாட்டெனக் கருதி உண்மையுணராதவனாய் அவ்வூர் அந்தணர்களுக் கறிவித்தான். அவர்கள் எச்சதத்தனை யழைப்பித்து, "ஆகுதியின் நிமித்தமாகப் பால் கறக்கும் பசு நிரைகளையெல்லாம் உமது குமாரனாகிய விசாரசருமன் உள்ளன்போடு மேய்ப்பவனைப்போல் ஓட்டிக்கொண்டுபோய்ப் பாலைக் கறந்து வீணாக மணலிலே சொரிந்து விளையாடுவதாக எங்களுக்கொருவன் சொன்னான். நீர் உமது குமாரனை கண்டிக்கக் கூடாதா" என்று கேட்டார்கள். அதற்கு எச்சதத்தன் "சிறியவனாகிய எனது புத்திரன் இப்படிச் செய்து வருவதை இதற்குமுன் அறிந்திலேன். அவன் குற்றத்தைப் பொறுக்கவேண்டும். இனி அவன் அங்ஙனஞ் செய்வானாயின் அப்பிழை என்னுடையதாகும். நான் அவனைக் கண்டிக்கிறேன்" என்று குறையிரந்து வணங்கி அவர்கள்பால் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான். மறுநாட்காலையில் விசாரசருமர் பசுக்களை மேய்க்கப் போன பிறகு, அவர் அறியாதபடி உண்மையுணர வேண்டி, அவருக்குப் பின்னே மறைந்து சென்று அம்மணல் மேட்டிலுள்ள குராமரமொன்றில் ஏறி ஒளித்துக்கொண்டு, அங்கே நிகழ்வதைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

நமது நாயனார் வழக்கம்போல் ஸ்நானம் செய்து சிவலிங்கம் முதலியன வமைத்துத் திருப்பள்ளித்தாமஞ் சேகரித்து வைத்துக்கொண்டு, குடத்தை யெடுத்துக்கொண்டு பசுக்களிடஞ் செல்ல, அவைகள் தாமே குடத்திற் பாலைச் சொரிந்தன. அதைக் கொண்டுபோய் வைத்துக்கொண்டு சிவபூசை தொடங்கிச் சிவபெருமானுக்குப் பத்திர புட்பங்கள் சாத்திப் பாற்குடங்களை எடுத்து அபிடேகஞ் செய்தார். அதைக்கண்ட எச்சதத்தன் குராமரத்தினின்றும் இறங்கி விரைவாகப் போய்த் தனது கைத்தண்டால் சிவார்ச்சனை புரிவோரின் முதுகில் நையப்புடைத்து, பலவிதமான கொடுஞ் சொற்களைக் கூறி அவரைத் திட்டினான். பசு காணம் நீங்கப்பெற்ற அப்பெரியாரது மனம் சிவபூசையிலே பதிந்துகிடந்தமையால் அவருக்கு ஒன்றுந் தோன்றவில்லை. எச்சதத்தன் பன்முறையடித்தும் விசாரசருமர் சிறிதும் வருந்தாதவராய் அபிடேகத் திருப்பணியினின்றும் தவறாமல் சித்தத்தைச் சிவன்பாலே யிருத்தி நின்றனர். அப்பெருந்தகையாரது மனம் சிவபெருமான்பால் ஒருமைப்பட்டிருப்பதை யுணராத மருளனாகிய எச்சதத்தன் பாற்குடங்களைக் காலால் இடறிச் சிந்தினான். அதனைக் கண்ணுற்ற விசாரசருமர், அதைச் செய்தவன் தந்தையென்றறிந்தும், அவன் செய்தது சிவாபராதமாகையால் அவன் கால்களைத் துணித்துப் பாசத்தைக் களையவேண்டுமெனக் கருதி தமக்கு முன் கிடந்த ஒரு கோலை எடுக்க, அது மழுவாயிற்று. அதனால் அவனது கால்களை வெட்டியெறிந்து சிவபூசைச் சேடத்தையு முடித்தனர். அவரது பத்திவைராக்கிய அன்பின் பெருக்கையைக் கண்டு வியந்து சிவபெருமான் உமாதேவியாருடன் இடபவாகனரூடராய்க் காட்சி தந்தருளினர். விசாரத்தை யொழித்த விசாரசருமர் விமலனைக் கண்டுவணங்கித் துதித்து எல்லையில்லா ஆனந்தக் கடல் வெள்ளத் தாழ்ந்தனர். எல்லாம் வல்ல இறைவர் நமது நாயனாரைத் தமது திருக்கரங்களாலெடுத்துப் புல்லித் திருக்கண்ணோக்கஞ் செய்து, "நீ நம்பொருட்டு உன்னை ஈன்ற தந்தையைத் தடிந்தாய்; இனி யாமே உனக்குரிய தந்தையாயினோம்" என்று திருவாய் மலர்ந்து அவருடலைத் தைவந்து உச்சிமோந்து மகிழ்ந்தருளினார். சிவபெருமான் திருக்கரம் தீண்டப்பெற்ற விசாரசருமரின் திருமேனி சிவமயமாகிப் பேரொளியோடு விளங்கியது. இறைவன் நமது சேய்ஞலூர்ப் பிள்ளையாரை நோக்கி, "நமது திருத்தொண்டர்களுக்கெல்லாம் உன்னைத் தலைவனாக்கி நாம் உண்ட அமுதும் பரிவட்டமும் சூடுவனவாம் மாலை முதலியனவும் உனக்கே கிடைக்கும்படி சண்டேசுரபதத்தைத் தந்தருளினோம்" என்று கூறித் தமது சடையிலுள்ள கொன்றை மாலையை எடுத்து அவருக்குச் சூட்டியருளினார். நமது நாயனார் எல்லா உலகும் ஆர்ப்பவும், எங்கும் மலர்மாரிகள் பொழியவும், கணநாதர்கள் பாடியாடி ஆனந்த மெய்தவும், வேதங்கள் துதிசெய்யவும், பலவித வாத்தியங்கள் முழங்கவும், தேவதுந்துபியொலிக்கவும், சைவம் ஓங்கவும், தேவதேவனைத் தொழுது, அவர் அருள்செய்த சண்டேசுரபதத்தையடைந்தார். எச்சதத்தன் சிவாபராதஞ் செய்த பாபியாயிருந்தும் சண்டேசப் பெருமானால் தண்டிக்கப்பட்டமையினால் பாசம் நீங்கப்பெற்றுச் சுற்றத்துடன் சிவலோகமெய்தினான். சண்டேசுர நாயனாரும் பஞ்சமூர்த்தியிலொருவராகும் பெரும் பேற்றையுமடைந்தனர். இப்பெரியாரின் திருவுருமூர்த்தமே "சண்டேசர் மூர்த்தம்" எனப்படும். இவர் பெருமானுக்கு இடைவிடாது பிரியாமலிருக்கும் அணுக்கத் தொண்டராதலாலும் இறைவன் அருளியவாக்கின்படி நிவேதனமாகும் அமுதும் பரிவட்டமும் புஷ்பமாலையும் பின் இவருக்கே உரித்து என்னும் மரபுபற்றி, இம்மூர்த்தம் சிவபெருமான் ஏற்றுக்கொண்ட திருவமுதபிஷேக திருமஞ்சனநீர்கள் வெளிவரும் கோமுகத்தினருகில் இவருக்கென வமைக்கப்பட்ட சிறுகோயிலின்கண் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இவர் மனம் எஞ்ஞான்றும் சிவசிந்தனையிலும் சிவார்ச்சனையிலும் பதிந்து கிடக்குஞ் செயலுடைத் தாதலால், இவரை வணங்கும்போது இவரது கிருபாநோக்கம் நம்மீதும் பொருந்துமாறு சிறிது ஓசைசெய்து பின்வணங்குமாறு பெரியோர்கள் கட்டளை யிட்டிருக்கின்றனர். இவரை உள்ளன்போடு வணங்கி வழிபடுவோர்கள் இம்மை நலனையும் மறுமை இன்பத்தையும் சிவபெருமானின் திருவருள் நோக்கத்தையும் பெறுவார்களென்பது திண்ணம்: சர்வாபீஷ்டமும் சித்திக்கும். இப்பெரியாருக் கருள்செய்யத் தோன்றிய இறைவன் திருமூர்த்தம் "சண்டேசுராநுக்கிரக மூர்த்தம்" என்று வழங்கப் பெறுகின்றது. சுபம்.




# மகா நாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள், தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள் 40-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணா 8 தபாற் செலவு அணா 3

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ், கீழ்ப்பாக்கம், சென்னை.




## இந்திய வியாபார நிலை—1929-30ம் வருஷத்திய அறிக்கை

[6—9—30 திராவிடனில் கண்டது]

1929-30-ம் வருஷத்திய வியாபார சம்பந்தமான புள்ளிவிவரங்கள் வெளியாகியிருக்கின்றன. இந்த வருஷத்தில் இறக்குமதியை விட 52,82 லட்சத்திற்கு ஏற்றுமதி அதிகமாயிருக்கிறது. இதற்கு முந்திய வருஷத்திய புள்ளி விவரங்களுடன் நடப்பு வருஷத்தின் புள்ளிவிவரங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், நாடு வியாபாரத்துறையில் முன்னேறுவதாகத் தெரிகிறது. இதன் உண்மையைக் குறித்து ஆராய்வோம். உணவு, குடி, புகையிலை வகையாவில் 40,26,02 ஆயிரத்திற்கு இறக்கு மதியும், 67,56, 66 ஆயிரத்திற்கு ஏற்றுமதியுமாகிறது. எனவே, இவ்வரையில் இறக்குமதியைவிட 27,29,44 ஆயிரம் ரூபாய்க்கு அதிக ஏற்றுமதியாகி யிருக்கிறது. விளைபொருள்கள் 23,24,82 ஆயிரத்திற்கு இறக்குமதியும், 156,43,92 ஆயிரத்திற்கு ஏற்றுமதியுமாகிறது. இதில் இறக்குமதியாகிறதைவிட 133,19,10 ஆயிரத்திற்கு அதிகமாக ஏற்றுமதியாகிறது. செய்பொருள்கள் 172,84,72 ஆயிரத்திற்கு இறக்குமதியும், 84,08,12 ஆயிரத்திற்கு ஏற்றுமதியுமாகிறது. இதில் ஏற்றுமதியைவிட 88,76,60ஆயிரத்திற்கு அதிகமாக இறக்குமதியாகிறது. கால் நடைகள் 32,42 ஆயிரத்திற்கு இறக்குமதியும், 36,83 ஆயிரத்திற்கு ஏற்றுமதியுமாகிறது. இதில் இறக்குமதியாவதைவிட 4,41 ஆயிரத்திற்கு ஏற்றுமதியுமாகிறது. விவரங்காணாத தபால் வஸ்துக்கள் 4,08,01 ஆயிரத்திற்கு இறக்குமதியும், 2,34,41 ஆயிரத்திற்கு ஏற்றுமதியுமாகின்றன. இதில் ஏற்றுமதியை விட 1,73,50 ஆயிரத்திற்கு அதிகமாக இறக்குமதியாகிறது. மீண்டும் ஏற்றுமதியாகும் சாமான்கள் 7,42,75 ஆயிரத்திற்காகும். சர்க்கார் ரயில்வே முதலியவற்றிற்காக இறக்குமதியாகும் சாமானங்களின் விலை 1,86,99 ஆயிரம். எனவே, மொத்த வியாபாரத்தில் 238,89,00 ஆயிரத்திற்கு ஏற்றுமதியும் 318,22,69 ஆயிரத்திற்கு ஏற்றுமதியும் ஆகியிருக்கிறது. எனவே இறக்குமதியைவிட 79,33,69 ஆயிரத்திற்கு ஏற்றுமதி அதிகமாயிருக்கிறதெனக் கண்டோம். நிற்க, சவரன் இறக்குமதி வகையில் 26,20 லட்சம் வந்திருக்கிறது. ஆக மொத்த வியாபாரத்தில் இறக்குமதியைவிட 53,13,69 ஆயிரத்திற்கு அதிகமாக ஏற்றுமதியாகியிருக்கிறது.

விளை பொருள்களில் இறக்குமதியைவிட ஏற்றுமதி அதிகமாகவும், செய்பொருள்களில் ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாகவுமிருக்கிறது. மேலும் தபால் மூலம் ஏற்றுமதியானதைவிட இறக்குமதியானது அதிகமாயிருக்கிறது. விளைபொருள்கள் பெரும்பாலு உணவுப்பொருள்கள். விளைபொருட்களில் சர்க்கரை 15·76 லட்சத்திற்கும், சில்லரை உணவுப்பொருள்கள் 5·64 லட்சத்திற்கும், தானியவகைகளும் மாவும் 5.42 லட்சத்திற்கும், ஏல வகையில் 3·25 லட்சத்திற்கும், சாராய வகையில் 3·11 லட்சத்திற்கும், புகையிலை 2·70 லட்சத்திற்கும், பழம் தற்காரிவகையில் 1·85-லட்சத்திற்கும், உப்பு 1·30-லட்சத்திற்கும், மற்றும் சில்லரை சாமான்களும் இறக்குமதியாகின்றன. தானியமா வகையறுவில் ஏற்றுமதியாகும் 3479-லட்சத்தில் அரிசமட்டும் 31·51 லட்சத்திற்கும். கருந்தேயிலை 26·00-லட்சத்திற்கும், உணவுப்பொருள்கள் 1·96 லட்சத்திற்கும், புகையிலை 1·60 லட்சத்திற்கும் காப்பிக்கொட்டை 1·45 லட்சத்திற்கும் ஏற்றுமதியாகின்றன.

விளை பொருள்களில் எண்ணெய் 11·63 லட்சத்திற்கும், பருத்திவகையறு 3,42 லட்சத்திற்கும், சுரங்கப் பொருள்கள் 1·61 லட்சத்திற்கும், பட்டு 1·23 லட்சத்திற்கும், கொட்டை முத்து வகையறு 92·99 ஆயிரத்திற்கும், கம்பளி 51·70 ஆயிரத்திற்கும், சுரங்கப் பொருள்கள் 23·61 ஆயிரத்திற்கும் இறக்குமதியாகின்றன. பருத்தி 65·60 லட்சத்திற்கும், எண்ணெய் வித்துக்கள் 27·17 லட்சத்திற்கும், பதனிட்டதோல் 2·70 லட்சத்திற்கும், தோல் 5 18 லட்சத்திற்கும், கம்பளி 4 42 லட்சத்திற்கும், சுரங்கவஸ்துக்கள் 3·57 லட்சத்திற்கும், புண்ணாக்கு 3·11 லட்சத்திற்கும், ரப்பர் 1·78 லட்சத்திற்கும், கால்நடை உணவுப்பொருள்கள் 1·18 லட்சத்திற்கும், உலோக சம்பந்தமற்ற சுரங்கப் பொருள்கள் 1·06 லட்சத்திற்கும், மரம் வகையறு 1.78 லட்சத்திற்கும் ஏற்றுமதியாகின்றன,

இப்புள்ளி விவரங்களிலிருந்து நம்நாட்டுப் பொருள்களுள் இன்றியமையாத உணவுப் பொருள்களைகளையும் சேதப் பொருள்களையும் அன்னிய நாட்டினர் குறிப்பாக பிரிட்டானியர் கொண்டுபோய் இவற்றைக்கொண்டு உண்டு, தயார்செய்த பொருள்களை ஒன்றிற்குப் பத்தென விலையுயர்த்தி மீண்டும் வறுமைப்பிணியினால் வாடிவதங்கிக் கிடக்கும் நம் மீதே சுமத்துகிறார்கள். சொற்பவிலைக்கு இந்தியாவிலிருந்து வாங்கிக்கொண்டுபோய் உண்டு உடுத்துக் களித்துத் தயாரித்த பொருள்களை ஏராளமான லாபத்திற்கு மீண்டும் நமக்கு விற்கும் இவ்வியாபரம் சென்ற 200-வருஷங்களாக நடைபெற்று வந்திருக்கிறது. பொது ஜனங்களின் எளிய நிலைமைக்குக் காரணம் வியாபாரம் தான். இங்கிலாந்திலுள்ள கைத்தொழில் சாலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கவேண்டியே பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவை ஆளுகிறார்கள். இந்திய விளைபொருள்களைக் கொண்டு அத்தொழிற் சாலைகளில் தயாராகும் செய்பொருள்களை விற்பதற்கு இந்தியாவும் அவர்களுக்குத் தேவையாயிருக்கிறது.

‘எஷியாடிக் குவார்ட்டர்லி ரெவ்யூ’ என்னும் பத்திரிகையின் 1910-ம் வருஷம் ஜூலை மாதம் வெளிவந்த வெளியீட்டில் ‘‘பண்டைய இந்தியச் சிறப்பிற்குக் காரணமென்னவெனில், அக்காலத்தில் தாங்கள் உண்டு உடுத்திக் கழித்த கழிவையே பிறநாடுகளுக்கு அனுப்பி வந்தார்கள். அன்றியும் துணி தான் ஏற்றுமதி செய்து வந்தார்கள். தற்போது என்னென்ன ஏற்றுமதியாகின்றன! பருத்தி, உப்பு, தோல், பதனிட்ட தோல், எண்ணெய் விதைகள், அரிசி முதலியன ஏற்றுமதியாகிறன்றன.

‘ஆங்கில கைத்தொழில் வியாபாரமுன்னேற்றம்’ என்னும் தலைப்பில் திரு· கன்னிங்ஹாம் எழுதுவதாவது: குடியேற்ற நாடுகள் தம் தேவைகளுக்கு இங்கிலாந்தை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் நிலைமையில் அவைகளை வைத்திருக்கவேண்டும். ஆயினும் அவைகளுடைய தேவைகளை நாம் குறைத்துவிடக் கூடாது. அவர்களுடைய வியாபாரம் ஓங்கிவிடாதபடியும் தாழ்ந்து போகாதபடியும் கவனித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்கள் சாமான்கள் செய்யவேண்டு மென்னும் எண்ணத்தையே கொள்ள மாட்டார்கள்.’ இக்கொள்கையையே இந்தியா சம்மந்தமாகவும் கொண்டார்களா என்று நாம் கூறுவதற்கில்லை, எனினும், சென்ற நூறு வருஷங்களுக்கதிகமாக பிரிட்டிஷார் இந்தியாவில் வர்த்தகம் செய்யும் பான்மையிலிருந்து இதே கொள்கையுடனேயே அவர்கள் வர்த்தகம் நடத்துவந்திருக்கின்றதெனத் தெரிகிறது.

### இறக்குமதியாகும் செய் போருள்களின் விவரம் பின்வருமாறு :

பருத்திநூலும் துணியும் 59·48 லட்சங்கள், இயந்திரங்கள் 19 35 லட்சம், இரும்பு 17.25 லட்சம், மோட்டார்கார் வகையறு 10.85 லட்சம், கத்திரி இரும்புச் சாமான்கள் 7·50 லட்சம், மற்றவகை நூல்களும்5. துணிகளும் 72 லட்சம், மருந்து வகைகள் 5·50 லட்சம், காகிதம் வகையறு 4.77 லட்சம், சாயம் 4,00லட்சம். மெழுகு 3.18 லட்சம், பட்டு 8·35 லட்சம், ரப்பர்சாமான்கள் 3.36 லட்சம், கண்ணாடி, மண்பாண்டங்கள் வகையறு 3.24 லட்சம், தோல் சாமானங்கள் 2.59 லட்சம்.

ஏற்றுமதியாகும் செய்பொருள்களின் விவரம் பின்வருமாறு:—ஏற்றுமதியாகும் 84·69 லட்சரூபாய் பெறுமான செய்பொருட்களில் ஐந்தில் மூன்று பங்கு அதாவது 5.93 லட்ச ரூபாய் பெறுமான சணல் ஏற்றுமதியாகிறது. பதனிட்ட தோலும் பதனிடாத தோலும் 8.16 லட்சம், பருத்தி நூலும் துணியும் 7.19 லட்சம், இரும்பல்லாத மற்ற உலோகங்களினால் செய்யப்பட்ட சமானங்கள் 4.14 லட்சம், இரும்பும் எஃகும் 2·62 லட்சம், மருந்து வகையறு 2·05 லட்சம், சாயம் 1.17 லட்சம், கம்பளி நூலும் துணியும் 91 ஆயிரம்.

### நாணய மாற்றம்

ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு ஏற்றுமதியாகும் சரக்கின் விலையை ஏற்றுமதியாகும் நாட்டின் நாணயத்திலோ இறக்குமதியாகும் நாட்டின் நாணயத்திலோ கூறவேண்டும். எனவே இரு நாடுகளின் நாணயங்களும் மாறுபட்டவையாகையால், இவற்றிற்குள் ஒருவித சம்பந்தத்தை உண்டாக்க ஏற்பட்டதே நாணய மாற்று விகிதம். உதாரணமாக, ஒரு ரூபாய் என்னும் இந்திய நாணயத்திற்கு ஈடாக $1\frac{1}{2}$-ஷில்லிங் என்னும் ஆங்கில நாணயத்தை நாணயமாற்று விகிதப்படி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இது நாட்டின் வியாபார அளவுக்குத் தக்கபடி மாறிக்கொண்டு வந்தது. தற்போது ஷை விகிதத்தையே இந்திய சர்க்கார் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இதை, இந்தியர்களனைவரும், எல்லா வியாபார சங்கங்களும், பொருளாதார நிபுணர்களும் ஆட்சேபித்துங்கூட இதே விகிதப்படியே வியாபாரம் நடக்கும்படி சர்க்கார் செய்திருக்கின்றனர். இந்த விகிதப்படி இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வோருக்குத் தாங்கள் இந்திய நாணயத்தில் கொடுக்கவேண்டிய தொகையில் அவர்களுக்கு 100-க்கு $12\frac{1}{2}$ லாபம் ஏற்படுகிறது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் எளிய தொழிலாளர்களே. இக்கொள்ளையை முன்னிட்டே ஏற்றுமதியாகும் சாமான்களுக்கு விலை லண்டன் நாணயத்திலோ நியூயார்க் நாணயத்திலோ கூறப்படுகிறது.

சென்ற 2 மாதக் காலமாக ஏற்றுமதி இறக்குமதி மிகக் குறைவு. இதனால் பெருநஷ்டம் ஏற்படுவது திண்ணம். எனினும் இதனால்தான் நம் நாட்டிற்கு விமோசனம் ஏற்படப்போகிறது. பல வகை மறியல் காரணமாக இந்தியப் பொருள் நிலைமைச் சுதந்திரம் நமக்குக் கிடைக்கத்தான் போகிறது. ஜனங்கள் நன்மையைக் கோரும் ஆட்சி முறையின் ஆதரவைப்பெற்று எல்லா தேசபக்தர்களும் முயற்சிக்கவேண்டும்.

மேற்கூறிய புள்ளி விவரங்களிலிருந்து வியாபாரத் தொகைகளை நேர் செய்வது என்பது இந்தியாவைப் பகற்கொள்ளை யாடுவது என வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது. அரசியல் வாதிகளும் கைத்தொழிற்காரர்களும் பொருள் நூல்நிபுணர்களும் சென்ற 50 வருஷங்களாக இக்கொள்ளையைக்கண்டித்துப் போட்ட கூக்குரல் கொஞ்சமல்ல. இவற்றையெல்லாம் சர்க்கார் பொருட்படுத்தாதிருந்து வந்தனர். தற்போது ஏற்பட்டுவரும் பெரும்புயலில் மாறுபட்ட அபிப்பிராயங்களுள்ள இந்தியர் பலரும் கூடுகிறார்கள். இவர்களுக்கு நாள் வளர்ந்து கொண்டுவருகிறது. இந்தியஉணர்ச்சிக்கு மாறுபட்ட கொள்கையுடையவர்களுக்கு எதிர்ப்புகள் வெகுவாயிருக்கின்றன. எதேச்சைச் சூரியோதயத்தின் அறிகுறிகள் தோன்றுகின்றன. அப்போது நாட்டைநிமிடந்தோறும் சுரண்டி வறுமையுறச் செய்யும் தற்போதைய பொருளாதார முறை மாறி நேர்மையான முறை ஏற்படும்.

---

## இந்திய விவசாயிகள் பொருள் நிலை.

(திராவிடனில் கண்டது)

விவசாயமும் மற்ற கைத்தொழில்களைப் போலவே ஒரு கைத்தொழில் என்னும் உண்மையை விவசாயிகள் உணரவில்லை என்று கூறலாம். அமெரிக்கா இங்கிலாந்து, டென்மார்க் முதலிய தேசங்களில், இயந்திரங்களைக்கொண்டு விவசாயம் நடைபெறுகிறது. இயந்திரங்களைக் கொண்டு விவசாயம் நடைபெறும் வயல்கள் தொழிற்சாலைகளுக்குச் சமானமானவை. குறைந்த முதலைக் கொண்டு நிறைந்த பொருள் பெறுவதே இவ்விவசாயத்தின் தத்துவமாகும். ஆனால் இந்திய விவசாயிகளோ தம் பழைய கலப்பையையும் எருதுகளையும் விடமாட்டார்கள். ஒரு சிறு மாறுதலைக்கூட பழக்கத்திற்கு விரோதமெனக் கூக்குரலிடுவார்கள். கண்டு முதலான பிறகு தனக்கென என்ன இருக்கிறதென்று விவசாயி கணக்குப் பார்த்தால் மிகக் கொஞ்சமே மீதியாகிறதுண்டு. "உழுகிறவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது" என்னும் பழமொழியைக் கம்பீரமாகச் சொல்லித் தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்ளுவார்கள். விவசாயிகளைப்பார்த்து 'உங்கள் நிலத்தில் என்ன இவ்வருஷ அறுவடையில் மிகுதியானது?' எனக் கேட்டால், 'எனக்குத் தெரியவில்லை. நான் கணக்கு வைக்கிற வழக்கமில்லை'எனக்கூறி திருப்தியடைகின்றனர். சில ஜில்லாக்களிலுள்ள விவசாயிகளின் நிலைமையைப் பரிசீலனைசெய்ததில் பெரும்பாலோர் மிகச் சிறிய நிலத்தை வைத்துக்கொண்டு நாளுக்குநாள் நலிந்து போகிறார்கள் எனத் தெரிகிறது. இவர்கள் கூலிவேலை செய்தால் இவர்களுக்கு அதிக கூலி கிடைக்கும். கொஞ்ச நிலமுள்ளவர்களுக்குச் செலவதிகம். அதிக நிலமுள்ளவர்களுக்குச் சராசரி செலவு குறையும். உதாரணமாக, ஒரு கலப்பை இரண்டு எருதுகளுக்குப் போதுமான வேலையில்லாதபோது அவற்றை வைத்துத் தீனி போடுவது வீணல்லவா? ஒரு ஜதை எருதுகளிருந்தால் அவற்றிற்குத் தக்கபடித் தீனிபோட்டு அவை இளைத்துப்போகாமல் காப்பாற்றவேண்டும். கொஞ்ச நிலமுள்ளவர்கள் தம் எருதுகளுக்குப் போதுமான உணவளிக்கவும் முடியாது. இளைத்துப் போகும்படி விட்டுவிடுகிறார்கள். எனவே சில மாதங்களில் அவை இறந்து போகின்றன. ஏழைவிவசாயிக்கு எத்தனை நஷ்டம்?

விவசாயிகளுக்குச் சராசரி தலைக்கு 6 ஏக்கர் நிலமிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். விவசாயிகளின் பொருள் நிலைமையையும் திறமைக்குறைவையும் கருதுகிறபோது இது போதாதுதான். அன்றியும் இந்நிலத்தின் வளம், இந்நிலத்தில் விளையும் பயிர், இந்நிலத்தை உழவு செய்முறை இம்மூன்றையும் கருதவேண்டியிருக்கிறது. நூற்றிற்கு 35 பேர்களுக்குத்தான் 6 ஏக்கர் பூமியிருக்கிறது. நூற்றிற்கு 40 பேருக்கு மேலே 3 ஏக்கர்களுக்குக் குறைவுள்ள பூமியுடையவர்களாகவே யிருக்கிறார்கள். அநேக இடங்களில் ஒரு ஏக்கருக்கு குறைந்த பூமியுள்ளவர்கள் பலரிருக்கின்றனர். இவ்வாறு மிகக்கொஞ்ச நிலமுள்ளவர்களுக்கு விவசாயத்தொழிலே கூடாது. அது அவர்களைப் பாழாக்கிவிடும். கீழ்க்கண்ட அட்டவணை இவ்வுண்மையை விளக்கும்:—

| நிலபரப்பு | ஏக்கர் 15 | 9 | 3 |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| கால்நடை | 12-6-0 | 1·9-0-0 | 23-0-0 |
| ஆயுதங்கள் | 4-8-0 | 7-5-0 | 9-2 0 |
| தச்சுகூலி | 13-4-0 | 16-8 0 | 18-0-0 |
| எரு | 5-0-0 | 3-6-● | 1-8-0 |

உழவிற்கேற்றபடி கலப்பையும், எருதும் வைத்துக்கொள்ள வேண்டும். சிறு நிலமுள்ளவர்கள் எருதுகளை வைத்துக்கொள்ளுதல் கூடாத காரியம். ஏனெனில் வரக்கூடியவருமானம் எருதுவின் உணவிற்கே போதாமற் போகலாம். அநேக குடியானவர்கள் வைத்திருக்கும் எருதுகள் யமலோகத்தை விரைவில் என்று அடைவோம் என வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. இம்மாதிரி 10 எருதுகளை வைத்துக் கொண்டிருப்பதைவிட நல்ல எருது ஒரு ஜதை யிருந்தாலும் போதும். இதனால் உணவுப் பொருட்செலவு சுருங்குவது மட்டுமன்றி வேலையும் சுறுசுறுப்பாயும் ஊக்கமாகவும் நடைபெறும்.

உழவுமாடுகளுக்குப் போதுமான வேலையில்லை என்னும் உண்மை அநேக குடியானவர்களுக்குத் தெரியாது. அநேகக் குடியானவர்கள் வீடுகளில் அநேக எருதுகள் எவ்வித வேலையுமின்றிவீணே உறைகின்றன. இவற்றால் ஏற்படும் நஷ்டம் இன்னதென அவர்கள் ஏன் உணருவதில்லையோ தெரியவில்லை.

இவ்வாறே இவர்கள் உபயோகிக்கும் ஆயுதங்களிலும் மிகச் செட்டு செய்வதாகக் கூறுகிறார்கள். உண்மை அதுவல்ல. நனைந்து சுமக்கிற்ற கொள்கையையே இது ஒக்கும். எந்த ஆயுதஞ் செய்தாலும் வாங்கினாலும் சொற்பவிலையிலோ செலவிலோ தயார் செய்கிறார்கள். இவர்கள் செலவு செய்த பொருளுக்கேற்ற ஆயுதந்தான் கிடைக்கும். இவ்வாறு வாங்கும் சாமான்கள் சீக்கிரத்தில் பழுதுபட்டோ ஒடிந்தோ போகின்றன. எனவே மீண்டும் வேறொன்று வாங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. இப்போதேனும் இவர்கள் தம் குற்றத்தை உணருவதில்லை. மீண்டும் சொற்பவிலையிலேயே ஆயுதத்தை வாங்குவார்கள். அதுவும் சீக்கிரம் பழுதுபட்டோ முறிந்தோபோகும். இவ்வாறு பன்முறை வாங்குவதைவிட நல்ல ஆயுதமாக ஒரு முறை வாங்கினால் அது வெகு நாட்களுக்கு உதவுவதுமின்றி மற்றொரு ஆயுதம் வாங்கவேண்டுமேயென்னும் கவலை அடிக்கடி ஏற்படாதிருக்கும்.

இவ்வாறே ஒரு சிறு பண்ணைக்கு அநேக ஆட்களை வைத்துக் கொள்ளுகிறார்கள். இந்தப் பண்ணையாட்களுக்குச் சம்பளமும் மிகக் கொஞ்சம். வருஷத்தில் சில மாதங்களில்தான் வேலை. மற்றமாதங்களில் எவ்வித வேலையுமின்றி வீணே காலம் கழிக்கின்றனர். மேலும் நிலங்களை உரப்படுத்துவதில் தம் கவனத்தைச் செலுத்துவதில்லை. நிலங்கள் எத்தனை மாசூலுக்குத்தான் தாங்கும்? ஒவ்வொரு மாசூலுக்கும், தகுந்தபடி உரங்கொடுத்தாலல்லாது கண்டு முதல் குறையத்தான் செய்யும்.

ஆகவே விவசாயம் செவ்வையாகச் செய்வதற்கு முன் தன் நிலத்திற்கு வேண்டியது இத்தனை உழவு என்றும், இத்தனை ஆயுதங்களென்றும், இத்தனை உரம் என்றும், இத்தனை பண்ணையாளென்றும் நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். ஒரு வியாபாரி தன் வியாபாரத்திற்குத் தக்கவாறு எவ்விதம் கடைச்செலவு சிப்பந்திச் செலவுகளைத் திட்டமிட்டுரோ அவ்வாறே விவசாயியும் தன்வரவு செலவுக்கொள்ளுகைகளைத் திட்டமிட்டு எக்காரியத்தையும் செய்ய முற்படவேண்டும்.

---


# மகம்மேரு தைலம்.



கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகளுக்கெல்லாம் இத்தத்தைலமானது மிகவும் கைகண்டது. சிரசைப்பற்றிய வாதநீர்சாலை நீர் மேகநீர் பித்தசுரத்தைக் கண்டித்துநேத்திரத்தில் பித்தநீராவது, மேகநீராவது, கபாலத்தைப்பற்றியிருக்குமாகில் தலைமுழுதும்நமைச்சல், ஊரல், எரிச்சல், தலைமயிர் உதிரல், தலையில் சுண்டுகள், தலையில் ரணங்கள் இப்பேர்க்கொத்த கபால ரோகங்களை கைக்கு மெய்யாய் கண்டிப்பதினால் மகம்மேரு தைலமென்று பேர் வைக்கப்பட்டது. மேலும் மேக வெட்டையினாலாவது பித்தச் சூட்டினாலாவது உதிரம் கெட்டுப்போய் தேகமுழுதும் ஊரல், நமைச்சல், சொரி, சிரங்கு, அழுக்குத்தேமல், தேகவரட்சி, தேகவெளுப்பு கண்களில் முகத்தில் இரத்தமில்லாமல் வெளுத்துப்போதல் இப்பேர்க்கொத்த வரட்சிகளெல்லாம் தணித்து நல்ல இரத்த ஓட்டமுண்டாக்கும்.

இந்த தைலத்தை நாலுநாளைக்கொரு முறை அதிகாலையில் தலைமுழுகவேண்டியது. அன்றையதினம் பகல் நித்திரையும் தயிர் மோர் குளுமையான பதார்த்தம் இதுகள் மட்டும் ஆகாது. மற்றபடி வேறே யாதொரு பத்தியமும் கிடையாது.

ஆழாக்கு தைலம் புட்டி ரூ. 1 8 0

---

## விஷ ஹரி,

தேள், பாம்பு, இதர விஷ ஜந்துக்களின்
கடியின் விஷ வேதனையை
உடனே நீக்கும்.

ஆயிரக்கணக்கான ஜனங்களின் உயிர்களைப் பல கிராமாந்திரங்களிலும் வயல்களிலும் காப்பாற்றிப் பிரசித்தியடைந்து இருக்கிறது. ஒரு புட்டி உம்மிடமிருந்தால் சமயத்தில் ஒருயிரைக் காப்பாற்றலாமென்று உண்மையாய் நம்புங்கள்

விலை புட்டி 1-க்கு ரூ. 1 0 0
புட்டி 3-க்கு ரூ. 2 8 0

ஆனந்தா வைத்திய சாலை,
தபாற் பெட்டி நெ. 288,
சென்னை.

## சீர்திருத்தப் பகுதி

# விவாத தோஷம்

[திரு. S. பாக்கியநாத முதலியார் அவர்கள், திருநெல்வேலி]

இந்த விவாத தோஷம் என்பது சகல ஜாதிக்காரர்களையும் பிடித்திருந்த போதிலும், அவர்களையெல்லாம் குறித்து நாம் பேசாமல் நமது செங்குந்த மரபினர் சம்பந்தப்பட்ட மட்டில் மாத்திரம் இப்போது சொல்லப்போகிறேன். நமது 'செங்குந்த மித்திரன்' ஜெனனமான காலத்திலிருந்து இதுவரையும் நமது சமூகம் முன்னேற்ற மடையவேண்டிய விஷயமாய் உயர்தரக் கல்வி, பெண் கல்வி, கைத்தொழிலில் நூதனமுறை, கூட்டுறவு வர்த்தகம், ஒற்றுமை மணம் முதலிய எத்தனையோவித சீர்திருத்தமான போதனைகள் நமது மித்திரனில் பிரசுரமாயிருக்கின்றன. அதோடு நம்மவர்கள் ஒரு அற்ப காரியத்துக்கும் சிவில் கிரிமினல் முதலிய கோர்ட்டுகளுக்குப் போய் அனுவசியமாய்ப் பணங்களைச் செலவு செய்து அதன் மூலமாய் கடன்பட்டுத் தரித்திரதசை யடைந்து வருவதையும் சீர்திருத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த 'விவாத தோஷம்' என்னும் வியாசத்தை எழுதலானேன்.

1. கோர்ட்டு விவகாரங்களில் போய் ஜெயமடைவதினால் தகுந்த கீர்த்தியும், சிறந்த புகழ்ச்சியும், மிகுந்த பெருமையும் கிடைக்குமென்பது சிலருடைய கொள்கையாயிருக்கிறது. அவ்வாறு கோர்ட்டு வியாச்சியங்களில் போய் ஜெயமடைவதினால் ஏதாவது மேன்மையும், லாபமும், புகழ்ச்சியும், கிடைக்குமென்று கிஞ்சித்தும் நினைக்கவேண்டாம். அப்படிப் போவதினால் சிறுமையும், நஷ்டமும், இகழ்ச்சியுந்தான் கிடைக்குமென்பதை நாம் ஒவ்வொருவரும் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

2 நம் தேசத்திலுள்ள பூர்வ ஞானிகளில் அநேகர் தாங்கள் அடைந்த துன்பங்களையே ஆதாரமாகக் கொண்டு நூல்கள் எழுதியிருக்கிறார்கள். அப்படியே கோர்ட்டு வியாச்சியங்களின் மூலமாய் நான் அடைந்த துன்பத்தின் அனுபவத்தையே வைத்து இந்த வியாசம் எழுதியிருக்கிறேன். நான் 1898-ம் வருஷம் முதல் சில காலம் வக்கீல் குமாஸ்தாவாயிருந்து கோர்ட்டு கச்சேரிகளில் பழகி அநேக வியாச்சியங்களில் துணையாக நின்று அதன் மூலமாய்க் கஷ்டமும் சிரமமும் அடைந்திருக்கிறேன். கோர்ட்டு வியாச்சியங்களில் போய் அது நமது பக்கம் ஜெயமடைந்த போதிலும் அது இறுதியில் ஏமாறுதலாகவே முடியும். கோர்ட்டு வியாச்சியங்களுக்குப் போனவர்களில் ஒருவராவது சிலாக்கியம் அடைந்ததாக என்னுடைய அனுபவத்தில் நான் காணவில்லை. நமக்குள் செல்வம் நிறைந்த சில குடும்பங்களில் ஒன்றுக்கொன்று பொறுமை யில்லாமல் சொத்துக்களைப் பாகம் செய்வதற்காகக் கோர்ட்டுக்குப்போய் அனுவசியமாய்ப் பணங்களைச் செலவு செய்து அதன் மூலமாய்க் கடன் அதிகப்பட்டுக் கடைசியாய் இருதிறத்தாரும் சொத்துக்களைக் கிரயம் செய்யும்படியான இடுக்கண்ணடைந்து அவர்கள் கேவலமான நிலைக்கு வந்துவிட்டார்கள்.

3. மேலும் சில வியாச்சியாயங்கள் உண்மைக்கு மாறாகவே முடிவடைந்திருக்கின்றன. ஏனெனில், வியாச்சியத்துக்குப் போகிற கட்சிக்காரர்களனைவரும் பொய்யையே உறைவிடமாகக் கொண்டு விவாதிப்பதால், அதன் உண்மையைக் கண்டறிவது அதிகாரிகளுக்கு மிகுந்த கஷ்டமாகும். தஸ்தவேசுகள் சம்பந்தப்பட்டதும், சட்டம் சம்பந்தப்படாதுமான சில வியாச்சியங்களில் அந்த ஆதரவுகளிலுள்ள எழுத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஒரு வகையாய் நியாயம் தீர்ப்பார்கள். ஆனால் வாய்மொழிச்சாட்சியங்கள் (oral evidence) சம்பந்தப்பட்ட வியாச்சியங்களிலோ உண்மையைக் கண்டறிவது சிரமமாகி அதிகாரிகளின் மனதில் தோன்றின ஒரு முடிவைச் செய்து விடுவார்கள். அது சிலருக்கு நன்மையாயும் சிலருக்குத் தீமையாயும் முடியும்.

4. "களவும் கற்றுமற" என்னும் முதுமொழிப்படி நமமைப் மற்றவர்கள் ஏமாற்றுமலிருக்கும் பொருட்டுக் கோர்ட்டு விவகாரங்களையும் சட்ட ஞானங்களையும் படித்தறியவேண்டியது ஒரு வகையாய் அவசியம் தான். ஆனால் அதையே சதா நேரமும் முயற்சியாக வைத்துக்கொண்டு வக்கீல் வீடுகளிலும் கோர்ட்டு வாசல்களிலும் போய்க் காத்திருப்பது கேவலமான காரியம். அன்றியும் செல்வமும் வாக்கு நாணயமுமாயிருந்த சிலர் கோர்ட்டு வியாச்சியத்திற்குப் போய் அதன் மூலமாய்ச் செல்வமும் குன்றித் தரித்திர தசையும் நாணய பங்கமும் அடைந்து பிழைப்புக்குக் கூட வழியில்லாமல் தயங்குவதை நாம் பிரத்தியட்சமாய்க் காணலாம்.

5. சிற்சில சமயங்களிற் அவசியமான காரணம் பற்றிக் கோர்ட்டுக்குப் போவதில் பாதகமில்லை. வழக்குகள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும். அவையாவன:—



(1) அவசிய வழக்கு
(2) அநியாய வழக்கு
(3) அறிவீன வழக்கு.

இதில் முதலாவது அம்சமாகிய அவசிய வழக்கு என்பதைக் கவனிப்போம். ஒருமனிதன் யாதொரு சந்ததியுமின்றி அவனுடைய மனைவியாகிய விதவையை மாத்திரம் வாரிசாக வைத்துவிட்டு இறந்து போகிறான். அவனுக்குச் சில பூஸ்திதிகளிலிருக்கின்றன. அவைகளை அவனுடைய மனைவியாகிய விதவை யாதொரு பராதீனமும் செய்யாமல் தன் ஜீவகாலம் வரை அனுபவித்துக் கொள்ளும்படியாயும், அப்புறம் அவளுக்குப் பின் அவனுடைய சமீப தாயாதியான அனந்தர வாரிசுக்காரன் அந்தச் சொத்துக்கள் முழுவதையும் சர்வ சுதந்தர பாத்தியமாயடைய வேண்டு மென்றும் இந்துலா (Hindu Law) என்னும் மனுதர்ம சாஸ்திரம் முறையிடுகிறது. அப்படியிருக்க அந்தச் சொத்துக்களின் வரும்படியே அந்த விதவையின் ஜீவனும்சச்செலவுக்குப் போதுமானதாயிருக்கிற நிலைமையில் அவள் சிலர் துர்ப்போதனையின் பேரில் அனந்தர வாரிசுப் பாத்தியத்தை மோசம் செய்யவேண்டுமென்ற கெட்ட எண்ணங்கொண்டு அந்தச் சொத்துக்களையாவது அல்லது அவைகளில் சில பாகத்தையாவது யாதொரு காரணமுமின்றிப் பராதீனம் செய்வாளாகில் அந்தப் பராதீனமானது அவள் ஆயுசுக்குப் பின் செல்லத்தக்க தில்லை யென்று அனந்தர வார்சுக்காரர் (Suit for declaration) வியாச்சியம் செய்ய வேண்டியது அவசியம்.

6. இரண்டாவது அம்சமாகிய அநியாய வழக்கு என்பதைக் கவனிப்போம். ஒரு மனிதனுக்குக் கொஞ்சம் நஞ்சை நில மிருந்தது. அவனுக்குச் சில ஆண் பெண் குழந்தைகளுமிருந்தன. அப்படியிருக்கும் போது அந்தக் குடும்பத்தில் போதுமான வரும்படி யில்லாததினாலும், அந்தப் பெண்குழந்தைகளுக்கு விவாகம் செய்யவேண்டிய செலவுகளும் மற்றும் அந்தக் குடும்பத்திலுண்டான பற்பல செலவுகளும் நேரிட்டதினாலும் அவனுக்குக் கொஞ்சம் கடனுண்டாகிவிட்டது. அந்தக் கடன் நாளுக்குநாள் வட்டியும் முதலும் அதிகரித்துக் கொண்டே போகிறது. அந்தக் கடனை நிவிர்த்தி செய்வதற்குப் போதுமான வழியில்லாமல் அந்த நிலத்தை அவன் கிரயம் செய்துவிட்டான். அப்போது அந்த ஆண் குழந்தைகள் மைனராயிருந்ததினால் அவன் அந்தக் குடும்ப மானேஜர் நிலைமையில் தனக்காகவும் தன் சம்ரட்சணையிலிருக்கிற தன்னுடைய மைனர் புத்திரர்களுக்கு கார்டியன் நிலைமையிலும் என்று அந்தக் கிரயத்தஸ்தவேசில் எழுதியிருக்கிறான். அப்புறம் சிறிது காலஞ்சென்று ஒரு புத்திரன் மைனர் பருவம் நீங்கி மேஜரானதின்பின் அவனைக் கொண்டு அவனுடைய தகப்பனும் அவனுக்கு உதவியாயிருந்து அந்த மைனர் பாகம் சம்பந்தப்பட்டமட்டில் அந்தக் கிரயம் செல்லத்தக்கதில்லை யென்றும், அந்தப் பாகத்தை வாதிக்கு வாழ்வித்து விடும்படியாயும் வியாச்சியம் செய்கிறான். அந்தக் கிரயத் தொகை முழுவதும் அவர்கள் குடும்ப நன்மையின் பொருட்டே செலவாகியிருக்க அந்தக் கிரயக்காரனை மோசம் செய்ய வேண்டுமென்றும், அந்தக் கிரயக்காரனிடமிருந்து பின்னும் ஏதாவது பொருள் பறிக்கலா மென்றும் கெட்ட எண்ணங் கொண்டு அவலட்சண ஆதாயத்தைக் கருதி மனச்சாட்சிக்கு விரோதமாய் மைனர் வியாச்சியம் செய்வது அநியாய வழக்கு என்னும் பிரிவைச் சேர்ந்தது.

7. மூன்றாவது அம்சமாகிய அறிவீன வழக்கு என்பதைக் கவனிப்போம். A. B. C. என்ற மூன்று பேர்களுக்குப் பாத்தியப்பட்ட ஒரு பொது நடைப் பாதை (Common lane) இருக்கிறது. அதன் பக்கத்தில் D என்பவருடைய வீடும் இருக்கிறது. அந்த D என்பவர் தன்னுடைய வீட்டின் சௌகரியத்துக்காக அந்த முடுக்கு வழியாய் நடந்துகொண்டிருக்கிறார். பின்னும் எத்தனையோ பேர் அந்த முடுக்கின் வழியாய்க் கால்வாய்க்குப் போய் ஜலம் எடுக்கிறார்கள். அப்படி எத்தனைபேர் நடந்த போதிலும் அந்த முடுக்கில் நடப்பதினால் அதைப் பற்றி அந்த A. B. C. என்பவர்களுக்கு யாதொரு இடைஞ்சலாவது கஷ்டமாவது கிடையாது. அப்படி யிருக்க அந்த D என்பவர் பேரில் பொறாமை கொண்டு அந்த முடுக்கில் அவர் நடப்பதைத் தடுக்கும் பொருட்டு A, B, C என்பவர்கள் வாதிகளாயிருந்து தாவா முடுக்கில் D என்பவருக்கு யாதொரு பாத்தியமுமில்லை யென்றும், அவருடைய வீட்டுக்கு வேறு நடை பாதை யிருப்பதால் இந்தத் தவா முடுக்கில் அவர் நடக்கவேண்டிய அவசியமில்லை யென்றும் அதினால் அந்த முடுக்கில் D என்பவருக்கு யாதொரு பாத்தியமுமில்லை யென்பதை ஸ்தாபித்து அந்த முடுக்கில் அவர் எந்தக் காலமும் பிரவேசியாதிருக்கும்படி அவருக்குச் சாஸ்வத மறியல் (Perpetual injunction) கட்டளை கொடுக்கவேண்டு மென்பதாய் வியாச்சியம் செய்தார்கள். அது அசல் அப்பீல்வரையும் போய்க் கடைசியாய் D என்னும் பிரதிவாதிக்கு அந்த தாவா முடுக்கிலுள்ள பாத்தியதையைக் காட்டக்கூடிய தஸ்தவேசு (Title deed) இல்லாத போதிலும், அந்த முடுக்கில் அவருக்கு நீடித்தகால அனுபோகப் பாத்தியம் (Customary easement right) இருப்பதாய் ருசுவாகிறபடியால் அவர் அதில் நடந்து கொள்ளலாமென்று தீர்ப்புக் கிடைந்தது. அந்த முடுக்கின் கிரயம் 15 ரூபாய் கூடப் பெறமாட்டாது. அதற்கு இருகட்சியிலும் 600 ரூபாய் வரை செலவும் தொழில் நஷ்டமும் ஆகியிருக்கிறது. இது அறிவீன வழக்கு என்னும் பிரிவைச் சேர்ந்தது.

8. இம்மூவகை வழக்குகள் ஒவ்வொன்றுக்கும் இன்னும் எத்தனையோ விதமான உதாரணங்கள் சொல்லலாம். ஆனால் அது அதிக விரிவாகுமென்றெண்ணி ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணத்தோடு நிறுத்திக்கொண்டேன்.

9. அன்றியும் நம்மவர்கள் ஊர்ப்பொதுவிலுள்ள மடங்கள் ஆலயங்கள் விஷயமாயும் தெருவில் பாவாத்தும் விஷயமாயும் வம்மிச பேதத்தின் பேரில் பாத்தியா பாத்தியங்களைக் குறித்து எத்தனையோ வியாச்சியங்கள் செய்து அவைகளுக்கு ஏராளமான பொருள்களைச் செலவிட்டிருக்கிறார்கள். நமது 'செங்குந்தர் கல்விநிதிச்' சீட்டுக்கு 8 அணுகொடுக்க மனமில்லாதவர்கள் அந்த பிரயோஜனமற்ற வியாச்சியங்களுக்கெல்லாம் மனப்பூர்வமாயும் உற்சாகத்துடனும் தம் தகுதிக்கு மிஞ்சின வரி கொடுக்கிறார்கள். அவ்விதம் கஷ்டப்பட்டாவது வரிகொடுத்து வியாச்சியங்கள் அனுகூலமடைய வேண்டுமென்ற அபிலாஷையுடையவர்களாயிருக்கிறார்கள். அந்த வியாச்சியங்கள் ஜெயமடைவதே அவர்களுக்கு மேலான பதவி என்று நினைக்கிறார்கள்.

10. சிவில் விவகாரங்களிங்ஙன மிருக்க நம்மவர்கள் வசிக்கும் அநேக கிராமங்களில் அடிக்கடி கட்சிவிவாதமேலிட்டுக் கலகங்களுண்டாகி எத்தனையோ கிரிமினல் கேசுகள் நடந்திருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் மிகுதியான பணங்கள் செலவாகி யிருக்கின்றன. ஒரு நாள் ஒரு பென்ஷன் சப்மாஜிஸ்ரேட் (Retired Sub-magistrate) இடம் நான் வேறு காரியத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது அவர் நம்மவர்கள் இருக்கும் சில தாலுகாக்களில் சப்மாஜிஸ்ட்ரேட்டு வேலை பார்த்ததாகவும், அங்கங்கே இந்த ஜாதியாருடைய கிரிமினல் பிராது இல்லாத காலம் கிடையாதென்றும், அவர்கள் மற்றக் காலங்களில் வறுமைப் பிழைப்பாயிருந்த போதிலும் கேசுகளுக்கு மாத்திரம் உயர்ந்த பீஸ் வாங்கக்கூடிய சரியான வக்கீல்களைக் கொண்டுவருவார்களென்றும் சொன்னார். இது நம்முடைய அனுபவத்திலும் பிரத்தியட்சமாய்த் தெரிந்த விஷயம். இவைகளெல்லாம் நமது சமூக முன்னேற்றத்துக்கு விரோதமான காரியங்களாயிருக்கின்றன.

11. இம்மாதிரி விவாதங்களுக்கெல்லாம் நமக்குள் வம்மிச பேதங்களும் ஒற்றுமைக் குறைவுகளுந்தான் முக்கிய காரணங்களாயிருக்கின்றன. அவைகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டியது மிக்க அவசியமா யிருக்கிறது. விவாதங்களுண்டாவது சகஜமான காரியந்தான். ஆனால் அதற்காக உடனே கோர்ட்டுக்குப் போய் வீண்செலவு செய்யாமல், எதாவது விவாதம் எற்பட்டால் அதைச் கொஞ்சம் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு அதற்கு அங்கங்கே நமக்குள் சில பெரிய மனுஷர்களைப் பஞ்சாயத்தார்களாகத் தேர்ந்தெடுத்து அவர்கள் செய்கிற தீர்மானத்துக்கு நாம் உடன்பட்டுக் கொள்ளுவது நமக்கு லாபமாகும், கௌரவமாயுமிருக்கும். அப்படியில்லாமல் கோர்ட்டுக்குப் போய் வக்கீல்களுக்கும் வக்கீல் குமஸ்தாக்களுக்கும் அடிமைப்பட்டுச் சரியான நேரத்துக்குச் சாப்பாடு இல்லாமல் பட்டினியும் பசியும் கிடந்து பொருள் நஷ்டமடைந்து சஞ்சலத்துக்குட்படுவது சரியான முறையல்ல.

மேற்கண்டபடி நமக்குள் தெரிந்தெடுக்கிற பஞ்சாயத்தார் ஒருவேளை நியாயமில்லாமல் முடிவு செய்து விட்டதாக ஒரு கட்சிக்காரர் அபிப்பிராயப்பட்டால் நாம் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பின் பேரில் சென்னப் பட்டணம் ஐகோர்ட்டுக்கு (High Court) அப்பீல் பண்ணுவதுபோல அந்த விவாதத்தின் தன்மைகளையும் பஞ்சாயத்தார் செய்த தீர்ப்பையும் விவரமாயெழுதி சென்னப்பட்டணத்திலிருக்கும் நமது தலைச்சங்கத்தாரவர்களுக்கு அனுப்பிக் கடைசியாய் அவர்கள் செய்கிற பைசலுக்கு நாம் உடன் படவேண்டும். அப்படிச் செய்வது நமது சாதியின் முன்னேற்ற சின்னங்களிலொன்றாகும்.

ஆகையால் சீரியகுல செங்குந்த சிகாமணிகளே! இந்த விவாத தோஷம் என்னும் வியாசத்தை நீங்கள் நன்றாய் வாசித்து ஆராய்ந்து இனிமேலாவது அதன்படி நடக்கப் பிரயாசைப் படுங்கள். மிகவும் அவசியமான காரியம் சம்பவித்தாலன்றி மற்றபடி அற்ப காரியங்களுக்கும் சண்டையிட்டுக்கொண்டு கோர்ட்டுக்குப் போகும் தூர்வழக்கத்தை அடியோடு தொலைத்து விடுங்கள். சமூக முன்னேற்றம் முன்னேற்றம் என்று கதறிக்கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் நாம் முகத்தின் வேர்வை நிலத்தில் விழும்படி ஒவ்வொரு இழையாய் நெய்து வருத்திப் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருளைத் தீயவழியாகிய விவாதத்துக்குச் செலவழித்துப் பலவித துன்பத்துக்குள்ளாகாமல் நம்முடைய பொருளை நமது ஜாதியின் முன்னேற்றத்துக் குரிய நல்வழியில் செலவிடும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

## வர்த்தமானம்

### 1. வட்டமேஜை மகாநாடு

லண்டனின் கூடும் வட்ட மேஜை மகாநாட்டுக்கு மொத்தம் 89 பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுள், 16 இந்திய அரசர் பிரதிநிதிகள்; 60 பிரிடிஷ் இந்திய குடிகளின் பிரதிநிதிகள்; 13 பிரிடிஷ் துரைத்தன எதிர்கட்டுப் பிரதிநிதிகள்.

### 2. பொதட்டூர்பேட்டை சூரசம்மார உற்சவம்

ஷை கிராமம் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தில் ஐப்பசிமீ 5-ம்தேதி முதல் 14ம் தேதி வரையில் சூரசம்மார உற்சவம் அதி விமரிசையாய் நடைபெறும். திருவிழா திருப்பணி

திரு. எ. மு. சஞ்சீவி முதலியார் அவர்கள், நூல் ஜவுளி வியாபாரம்.

# ஒற்றுமை மணத்தினுயர்வும் செங்குந்த மணங்களிற் சில சீர்திருத்தங்களும்

(தொகுதி 4 பகுதி 7, 240-வது பக்கத் தொடர்ச்சி)

கட்டுரை 2.*

[திரு. ஐ. க. பெருமாள்சாமி முதலியார் அவர்கள், செங்குந்த சங்கக் காரியதரிசி, பவானி.]

சென்ற கட்டுரையில் மணங்களிற் சில சீர்திருத்தம் வேண்டுமெனப் பொதுப்படக் கூறிப் போந்தாம். அவற்றினை ஈண்டு நன்கு ஆராய்வாம்.

### அம்மி மிதித்து அருந்ததி காணல்

என்னும் ஒரு வழக்கம் நம்மவர் மணங்களில் நடைபெற்று வருகின்றது. இது எதன்பொருட்டு ஏற்பட்டதென்று ஆராய்வோமாயின், மணமகளுக்குக் கற்பு நிலையினைப் பெற்று வாழ்ந்தால் நல்ல கீர்த்தி யுண்டாகும் என்னும் நீதியைப் புகட்டுவதற்கேயாம். எங்ஙனமெனிலோ: 'அடி பெண் பாவாய்! நீ கற்புநிலை தவறினால் வியபிசாரம் செய்த அகலிகையைப் போன்று கல்லாகப் போவாய்' என்பதைக் குறிப்பாற் காட்ட அம்மியாகிய கல்லை மிதித்தும், 'அஃதின்றிக் கற்புநெறி தவறாயானால் அருந்ததி போன்று வானிடைநின்று பிரகாசிப்பாய்' என்பதைக் குறிப்பாற் காட்ட அருந்ததி நாளைச் சுட்டிக்காட்டியும் செய்வதாம். இது (இவ்வகையே நற்போத மூட்டுதல்) சாலச் சிறந்ததே. ஆனால் இதனுட்பொருளை யறிந்தார் யார்? பெரும்பாலும் இல்லவே இல்லை. (ஒரு சிலர் ஆண்மக்கள் உணர்ந்திருப்பாரேனும் அவ்வண்ணம் மணவினைக் காலத்துச் செய்யார்.) இன்னும் சில மணங்களில் அம்மியை மாத்திரம் மணவறையில் வைப்பதுண்டு. அதனை மிதித்துக் காட்டுதலும் இல்லை: அருந்ததியைச் சுட்டிக் காட்டுதலுமில்லை. இப்படியே வழக்கத்தில் நடந்துகொண்டு வருகிறது. அவ்வாறாகவே அவ்வழக்கந்தான் (அம்மி வைத்தது) எதற்கு?

இன்னும் நன்கு ஆராய்வோமாயின் அவ்வழக்கம் மூடப்பொருளினை மேற்கொண்டதே யெனக் கூறலாம். கற்பு நிலை தவறிய பெண்கள் கல்லாக மாறுவார்களா? ஒரு வேளை அக்காலத்தில் தவமகிமையால் அவ்வாறு கல்லாக மாறியிருப்பார்களோ என்னவோ அதைப்பற்றி நமக்கு அக்கரையில்லை. இக்காலத்தில் அத்தகைய சக்தி எந்த ஆடவருக்கும் இல்லையாதலின் கல்லாக மாற்றுதலும் முடியாத காரியம். ஒரு வேளை அந்தப் பயத்தாலாவது பெண்கள் கற்புடனிருப்பார்கள் என்று எண்ணினாலோ அப்படிப்பட்ட பயம் இக்காலத்தில் பெண்களுக்கில்லை. பெண்கள் நம்புவதற்கு, நம்பிப் பயந்திருப்பதற்குப் போதிய காரணங்களில்லை. ஆகவே அம்மி மிதித்தல் பொருளற்ற விஷயமாகவே முடிகிறது.

அருந்ததி விஷயமும் அவ்வாறே. அருந்ததி என்பது ஒரு நக்ஷத்திரம்; நக்ஷத்திரங்களைப்பற்றி வானநூல் வல்லார் கூறுங் கூற்றைக் கவனிப்பின் அவை சூரியனைவிடப் பன்மடங்கு பெரிதானவை யென்பதும் ஜோதியண்டங்கள் என்பதும் விளங்கும். நக்ஷத்திரங்களோ கணக்கற்றவை; ஆனால் அவை யெல்லாம் அருந்ததி போன்ற பெண்மணிகளா? ஆம் என்ற விடை அறிவிற் கொவ்வாதது. ஆகவே, அருந்ததி காட்டலும் பயனில் செய்கையே. எனவே, அவ்வழக்கத்தைப் பெரும்பாலும் முன்னமேயே நீக்கி வந்திருப்பினும், மணவறையில் அம்மியை வைப்பதும் பொருத்த மற்றதும் பிற ஜாதியினர் இகழ்ச்சிக் குரியதுமாகின்றதாதலால் அம்மி வைத்தல் சிறந்ததன்றல்லவா?

### ஆயிரப் பெருந்திரி விளக்கு வைத்தல்

என்பதும் இக்காலத்திற் கொத்ததா? ஒரு போதும் ஒவ்வாது. இந்த இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் ஒளியைப் பரப்பும் விளக்குகள் (பவர் லைட், க்யாஸ் லைட், எலெக்ட்ரிக் லைட்) இல்லாததினால் அக்காலத்தில் பிரகாசம் அதிகமாயிருக்க வேண்டுமென்ற எண்ணத்தால் பெரிய திரியை யிட்டு விளக்கை உண்டாக்கினார்கள். அது அணைந்து போகாமலிருக்கும் பொருட்டுக் காற்றோட்டம் இல்லாத வீட்டில் மணவறை யியற்றி அங்கு அந்த ஆயிரப் பெருந்திரி விளக்கினை வைத்தார்கள். அதனால் பல இடையூறுகள்

*குறிப்பு:—நாம் ஆடிமாத மித்திரனில் வரைந்த திருமணச் சீர்திருத்தத்தில் பல சடங்குகளைப்பற்றியும் அவை வேண்டப்படாதன வென்றும் வரைந்தோம். ஆனால் அவற்றில் சிலவற்றை ஒத்துக்கொண்டும் சிலவற்றை ஒத்துக் கொள்ளாமலும் திருச்செங்கோடு திரு. கூ. அ. சு. அருணாசல முதலியார் ஒரு நிருபத்தை ஆவணி மாத மித்திரனில் வரைந்துள்ளார். அதிற் சில சடங்குகளுக்கு ஒருவாறு உட்கருத்துக்களை விளக்கியுமுள்ளார். அக்காரணங்கள் சில விடத்துப் பொருத்தமாயும் சிலவிடத்துப் பொருந்ாதனவாயும் இருக்கின்றன என்பதையும், அச்சடங்குகளுக்குப் பிற உட்கருத்துக்களை நாம் கருதிக் கொள்ளலாமென்பதையும், இருப்பினும், அவ்வுட்பொருள்களை அக்குறிப்பாற் காட்டாது தமிழ் மொழியைக் கொண்டு யாவருக்கும் விளங்குமாறு உரைக்கலாம் என்பதே சிறந்ததென்பதையும் கீழ்வரும் கட்டுரை முடிந்த பின்னர் தெளிவாய் விளக்கக் கருதியுள்ளோம்.

'எப்பொருளெத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்ற பொய்யா மொழிப்படி வாசகர் ஆராய்ந்து உண்மை தெளிவார்களாக.


விளைகின்றன. பெரும்பாலும் நம்மவர்களின் வீடுகள் சிறியவையாகவே யிருக்கும். அந்தச் சிறிய இடத்தில் சடங்குக்கு வேண்டிய பல சாமான்களை வைப்பதற்கும் உறவினர் கூடியிருப்பதற்கும் மிகுந்த நெருக்கடியாகவே இருக்கும். அச்சந்தர்ப்பத்தில் சடங்கின் பொருட்டு எழுபவர் எவ்வளவு ஜாக்கிரதையாக இருப்பினும் அவர்கள் துணி விளக்கிற் பட்டு எரிய ஆரம்பிக்கின்றது. இம்மாதிரி துணி எரிந்து விடுவது ஒரு பெரிய அபசகுனமாகவே கருதப்படுகிறது. இம்மாதிரியான சம்பவங்கள் சில இடங்களில் நடந்திருப்பதை நானே கண்டிருக்கிறேன். எனவே மனதில் ஒரு கெட்ட எண்ணத்தை உண்டாக்குவதற்கு (இவ்வபசகுனத்தால் யாது நேரிடுமோ என்ற பயம் உண்டாக்குவதற்கு) அது ஒரு காரணமாவதன்றி, உறவின் முறையார் கண்டு களிப்பதற்கும் வசதியற்றதாகின்றது. ஆகவே மணவறையினை வீட்டில் அமைக்காமல் விசாலமான இடத்தில் அமைப்பது மிகவும் விசேடித்ததாகும். ஆனால் துணி எரியும் என்ற காரணத்தாலேயே ஆயிரம்பெருந்திரி விளக்கு வேண்டாம் எனக் கூறவரவில்லை. பல கலியாணங்களில் அவ்வித விபத்து ஏற்படுவதுண்டு; அன்றியும் பிரகாசம் பொருந்திய விளக்குகள் இருக்க அவ்விளக்கு வேண்டாமென்பதே.

இன்னும் ஷை விளக்கை மர உரலின்மீது வைக்கிறார்கள். இதன் காரணம் விளக்கு நிற்பதற்கும் வெளிச்சத்தை மேற் பரப்புவதற்குமே தான். அக்காலத்தில் விளக்கினை ஏந்தி நிற்பதற்குச் சில அடிமைகளை விலைக்கு வாங்கி அவர்கள் தலையில் விளக்கேற்றி யுள்ளனர். இதன் விவரத்தைப் பல கதைகளிற் காணலாம். அதன் பின் மரத்துண்டுகளில் விளக்கினை ஏற்றி வைத்திருக்கலாம். இந்த இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் மணவினை என்பது நியதியின்றி (இக்காலத்தில் நடைபெறும் சடங்குகளின்றி) நடந்துவந்துள்ள தென்பது ஆராய்ச்சியாளருக்கு நன்கு விளங்கும். அதன் பின்னர் காலத்திற்கேற்ப மணத்திற்கு ஒரு வரன் முறையை ஏற்படுத்தினர். இது "பொய்யும் வழுவும் நிறைந்தன பின்னர் - ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் நன்குணரலாம். எனவே அம்முறை தோன்றிய பின்னர் முதல் முதல் நடந்த மணத்தில் முற்கூறிய காரணங்களுக்காக உரலின் மேல் விளக்கினை வைத்து மணவினையை முடித்திருக்கலாம். அப்பழக்கமே தொன்று தொட்டு நாளது வரையும் நடந்து வருகின்றதெனக் கூறலாம். எனவே அக்காலத்திலும் காலத்திற்கேற்ப முறை செய்து கொண்டது போல இக்காலத்திலும் நாம் அம்முறையினை மாற்றிக் கொள்ளலாம். இம்மாதிரி மாற்றிக் கொள்வதினால் நமது குலம் கெட்டுவிடாது. முன்னேற்றமே யடையும். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்ற சூத்திரப்படி நாம் செய்துகொள்ள நமக்கு உரிமை யுண்டு. ஆகவே உரலையும் ஆயிரப் பெருந்திரி விளக்கையும் ஒழித்து மிகுந்த பிரகாசத்தைத் தரக்கூடிய விளக்குகளை மணவினைக் காலத்தில் வைத்துக் கொள்ளலா மல்லவா?

## மங்கலப் பானை வைத்தல்

என்னும் வழக்கத்தினையும் சிறிது ஆராய்வாம். மங்கலப் பானை வாங்கிவரும் பொருட்டுக் குயவன் வீட்டிற்கு நமது குலப் பெண்களில் பெரியவர்களும் சிறியவர்களுமாகிய சுமங்கலிகள் 5 பேரோ, 7 பேரோ செல்கின்றனர். செல்லும் போது சால்வையோ, ரட்டோ, ஏதோ ஒரு மொத்தத் துணியை நான்கு குச்சிகளில் நான்கு மூலையையும் கட்டி அப்பெண்களுக்கு நிழலாகப் பிடித்துக் கொண்டு செல்கிறார்கள். இதைக் கவனிக்கும் போதும் தொன்மையோரின் நாகரீகம் நமக்கு விளங்குகிறது. அக்காலத்தில் நிழலை யுண்டாக்கிக் கொள்ளத் தற்காலத்திலுள்ளபடி குடை முதலியவை ஏதும் இல்லை. அதன் பொருட்டுத் துணிகளைக் குச்சிகளிற்கட்டி நிழலை யுண்டாக்கிக் கொண்டு சென்றிருக்கலாம். இக்காலத்தில் வெய்யிற் காலத்துக் காற் சூடுக்காகத் துணி, சாக்கு முதலியவற்றைக் காலிற் சுற்றிக்கட்டி நடந்து செல்வதைப் பட்டிக்காட்டிடங்களில் நாம் பார்க்கலாம். இதைப்போன்ற செய்கையே துணியைக் கொண்டு குச்சியால் நிழலை யுண்டாக்கிச் செல்வதும். துணியைக் காலிற் சுற்றி நடப்பவரைக் கண்டால் நாம் எவ்வளவு கேலியோ பரிதாபமோ அடைகிறோமோ அதைப்போலவே நாம் குச்சி கட்டித் துணி பிடித்துச் செல்வதும் பிறருக்குக் கேலியையோ பரிதாபத்தையோ உண்டாக்குமல்லவா? ஆற்றுக்குத் தண்ணீருக்கு (மணமகன் குளிப்பதற்கு வேண்டித் தண்ணீருக்காக)ச் செல்லும் போதும் அப்படியே துணியைப் பிடித்துச் செல்லுகிறார்கள். பல காலங்களில் வெயிலிற் செல்லும் பெண்கள் கலியாண காலங்களில் அத்தகைய நிழலிற் செல்லாமற் போனாலென்ன? கலியாணத்திற்குச் சிறப்பு வேண்டுமானால் குடை நிழலில் வண்டியிற் செல்லுதல், மோட்டார்க்காரில் செல்லுதல், அல்லது குயவரையே வீட்டிற்குப் பானைகளைக் கொண்டு வரும்படி செய்தல் சீரியனவன்றோ? அவ்வாறின்றித் துணி நிழலிற் செல்லுதல் நம் இனத்திற்கே கேவலத்தை யுண்டாக்குமென நாம் அபிப்பிராயப் படுகிறோம்.

இனி, மங்கலப் பானையைக் கொண்டு வந்து வைக்கும் வழக்கமும் ஒரு காரணத்தை முன்னிட்டேதான் மணவறையிலுள்ள அழகிய பொருட்களைக் கண்டு திருஷ்டி ஏற்படுமென எண்ணித் திருஷ்டி தோஷத்தை நிவர்த்திசெய்ய அம்மங்கலப்பானைகள் வைத்திருக்கலாமென உத்தேசிக்கலாம். மங்கலப்பானை என்ற பெயரை உத்தேசித்த மாத்திரத்திலேயே திருஷ்டி தோஷத்தின் பொருட்டு வைக்கும் பானைகளென ஏற்படுகிறது. அதாவது, கறுப்பாட்டை வெள்ளாடு என்பது போலவும், சாவோலையைத் திருமுகம் என்பது போலவும், மலசுத்தி செய்தலைக் காற்சுத்தி செய்தல் என்பது போலவும், அமங்கலப்பானையை




158892

## குடியால் விளையுங் கேடுகள்

[திரு. அ. சி. சண்முகம் அவர்கள், புதுவை]

மதுபானஞ்செய்தல் அதாவது அறிவை மயக்கும் கள் முதலிய எல்லாவித பானங்களையும் உட்கொள்ளுதல் பஞ்சமாபாதகங்களிலொன்று மெனினும், இது ஏனைய நான்கிற்கும் பிறப்பிடமும் வழிகாட்டியுமாகும். அநுதினமும் மதுபானஞ் செய்வோர் தங்களுக்கு அது பலத்திற்கும் ஜீரணசக்திக்கும் ஏதுவெனச் சொல்லுகின்றனர். ஏனெனில், நம்முயிருக்கு ஆதாரமாகிய ஜலவாயு பிராணவாயு ஆகிய இவைகள் அதில் சேர்ந்திருப்பதாகக் கருதுகின்றனர். உண்மையில் அதனால் யாதொரு பிரயோஜனமுங் கிடையாது. போஷிப்புக்குரிய உப்புவாயு அதில் கிடையாது. அப்படி அதனால் பலமுண்டென்றாலும் உடம்பிற்குப் பலத்தைக் கொடுத்து அதை அழிவுபடுத்தும் உணவை எவர் உட்கொள்வர்? இது நீராவியால் வேலை செய்யக் கூடிய இயந்திரத்திற்கு உலோகத்தைத் தின்று நாசமாக்கும் (Acid Vapour) திராவக ஆவியை உபயோகிக்கும் விதத்தை யொக்கும். சிறிய அளவாக உட்கொண்டால் மது சரீரவளர்ச்சிக்கு ஏதுவென்றால் அது (Albumem) என்ற முட்டையின் வெண் கருவின் சத்தைப்போல் எல்லாவித முக்கிய ஆகாரங்களிலும் காணப்படவேண்டும். அவ்வாறல்லாமல் காப்பி, டீ இவைகளிலிருக்கும் (Caffeine) என்ற ஒருவித வஸ்து மதுவில் காணப்படுவதால் அது அளவுக்கு மிஞ்சில் சரீரத்திற்கு அபாயத்தை விளைவிக்கும் கொடிய விஷமாமென்பது தெள்ளென விளங்கும்.

இப்பழக்கம் மதுவைத் தொடர்ச்சியாக அருந்துவதனாலும் சாப்பாட்டிற்குமுன் ஒயின் முதலியவைகளைப் பலத்தைக்கொடுக்கும் டானிக்காக உட்கொள்வதினாலும் உண்டாகிறது. மதுவின் குணம் நன்கு தெரிந்திருந்தும் அதன் குறி தம்மிடம் காணப்படவில்லையென்று நினைத்து அருந்துகின்றனர். அதன் கோரக்குறி தற்செயலாய் உண்டாகும். ஆனால் குடியின் குறியைக் காட்டாமலே சிறுகச் சிறுக உடம்பைக் கெடுத்துக் கடைசியில் அழிவை யுண்டு பண்ணுகிறது.

கள்ளுண்போர் நல்லொழுக்கம், நாற்பயன், நாணம் முதலியவைகளைச் சிறிதும் சிந்தியாது தம் செல்வமுழுவதையுமிழந்து வறுமைப்பட்டுப் பெண்டுபிள்ளைகள் வயிறெரிய தெருத்தோறும் அலைந்து திரிந்து பொருளை யாசித்தேனும் திருடியேனும் கள்ளுண்டு வீதிகளில் விழுந்து புரண்டு அவமானப் படுவர்.

(360-வது பக்கத் தொடர்ச்சி)

மங்கலப்பானை எனப் பேரிட்டிருக்கின்றனர். அமங்கலப் பானையாகவே அது திருஷ்டி தோஷத்திற்கே யாகும் என்பது போதரும். அதற்கேற்றாற்போல் அப்பானைகளில் வெள்ளைப்புள்ளி யிடுவதும் காண்க. அவ்வாறாயின், அதைவிட அமங்கலத்தைத் தரக்கூடிய வஸ்துக்களும் இருக்கின்றன; உரலும் அம்மியும் அப்பானையைவிட அமங்கலத்தைத் தருவனவே எனலாம். ஆயின் அக்காலத்தில் அவை (அம்மி உரல் முதலியன) அமங்கலமான பொருள்களெனக் கருதப்படாம லிருந்திருக்கலாம். பானை ஒன்றையே அமங்கலப் பொருளெனக் கருதி ஏற்படுத்தி யிருக்கலாம். இக்காலத்தில் அவையாவும் அமங்கலமாகவும், பொருளற்றனவாகவும் கருதப்படுவதால் அவை வேண்டப் படாதனவே யாகும்.

## பட்டப்பகலில் பந்தம் பிடித்தல்

என்னும் வழக்கம் பல்லோர் இகழ்ச்சிக்குப் பாத்திரமாயிருக்கிறது அக்காலத்தில் இராக்காலங்களில் நடந்த சில கலியாணங்களுக்குப் பந்தம் பிடித்திருக்கலாம். அவ்வழக்கமே பந்தமின்றிச் செல்லக்கூடிய பகற்காலத்திலும் ஏற்பட்டுவிட்டது. அக்காலத்திலேயே 'சிலர் பகற்காலத்தில் பந்தமெதற்கு?' என வினவியிருக்கலாம். ஆனால் பலர் 'முன் நடந்த கலியாணங்களில் குயவன் வீட்டுக்குப் போகும்போதும் பந்தம் பிடித்துக் கொண்டுதானே சென்றார்கள். அந்த வழக்கத்தை நாம் ஏன் நீக்கவேண்டும்?' எனக் கூறி வழக்கமாகக் கொண்டுவந்திருக்கலாம். இவ்வழக்கம் இக்காலத்தில் பகற் குருடரெனப் பரிகசிப்பதற்குக் காரணமாயிருப்பதால் அவ்வழக்கமும் வேண்டப் படாததே. (தொடரும்)

ஒருவன் அதிகமாக உட்கொண்டானாகில் உடனே இரத்தவோட்டத்தின் அதிகத்தாலும் அதனால் ஏற்படும் உஷ்ணத்தாலும் முகமுங் கண்களுஞ் சிவந்து கோர பார்வையையுமுண்டாக்கும். அவன் தேகத்தின் உஷ்ணத்தைத் தணிக்கக் குளிர்ந்த காற்றில் உலாவ இச்சிக்கிறான். அப்போது தேகத்தில் இரத்த வோட்டத்தின் நிலைமை பயங்கரமானது. இதை நரம்புகளுக்கு ஒருவித கிளர்ச்சியை யுண்டுபண்ணுவதனால் அறியக்கூடும். அவன்கலக்கத்தோடும் காரணமின்றிஅவயவங்களை அசைத்துக்கொண்டும் பேசவாரம்பிக்கிறான். அவனுக்கு உணர்ச்சிகெட்டு எண்ணந் தடுமாற்றத்தினால் பகுத்தறிவின்றித் தட்டுத்தடுமாறி நடப்பான். உடனே உணர்வின்றிக் கீழ்வீழ்ந்து உவட்டலுண்டாகி வாந்திபண்ணித் தன்னை மறந்து நித்திரை செய்வான். மயக்கந்தெளியும்வரையில் நாம்அவனை எப்படித்தாக்கினாலும் வாயுளறிக் கத்தச் சக்தியற்றுக் கிடப்பான். சில சமயங்களில் தேகசீதோஷ்ண நிலைமையின் குறைவால் உயிரிழக்கவும் நேரிடும். அப்படியின்றி அவன் நித்திரையினின்றும் எழுவானாகில் இடுப்பு வலியாலும் தலைவலியாலுங் கஷ்டப்பட்டு நாவறட்சி யுண்டாகி எதையேனுங் குடிக்க முற்படுவான்.

இனி, குடியால் சரீரத்திற்கு உண்டாகுங் கெடுதிகளைச் சிறிதுஆராய்வோம். மது நாளடைவில் பலத்தைக் குறைத்து நோய்க்குட்படுத்தும். குடியினால் உறுப்புக்கள் அதிகமாய்த் தாக்கப்படுகின்றன. ஆகாரந் தங்கும் இரைப்பை கெட்டு ஜீர்ணசக்திக்கு ஏதுவான குழாய்களிற் சேர்ந்திருக்கும் சளிபோன்ற சீதள சவ்வானது வெந்துபோகிறது. ருசி பார்க்கும் சக்தி குறைந்து வாயில் கோழையையுங் கசப்பையு முண்டுபண்ணும். குரலானது தடிப்பாயும் பேசுவதற்குக் கஷ்டமாயும் இருக்கும். ஆகாரத்தின் நூற்றில் இரண்டுபங்கு சாராயமுட்கொண்டால் ஜீர்ணசக்தி குறைகிறது. ஆகாரத்தின் கால் பங்கு உட்கொண்டால் தீனிப்பையின் வேலையே நின்றுவிடும். அனுதினமும் உபயோகிப்பதனால் தீனிப்பைக்கு நாம் சாப்பிடும் உணவைப் பிரிக்கும் தன்மை முழுவதும் அற்றுவிடுகிறது. இதனால் சாப்பாட்டில் விருப்பமிருப்பதில்லை. சீதளசவ்வானது சிறுகச்சிறுகத் தின்னப்படுகிறது. மது உணவை ஜீர்ணப்படுத்துவதில்லை. இரைப்பையில் ஒருவித எரிச்சல் தோன்றும. அநேகமாய்க் குடியர்கள் காலையில் அருவருக்கத்தக்க விதமாய் வாந்தி செய்கின்றனர். சில வேளையில் இரத்தமும் உடன் வரும். ஈரலானது கடினமடைவதல்லாமல் உப்பவும் ஆரம்பிக்கும். சில சமயத்தில் அது கெட்டு விடுவதல்லாமல் சல்லிசல்லியாய்த் தின்னப் படுகிறது. இதனால் தேகம் பெருத்த மாற்றமடையும். இன்னும் இரத்தத்தில் தித்திப்பு சேரும். அளவைக் கெடுத்து நீர் வியாதியை யுண்டுபண்ணும். இரத்த தாரைகளின் துவட்சி (flexibility) மாறிக் கடினமாயும் சுலபத்தில் உடைக்கூடியதாகவுமிருக்கும். இரத்தத் தாரைகள் எவ்வளவுக் கெவ்வளவு கடினமடைகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு இரத்தவோட்டத்தின் (pressure) பிரஷர் அதிகரித்து இரத்ததாரைகளைப் பருக்கச் செய்கிறது. இதனால் (Aneurism) என்னும் மெல்லிய தோல்களாலாகிய சிறிய கட்டிகள் இரத்தக் குழாய்களில் தோன்றும். பிறகு இது சுலபமாயுடைந்து சரீரத்திற்குள்ளேயே இரத்தவொழுக்குக் காணும். இவ்வாறு மூளைக்குப் போகும் இரத்த தாரைகள் அறுபட்டு இரத்த வொழுக்கினால் அப்பாப்ளெக்சி (apoplexy)என்னும மூர்ச்சை ரோகமேற்படுகிறது.

இதல்லாமல் இருதயத்தில் ஒருவித கொழுப்பு போன்ற வஸ்து படர்வதினால் அது சீர்கேடடையும். கோலையாயுள்ள சவ்வு வஸ்துவானது கொழுப்பால் அடைபடுவதனால் இருதயத்தின் தசைப்பற்றுள்ள மூலதத்துவம் பாழ்படுகிறது. முன்சொல்லியவாறு இரத்தக்குழாய்கள் கெடுவதனால் இருதயத்திற்கு வேண்டிய பலத்தைக்கொடுக்கச் சத்தியற்று விடுதலால் இருதயம் பலமற்றுப் போகும். அடைப்பு ஜவ்வுகள் கடினமடைந்து துவாரங்களைச் செவ்வனே மூட ஏதுவாகாமல் சிறிய இரத்தவோட்டத்திற்கும் தடைபடுகிறது. இரத்தம் ஓடும்போதே கட்டுண்டு இரத்த தாரைகளில் அடைத்துக்கொண்டும் இரத்த வோட்டத்தைத் தடை செய்யும். இவ்வாறு மூளையிலேற்படுமாகில் திமிர்வாதம் உண்டாகும்.

அளவுக்கு மீறின வியர்வையும் சிறுநீரு மேற்படுவதனால் தாகமதிகரிக்கும். அன்னாசயத்திற்கு வேண்டிய உமிழ்நீரின் உற்பத்தி நின்றுவிடும். இருதயம் எவ்வாறு பாற்றமடைகிறதோ அவ்வாறே ஒவ்வொரு நரம்பும் மாற்றமடைந்து சக்தியற்றுவிடும். இதனால் மதுபானிகட்கு அநேக கண்டங்கள் ஏற்படும். நரம்புகளின் தளர்ச்சியால் தேகத்தில் (Nervousness) நடுக்கங் காணும் இன்னும் கெட்ட சொற்பனங்களும் அமுக்குவானென்ற (Nightmare) வியாதியுமேற்படும். குடியர்கள் தாங்கள் மேற்கொள்ளும் காரியங்களில் சித்திபெறாது மனதில் சந்தோஷமென்பதே யில்லாமல் கஷ்டத்தையே அநுபவிப்பர். இன்னும் அவயவங்களிலுண்டாகும் கெடுதியாலும் அதனால் ஏற்படும் கஷ்டங்களைச் சகிக்க மாட்டாமலும் தற்கொலை செய்துகொள்ளத் துணிவர். இன்னும் புத்திகூர்மை, மனோதிடம், ஞாபகசக்தி, பகுத்தறியும் தன்மை இவைகள் கெட்டுக் கடைசியில் பைத்தியத்திற்கே மூலாதாரமாகிறது. உலகத்திலுள்ள பைத்தியக்காரர்கள் பெரும்பாலுங் குடியர்களே யாவர். இப்பைத்தியத்தினால் தமக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படுங் கெடுதிகள் எண்ணிறந்தன. இன்னும் இதனால் அவர்களுக்குப் பலகண்டங்களு மேற்படும். அவர்களுக்குக் காக்கை வலிப்பு உண்டாகும். இருதயத்தின் படபடப்பு அதிகரித்து மூச்சு விடும்போது தடங்கலையும் ஒருவித சப்தத்தையு முண்டுபண்ணும். வாயில் அடிக்கடி இரத்தந் தோய்ந்த நுரை ஏற்படும். இன்னுங் கண்பார்வை குறைந்து காதடைப்பு ஏற்படுவதல்லாமல் பஞ்சபூதங்களுக்கும் அழிவை யுண்டுபண்ணும். இம்மாதிரியே தேசத்திற்குப் பலவிதத்திலும் கஷ்டத்



தைக் கொடுத்து நமக்குத் தெரியாமலே ஆயுளைக் குறைக்கும். இன்னும் (Typhus) என்னும் சுரம் அடிக்கடிவந்து துன்புறுத்தும். அநேகமாய் நீடித்த க்ஷயரோகமும் வாதநோயும் குடியர்களையே பற்றும்.

குடியர்கள் தாங்கள் அழிந்து படுவதல்லாமல் தம் சந்ததியாருக்கும் என்றுமழியாத பல கஷ்டங்களைச் சேர்த்து வைக்கின்றனர். அவர்களின் பிள்ளைகளும் குணங்கெட்டுப் பல துர்ப்பழக்கங்களுக்கு ஈடுபடுகின்றனர். அவர்களின் ஆயுள் குறையாவிட்டாலும் தம் ஆயுள் பரியந்தம் பலவீன மடைந்து நோயாளிகளாகத் துன்பப்படுகின்றனர். அவர்களுக்குச் சிறுவயதிலேயே காசநோயும் காக்கை வலிப்பும் ஏற்படும்.

முதலாவது சந்ததியில் பிள்ளைகளின் வளர்ச்சி குறையும். அவர்களுக்கும் குடியில் அவாவுண்டாகும். மனோபலமும் தேகபலமுங் குறைவடைந்து நரம்பைப்பற்றிய பலவித நோய்களு முண்டாகும்.

இரண்டாவது சந்ததியில் பிள்ளைகள் முட்டாள்களாயிருப்பர்; அவர்களுக்குச் சிறுவயதிலேயே காக்கை வலிப்புண்டாகும். இன்னும் தற்கொலையும் புரிந்துகொள்வர்.

மூன்றாவது சந்ததியில் பிள்ளைகள் குரூபிகளாயும், அங்கவீனர்களாயும், ஊமைகளாயு மிருப்பர். இவ்வாறே சந்ததிகள் விருத்திக் கிடமின்றி வெகு சீக்கிரத்தில் இருந்த விடந்தெரியாது மறையும். ஆகையால் குடியர்களுக்குப் பிறக்குங் குழந்தைகளை இவ்வித துர்ப்பழக்கங்களுக்கு ஈடுபடா வண்ணம் பலவிதத்திலும் தடுக்கவேண்டும்.

இன்னும் இக்குடியால் குடியர்கள் அழிவதல்லாமல் ஒரு தேசமும் அங்குள்ள பிரஜைகளும் அழிய வேதுவாகிறது. குடி அதிகரித்திருக்குந் தேசங்களில் பிறப்புக் குறைந்து இறப்பு அதிகரிக்கும். பஞ்சமாகாதகங்களும் அங்கு வேரூன்றித் தழைக்கும். இவற்றிற் கெல்லாம் அத்தேசமே உத்திரவாதியாகும். ஆகையால் இதை நாம் எவ்விதத்திலுந் தடுக்க முயலவேண்டும்.

அவ்வாறு தடுப்பதற்குப் பல வழிகளுண்டு:—

ஒவ்வொருவரும் தாங்களே இத்துர்ப்பழக்கத்திற்குத் தங்கள் மனதைப் புகவிடாது தடுத்தல் வேண்டும்.

அரசாங்கத்தாரும் இவ்விதமான போதையைக் கொடுக்கும் பானங்களின் விற்பனையையும் உற்பத்தியையும் சிறுகச் சிறுகக் குறைத்தும், இத்துர்ப்பழக்கமாகிய கொடிய தொத்து நோயைத் தேசத்தில் பரவ வொட்டாது தடுக்க வேண்டிய முயற்சிகளைச் செய்து பிரஜைகளைக் கட்டுமானப்படுத்தி, மீறுபவர்களைத் தண்டிக்கவும் வேண்டும்.

இன்னும் இப் பழக்கமுடைய ஒவ்வொருவரும் அதினின்றும் விலகுவதல்லாமல் ஒவ்வொருவரும் தாங்களே உதாரணமாக விருந்து குடியர்களிடத்தில் குடியாலுண்டாகும் கேடுகளை எடுத்துக் காட்டியும், கற்றறிந்தோரைக் கொண்டு அடிக்கடி ஆங்காங்குக் குடியைப் பற்றிப் பிரசாரஞ் செய்தும், பத்திரிகை புஸ்தகம் இவைகளின் வாயிலாகப் பிரசுரித்து மூட மாக்கட்கு அறிவுறுத்துவார்களாயின் நம் தேசம் வெகு சீக்கிரத்தில் முன்னேற்ற மடையமென்பது நிச்சயம்.

---

## பிரிட்டோரியா வைத்தியசாலை தருமநிதி.

பரிபூரணானந்த பரமாத்மாவின் கிருபையால்,சத்தியம்தவறாது, தருமத்தைமறவாதுசாந்தமேநிலைநாட்டிய ஸ்ரீமது அன்னைத்தையர்களே! சகோதர சகோதரிகளே! அருமைக் குழந்தைகளே! தங்கள் சமுகங்களுக்குப் பணிவான விஞ்ஞாபனம். உலகத்தில் நடந்தேறும் சிறந்த தருமங்களில் வைத்தியசாலை தருமமும் ஒன்றென சகல மதஸ்தரும் அங்கீகரிக்கப்பட்டதாகும். ஆனதுபற்றியே, மாக்ஷிமை தங்கிய இராஜாங்கத்தாரும், கருணைநிறைந்த புண்ணியசீலர்களும் இத்தருமத்தை யிடைவிடாது நடத்திவருகின்றனர்.

அநாதை ஏழை ஜனங்கள் சண்டாள வியாதிகளால் படுந்துன்பங்களை, ஔழ்தங்களால் தீர்க்கும் பொருட்டு நாமும் இயன்றளவு பொருளுதவி புரிவது அழியாதபுண்ணியம். இப்பெரிய தருமத்துக்காகவே சென்ற 1928-ஹும் பிப்ரவரிமீ 11உயிலிருந்து ஆரம்பமாகி, சனிக்கிழமை தோறும் வசூலிக்கப்பட்டது. இத்தருமவேலை 10 மாதங்கள்வரை நடைபெற்றதில், ஒவ்வொரு காருண்ய சகோதர சகோதரிகளும், அருமைக் குழந்தைகளும். அளவுகடந்த அன்போடு அவரவர்களாலியன்ற பொருளுதவி புரிந்துள்ள தொகை (85)எண்பத்தைந்து பவுன். இந்நிதியை பேங்கில் ரொக்கமாகப் போட்டு காபந்துடன் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த எண்பத்தைந்து பவுனுடன் பதினைந்து பவுன் சேர்த்து 100 பவுன்களாக பிரிட்டோரியா வைத்தியசாலை தருமத்துக்குக் கொடுப்பதற்காக, இப்பொழுது தங்கள் தங்களுடைய அன்பான பொருளுதவியைக் கோரி வேண்டிக்கொள்ளப்படுகிறது.

இவ்வைத்தியசாலை தருமத்துக்காக, பொரிளுதவிபுரிந்தும், இனிபுரியும் புண்ணிய சீலர்களுக்கு, கடவுள் கிருபையால் சகலபாக்கியமங்களமுண்டாகும்; அன்றியும், இராஜாங்கத்தாராலும், சர்வ சமய பொது ஜனங்களாலும், நமது இந்தியரிற்பெயரும், புகழ்ச்சியும் என்றும் மாறாமல் உலகமுள்ள பரியந்தம் பிரகாசித்திருக்கும். இத்தருமநிதியை நமது இந்தியர் பெயரால் வைத்திய சாலைக்குச் சேர்ப்பிக்கப்படும். இந்நிதிக்குப் பொருளுதவி புரிந்த புண்ணியசீலர்களின் நாமங்களும், உதவிய தொகையும், வசிக்குமிடமும் ஜாப்தாக்கள் மூலியமாய் பிரசுரித்து, பகிரங்கமாக எங்கு மறுப்பப்படும்.

அன்பே உருவாகக்கொண்டிருக்கும் சகோதர சகோதரிகளே! அருமைக் குழந்தைகளே! இத்தருமநிதிக்குத் தங்களால் கூடுமானவரை உதவிபுரிந்து, இப்பெரும் வேலையைச் சம்பூரணமாய் நிறைவேற்றும்படியாக வேண்டுகோள் செய்யப்படுகிறது. 100 பவுன்களுக்குமேல் எவ்வளவு தொகை சேர்ந்தாலும் வைத்தியசாலைக்குச் சேர்ப்பித்து ஜாப்தாக்களில் கணக்கு விபரம் தெரிவிக்கப்படும்.

வீ. வே. இராமசுவாமி நாயுடு.

## அறிவியல் பகுதி

# வானநூலும் இந்தியப் பஞ்சாங்கமும்

(318-வது பக்கத் தொடர்ச்சி)

[திரு. V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி. எ, பி. எல்., திருநெல்வேலி]

### பஞ்சாங்கம்.

பஞ்சாங்கம் பிரதி தினமும் வானத்தில் தோன்றும் ஜோதிகளின் நிலைமையையும் மாறுதலையும் தெரிவிக்கும் ஓர் அட்டவணையாகும். சாதாரணமாக நாம் பஞ்சாங்கங்களினுதவியினலேயே கிரஹங்கள் உபகிரஹங்கள் முதலியன வானத்தில் எந்த இடத்திலிருக்கின்றன வென்று அறிந்து கொள்ளுகிறோம். இது வரையும் நாம் கூறியவற்றிலிருந்து நக்ஷத்திரங்கள் தவிர வானத்தில் தோன்றும் ஒவ்வொரு ஜோதியும் ஒரு நிமிஷமேனும் ஓயாமல் விரைவாக ஓடிக்கொண்டிருக்கிற தென்பதைத் தெரிந்தோம். அவ்வாறு அவைகள் ஓடிக் கொண்டிருப்பதனால் தான் நம்மால் காலத்தைச் சுலபமாக அளக்க முடிகிறது. அவைகள் ஓடாதொழியின் காலத்தை அளப்பது அநேகமாக முடியாது போய்விடும். உதாரணமாக, பூமி சூரியனைச் சுற்ருமல் தன்னிலையில் நின்று தன்னைத் தானே சுற்றிக்கொண்டிருந்தால் நமக்கு இப்போது ஏற்படும் வருஷங்களும், மாதங்களும், பருவகாலங்களும் ஏற்படா; இரவும் பகலும் மாத்திரம் மாறி மாறி ஏற்பட்டுக் கொண்டிருக்கும். எத்தனை நாட்களில் ஒரு வருஷத்தை முடிக்கிறதென்று நிச்சயப்படுத்த முடியாது. ஆனல் பூமி சூரியனைச் சுற்றி வருவதால் அவ்வாறு ஒரு சுற்றுச் சுற்றி வருங் காலத்தை ஒரு வருஷமென்று நாம் கணக்கிடுகிறோம்.

சாதாரணமாகப் பழக்கத்திலிருக்கும் பஞ்சாங்கங்கள் ஒரு வருஷ காலத்திற்குக் கணிக்கப்படுகின்றன. முக்கியமாக இவைகள் இரண்டுவிதமான சாஸ்திரங்களினுதவியினல் கணிக்கப்படுகின்றன அவைகள் வாக்கிய கணிதம், திருக்கணிதம் என்பவைகள். இவற்றுள் வாக்கிய கணிதம் திருக்கணிதத்திற்கு முன்னலேற்பட்டது. சூரியன், சந்திரன், பூமி இவைகள் ஆகர்ஷண சக்தியால் ஒன்றை யொன்று இழுப்பதாலும், சந்திர வீதியின் உருவம் அடிக்கடி வித்தியாசப் படுவதாலும், இதர பெரிய கிரஹங்களின் ஆகர்ஷண சக்தியாலும், சந்திர கதியால் ஏற்படும் அசைவினலும் சந்திர ஓட்டத்தில் வித்தியாச மேற்படுகிறது. இம்மாதிரியே சூரிய மண்டலத்திலுள்ள இதர பெரிய கிரஹங்கள் ஒன்றையொன்று ஆகர்ஷிப்பதால் அவைகளுடைய ஓட்டத்திலும் வித்தியாச மேற்படுகிறது. இவ்வோட்ட வித்தியாசங்களை வாக்கிய கணிதம் ஏற்பட்ட காலத்தில் நம் நாட்டு வானசாஸ்திரிகள் கண்டு பிடிக்கவில்லை. ஆனல் திருக்கணித காலத்தில் இவைகள் யாவும் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டபடியால் அதில் இவைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனல் திருக்கணித பஞ்சாங்கங்களே வாக்கிய கணித பஞ்சாங்கங்களை விடச் சிறந்தன வென்றேற்படுகிறது.

பஞ்சாங்கங்களின் முக்கிய அம்சங்கள் வருஷம், மாதம், வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் முதலியனவாகும்.

### வருஷமும் மாதமும்.

உலகில் மனிதர்கள் தோன்றின காலத்திலிருந்தே காலத்தை அளப்பதற்கு வானத்திற்றோன்றும் ஜோதிகளினுதவியை நாடி இருந்திருக்க வேண்டும். அவ்வாறிருந்த மக்களுக்கு முதன் முதலாக விசேஷ மாறுதல்களோடு தென்படும் பொருள் சந்திரனே. சந்திரனுக்கு ஏற்படும் அமாவாசையிலிருந்து சந்திரன் வானத்தில் ஒரு சுற்று சுற்றி மறுபடியும் அமாவாசை ஏற்படுங் காலத்தை ஒருமாதமெனக் கணக்கிட்டிருக்கலாம். அதற்கு வெகு காலத்திற்குப் பின்னரே சூரியன் அசையுந் தோற்றத்தைக் கண்டு பிடித்து அதன் கதி மாறுதலினுதவியால் காலத்தை அளவிட்டிருக்கவேண்டும்.

இந்தியப் பஞ்சாங்கங்கள் சாந்திரமான மென்றும், சௌரமான மென்றும் இருவகைப்படும். சாந்திரமான மென்பது சந்திரனுக்கு ஏற்படுங் கலை வித்தியாசங்களைப் பிரதானமாகக் கொண்டு மாதங்களையும் வருஷங்களையும் கணக்கிடுதலாகும். சௌரமான மென்பது பூமி சூரியனைச் சுற்றுவதால் சூரியனுக்கு ஏற்படும் ஓட்டத்தை அனுசரித்து மாதங்களையும் வருஷங்களையும் கணக்கிடுதலாகும். சாதாரணமாகச் சாந்திர மாதங்களை அமாவாசைக் கடுத்த பிரதமையிலிருந்து ஆரம்பித்து அமாவாசையோடு முடிவு செய்கிருர்கள். இம்மாதத்தின் அளவு 29 நாள் 12.மணி 44 நிமிஷம். சௌரமாதம் இதைவிட அதிக நாள்களையுடையதாகையால், ஏறக்குறைய 32 சௌர மாதத்திற்கொரு தடவை ஒரு



சௌரமாதத்தில் இரண்டு அமாவாசைகள் ஏற்படுகின்றன. அதனல் அந்தச் சௌரமான வருஷத்தில் 13 சாந்திரமாதங்க ளேற்படுகின்றன. இவ்வாறிரண்டு அமாவாசைக ளேற்படுங் காலங்களில் முதல் அமாவாசைக் கடுத்த பிரதமையிலிருந்து ஆரம்பமாகும் சாந்திர மாதத்தை அதிக வைசாக மென்றும், இரண்டாவது அமாவாசைக் கப்புறம் ஆரம்பமாகும் சாந்திரமாதத்தை நிஜ வைசாக மென்றுங் கூறுவார்கள். ஏதாவதொரு சௌரமாதத்தில் அமாவாசை ஏற்படாது போய்விட்டால் அதற்குரிய சாந்திரமாதத்தை விலக்கி விடுகிருர்கள். இதற்குக் கூடியமாத மென்று பெயர். கூடிய மாதங்கள் வெகு காலத்திற் கொரு தடவைதான் ஏற்படுகின்றன. இம்மாதிரியான அதிக மாதமும், கூடியமாதமும் சாந்திரமானத்திற்கும், சௌரமானத்திற்கும் ஏற்பட்டிருக்கும் வித்தியாசத்தை நீக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டவைகளாகும்.

சௌரமான வருஷத்தில் நிராயண வருஷம் சாயன வருஷம் என இருவகைகளுண்டு. நாம் முன்னரே கூறியவாறு நிராயண வருஷமென்பது சூரியன் ஒரு நக்ஷத்திரத்திலிருந்து புறப்பட்டு மறுபடியும் அதே நக்ஷத்திரத்திற்கு வருங் காலத்தைக் குறிக்கும். அதனுடைய அளவு 365 நாள் 6 மணி 9 நிமிஷம் 9 செகண்டு. சாயன வருஷமென்பது சூரிய வீதி வானமத்திய ரேகையைத் தெற்கிலிருந்து வடக்காகக் கடக்கு மிடத்திலிருந்து, அதாவது சித்திரை விஷுவிலிருந்து மறுபடியும் அதே யிடத்திற்கு வருங்காலத்தைக் குறிக்கும். அதனுடைய அளவு 365 நாள் 5 மணி 48 நிமிஷம் 48 செகண்டு. இவ்விருவகை வருஷங்களுக்கும் ஒன்றுக்கொன்று சுமார் 20 நிமிஷங்கள் வித்தியாசமிருக்கிறது.

தற்காலப் பழக்கத்திலிருக்கும் சௌரமான பஞ்சாங்கங்க ளெல்லாம் கி. பி. ஐந்தாவது நூற்ருண்டில் அவந்திதேசத்தை ஆண்டுவந்த வராஹமிஹிரன் என்னும் மன்னனல் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களை அனுசரித்துக் கணிக்கப்படுகின்றன. அதன் பின் கடந்த சுமார் 1500 வருஷங்களில் மேற்கண்ட வித்தியாசத்தினல் சுமார் 23 நாட்கள் இவ்விருவகைக் கணிதங்களுக்கும் வித்தியாச மேற்படுகின்றது. சாதாரணமாக நம் நாட்டில் வழங்கி வரும் பஞ்சாங்கங்கள் நிராயண வருஷத்தையே பிரதானமாகக் கொண்ட போதிலும், நமது சாஸ்திரிகள் இவ்வித்தியாசத்தை முற்றிலும் கவனியாமலிருக்கவில்லை. நிராயண கணிதப்படி ஆரம்பமாகும் மாதத்தை ரவி என்றும் சாயன கணிதப்படி ஆரம்பமாகும் மாதத்தை அயனம் என்றும் கூறி ஒரு காரியத்திற்கு இரண்டு பெயர்கள் வைத்து இரண்டு தேதிகள் குறிப்பிடுகிருர்கள். உதாரணமாக, சித்திரை விஷு ஏற்படுங் காலத்தைப் பங்குனி மாதம் 9 தேதி மேஷாயனமென்றும் சித்திரை மாதம் முதல் தேதி மேஷரவி என்றும் எல்லாப் பஞ்சாங்கங்களிலும் குறிப்பிடுகிருர்கள். இப்படியே ஒவ்வொரு மாதப் பிறப்பிற்கும் இரண்டு நாட்கள் குறிப்பிடுகிருர்கள்.

இவைகளில் நாம் எதைப் பின்பற்றுகிறது? முந்தின தினத்தையா அல்லது பிந்தின தினத்தையா? தமிழ் நாட்டிலுள்ள நாம் யாவரும் பிந்தின தினத்தையே பின்பற்றுகிறோம். தீபாவளி, ஸ்கந்த ஷஷ்டி, கார்த்திகை முதலிய விசேஷ நாட்களைச் சைவத் தீபாவளி, சுமார்த்தத் தீபாவளி என்று வேறுபடுத்தி அர்த்தமில்லாத வீண் தர்க்கத்தில் காலங்கழித்து வரும் பெரியார்கள் இதைச் சற்றுக் கவனிப்பார்களாயின் விரதங்களும் விசேஷ நாட்களும் பல வருஷங்களுக்கு முன்னரே அர்த்தமில்லாதவைக ளாகிவிட்டனவென் றறிவார்கள். வான சாஸ்திர விதிப்படி நாம் இதை ஆராய்ச்சி செய்வோம். விஷு என்ருல் இரவும் பகலும் ஒரே அளவுடைய நாள் என்று பெயர். பஞ்சாங்கங்களில் கொடுத்திருக்கும் இரண்டு நாட்களில் எந்த தினத்தில் இரவும் பகலும் ஒரே அளவுடையனவாக இருக்கின்றனவென்று நாம் கவனித்தால் முந்தின தினத்தில் தான் அவ்வாறிருக்கிறது. ஆகையால் சித்திரைவிஷு, அற்பிசி விஷு முதலிய புண்ணிய தினங்களை முந்தின தினத்தில் அனுஷ்டித்தால் தான் சரியானதாகும்.

சித்திரை விஷுவை 23 தினங்களுக்கு முன் அனுஷ்டிக்க வேண்டுமென்று நாம் எப்பொழுது ஒப்புக் கொண்டோமோ அப்பொழுதே சௌரமான வருஷத்தையும் அன்றே ஆரம்பிக்க வேண்டுமென் றேற்படுகிறது. மாத ஆரம்பங்களையும் அதற்கேற்றபடி மாற்றவேண்டும். அதாவது மாதங்களெல்லாம் நிராயண மாதமாக இராமல் சாயனமாதமாக அமைக்கப்படல் வேண்டும். வருஷ ருதுக்களும் இவ்வாறு நம்மால் தப்பிதமாகவே அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக வசந்தருது தற்காலப் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டிருக்கிறபடி சித்திரை மாதம் முதல் நாளிலிருந்து ஆரம்ப மாகவில்லை. பங்குனி மாதம் 9-சு தேதியிலேயே ஆரம்பமாகிறது. ஹிந்துக்களின் முக்கிய பண்டிகைகளி லொன்ருகிய உத்தராயண புண்ணிய காலமும் தப்பிதமாகவே அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. தெற்கு முகமாக நகர்ந்து கொண்டிருந்த சூரியன் உத்தராயண தினத்தன்று வடக்குமுகமாக நகர ஆரம்பிக்கிறது. அன்றுதான் சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கிறது. அந்தத்தினத்தை மகராயனம் என்றும் மகரரவி என்றும் 23 நாட்கள் வித்தியாசமுள்ள இரண்டு தேதிகளால் குறிப்பிட்டிருக்கிருர்கள். சூரியன் தெற்கிலிருந்து வடக்கு முகமாக முந்தின தினத்திலேயே திரும்பி விடுகிறது. சூரியன் வடக்கு முகமாகத் திரும்பி 23 நாட்களுக்கு அப்புறம் "இன்று உத்தராயண புண்ணிய காலம், இன்றுதான் சூரிய பகவான் வடக்கு முகமாகத் திரும்புகிருர்" என்று சொல்லிக்கொண்டு அந்த நாளை விசேஷ நாளாகக் கொண்டாடுகிறோம். இன்னும் இவ்வாறே தீபாவளி முதலிய எல்லாப் பண்டிகை நாட்களையும் நாம் தப்பிதமாகவே அனுஷ்டிக்கிறோம். என்னே நம் செய்கை! இன்னும் நமது பஞ்சாங்கங்களைச் சீர்திருத்தம் செய்யாது சுமார் 10,000 வருஷங்க

ளிருப்போமாயின், நாம் உத்தராயணமென்று சொல்லும்போது சூரியன் தக்ஷிணமுகமாக நகர்ந்துகொண்டிருக்கும்.

நமது பஞ்சாங்கங்களைச் சீக்கிரம் சீர்திருத்தம் செய்யவேண்டும். பங்குனி மாதம் 9-ம் தேதியைச் சித்திரை முதல் நாளாகக் கொள்ளல் வேண்டும். இடையிலுள்ள 23 நாட்களையும் விட்டுவிட வேண்டும். மேஷராசியை சுபதியிலிருந்து ஆரம்பிப்பதற்குப் பதிலாக உத்திரட்டாதியின் பிற்பகுதியிலிருந்து ஆரம்பிக்கவேண்டும். ஏனெனில் வருஷா வருஷம் மேஷசங்கராந்தி கொஞ்சங் கொஞ்சமாக மேற்குமுகமாக நகர்ந்துகொண்டு போய் இப்போது உத்திரட்டாதியின் மத்திய பாகத்திலேற்படுகிறது. இதற்குமுன் பல தடவை பல தேசங்களில் இம்மாதிரி சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும், அவந்தி மன்னனாகிய வராஹமிஹிரனுடைய சீர்திருத்தங்களுக்கு முன் கார்த்திகை நக்ஷத்திரத்திலிருந்தே மேஷராசி ஆரம்பிக்கப்பட்டதென்பதையும் அறிவோமாயின், இச்சீர்திருத்தத்திற்கு நாம் யாதொரு ஆக்ஷேபணையுஞ் செய்யமாட்டோம்.

சூரிய வீதியை 30 பாகைகளுள்ள பன்னிரண்டு சம பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் ஒரு ராசி என்றழைக்கிறார்கள். அவைகள் முறையே மேஷம், ரிஷபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்றழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு ராசியிலும் சூரியன் சஞ்சரிக்கும் காலம் ஒருமாதமென்றழைக்கப்படுகிறது. சூரிய வீதிக்கு அருகாமையிலோடும் சந்திர வீதி $13\frac{1}{3}$ பாகைகள் கொண்ட 27 சமபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும், ஒவ்வொரு பாகமும் அப்பாகத்திலுள்ள முக்கியமான நக்ஷத்திரங்களின் பெயரால் அழைக்கப்படுகிறதென்றும் முன்னரே கூறியுள்ளோம். இதனால் $2\frac{1}{4}$ நக்ஷத்திரம் ஒரு ராசியாகிறதென்றும் சூரியன் மாத மொன்றுக்கு $2\frac{1}{4}$ நக்ஷத்திர தூரம் நகர்கிறதென்றும் அறிகிறோம். ராசிகளெல்லாம் சமதூரமாயின் சூரியன் சில ராசிகளில் அதிக நாட்களும், சில ராசிகளில் குறைந்த நாட்களும் சஞ்சரிக்கக் காரணமென்ன? சூரியன் பூமியின் வீதி மத்தியிலிராமல் கொஞ்சம் ஒதுங்கி இருக்கிறது. இதனால் சிலகாலம் பூமி விரைவாகவும், சிலகாலம் மெதுவாகவும் நகர நேரிடுகிறது. இக்காரணத்தினால் சூரியன் சில ராசிகளில் அதிக நாட்களும் சில ராசிகளில் குறைந்த நாட்களும் சஞ்சரிக்கிறது போல் தெரிகிறது.

இப்பன்னிரண்டு மாதங்களையும் சிலர் சித்திரை முதல் பங்குனி ஈறான பெயர்களாலும், சிலர் மேஷ முதல் மீனம் ஈறான பெயர்களாலும் அழைக்கின்றார்கள். சாந்திரமானிகள் சந்திர கலைகளினுதவியினால் மாதத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கும்போது அந்தந்த மாதத்தில் எந்த நக்ஷத்திரத்தில் பௌர்ணமி ஏற்படுகிறதோ அந்த நக்ஷத்திரத்தின் பெயரை அந்தந்த மாதத்திற்குக் கொடுத்து வந்திருக்கிறார்கள். பின்னர் சௌரமான வருஷத்தைப் பின் பற்றும்போது அதே பெயர்களைச் சௌரமான மாதங்களுக்குக் கொடுத்திருக்கிறார்களென்று யூகிக்க வேண்டி இருக்கிறது. உதாரணமாகப் பெரும்பாலும் சாந்திர சைத்திர மாதத்தில் சித்திரை நக்ஷத்திரத்திலும், சாந்திர வைசாக மாதத்தில் விசாக நக்ஷத்திரத்திலும் இன்னும் இப்படியே பௌர்ணமிகள் ஏற்படுகின்றன. சாந்திரமானமல்லாது முதலிலேயே சௌரமானத்தைப் பின் பற்றியவர்களும், சாந்திரமானத்தை முற்றிலும் கைவிட்டவர்களும் மேஷம் ரிஷபம் முதலிய பெயர்களையே மாதங்களுக் கிட்டிருக்கிறார்கள். இவ்விரண்டிலும் சௌரமானமே மிகவும் நுல்லியமானது.

(தொடரும்.)


# கண்கட்டு வித்தைகள்

## நான்கு பாகங்கள் ரூ. . 2

கண்கட்டு வித்தையால் கற்பம் வசியமும், கொள்ளை சொக்குத்தூள் குறிசொல்லு மூலிகை, புருஷவசியம் புகல் ஸ்திரீவசியமும், வரிசை வழங்குதல், வாத்தியஜாலம், மூலிகைஜாலம், மோகனஜாலம், தெய்வஜாலம் நிவர்த்திஜாலம், மயேந்திரஜாலம் மாம்பழஜாலம், சமுத்திரஜாலம் சங்கிலிஜாலம், அமேத்தியஜாலம், அக்கினிஜாலம், வாத்தியஜாலம், மாடன் மந்திரம், எக்காளைஜாலம், எலுமிச்சை வித்தை, கோகர்ணஜாலம், கவில்ஜலஸ்தம்பனம், பத்திரகாளிவசியம் ஜெப்பிடுவித்தை, பாதாள அஞ்சனம் பார்வைமை குறிசொல்ல, இத்தனை ஜாலவித்தைகள்ற்கலாம்.

தி ஸவுத் இந்தியன் புக் டிபோ, நெ. 17, பவழக்காரத் தெருவு சென்னை




# செங்குந்த யாத்திரைவாசி

## கந்தமாதனத்தில் யான் கண்ட கனு

### நாரத - வீரவாகு வாக்குவாதப் படலம்

(339-ம் பக்கத் தொடர்ச்சி)

**முருகப்பெருமான்:**—நாரதரே! க்ஷேமமா? பூலோகத்தில் என்ன விசேஷம்? நம் அடியார்கள் எல்லாம் க்ஷேமமா?

**நாரதர்:**—'வெற்றிவேலே உற்றதுணை' என்றிருக்கும் அடியேனுக்கு க்ஷேமத்திற்கென்ன குறைவு. பூலோகத்தில் அடியார்களெல்லாம் க்ஷே-மந்-தான், அ. இ. க-லி-யு-கமல்-ல-வா.

**முரு:**—முனிசிரேஷ்டரே! என்ன இழுப்பாய் விடுகிறீர்? சொல்ல வந்ததைச் சொல்லுமே.

**நார:**—சொல்-லா-மலென்ன. அளவற்ற புண்ணிய தவங்களும், தீர்த்தங்களும், சிவாலய குகாலயங்களும் நிறைந்துள்ள பரதகண்டம் தற்போது தன்து பண்டைப் புகழை முற்றும் இழந்து நிற்கின்றது. தெய்வங்களுக்கெல்லாம் தாயகம் போன்றதும், பூமாதேவிக்கு முகம் போன்றதுமான பரதகண்டம் நிலைகுலைந்த தென்றால் தேவதைகளின் கதி என்ன! அதனாற்றான் மூலைக்கொரு தேவதையாகப் பறந்தோடிப் போய்விட்டன. அஷ்டலக்ஷ்மிகளில் ஒருத்தியாவது அங்கில்லை. சரஸ்வதியும் அவ்வாறே. அத்தேவதைகளை இப்போது பரத கண்ட வாசிகள், அதாவது பூசாரிகள் அவை போய் இருக்கும் வெளி நாடுகளுக்குச் சென்று கொண்டுவரப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்கிறார்கள். ஆனால் தேவதைகளோ பரதகண்டம் இருக்கும் திசையையும் திரும்பிப் பாரோம் என்று சொல்லுகின்றன. உண்மை இதுவாக (உண்மை) அடியார்களை எங்கே காண்பது? இதற்கெல்லாம் காரணம் என்ன? வேலியே பயிரை மேய்கிறது.

**முரு:**—விளக்கமாகச் சொல்லும்; மறைப்பானேன்?

**நார:**—ஆமாம், யாவரும் அறியும்படிச் சொல்லவேண்டியதுதான். ஆனாலும் காலம் கெட்டுப்போய் விட்டது. உண்மையைச் சொன்னால் உறவற்றுப்போகும் தேவரீர் தம்பிமார் ஒன்பதின்மரோடு பூதகணங்கள் புடைசூழச் சென்று தேவகண்டகராகிய சூரனுதியரை அழித்த காலமாகுமா இது? தேவரீர் சரவணப் பொய்கையில் விளையாடிய நாளாகுமா இது? எனது மாதாவாகிய இவ்வள்ளி நாயகியார் தினைப்புனத்திலிருந்ததையும், அவரது வனப்பு குணம் முதலியவற்றையும்பற்றி அடியேனால் கூறக் கேட்டுச் சென்று அவரைச் சிறை எடுத்த தினமாகுமா இது? இந் நவவீரர்கள் முசுகுந்தனுக்குப் படைத்துணையாகச் சென்ற காலமாகுமா இது? என்றாலும் சொல்லுகிறேன். வேலி பயிரை மேய்கிறதென்பது உண்மையிலும் உண்மை. இதையான் இரண்டு வகையிற் கண்டுள்ளேன்.

முதலாவதாக, உண்மைச் சாஸ்திரங்களால், பிரதி பாலிக்கப் பெறும் சைவம் முதலிய சமயங்களைக் காத்து உலகத்தில் பரப்பி, உயிர்களை நல்வழியில் படுத்தும் பொருட்டு ஏற்படுத்தப்பெற்ற ஆச்சாரியர்களும் குருமார்களும் தாங்களே ஒழுக்க நெறியினின்று பிறழ்ந்து ஏனையோரையும் அநாசாரப் படுகுழியில் வீழ்த்தி, உண்மைச் சமய நூல்களைத் தாங்களும் கற்றுணராது, பிறரையும் கற்க விடாது மக்களது மூடத்தனத்தையே ஆதாரமாகக் கொண்டு பொருள் பறித்துண்ணும் கருத்துடையவராய், தம் மிஷ்டமானவற்றை எல்லாம் சமய நெறி எனப் போதித்துச் சமயங்களைப் பாழ்படுத்தினர். ஆகவே வேலியே பயிரை மேய்கிறதென்றேன்.

இரண்டாவதாக, முற்காலத்தில் சூரபத்மாதியர் கொடுமையால் பூலோகத்தில் நிறைந்திருந்த அதர்மத்தை ஒழிக்கும் பொருட்டுத் தேவரீர் தம்பிமாரோடு சென்று அவ்வரக்கர் குலத்தை வேரறக் களைந்து தர்மத்தை நிலை நாட்டிய தன்றிப் பூவுலகில் மறுபடியும் அதர்மம் தலை காட்டா வண்ணம் இதோ வீற்றிருக்கும் நவவீரசிங்கங்களை முசுகுந்தச் சக்கரவர்த்தியின் வேண்டுகோளின்படிச் சேனைத் தலைவராய்ச் சோழநாட்டிற்கு அனுப்பி யருளினீர். பின்னரும் தர்மத்தை என்றும் காக்குமாறு நவவீரர் வழி வந்த செங்குந்த வீரர்களைத் தென்தமிழ் நாட்டில் குடியேற்றி வைத்தருளினீர். இதனால் தர்மத்தைக் (வைதிக லௌகிக தர்மங்களை) காக்கும் பொருட்டே செங்குந்த வீரர்கள் பூலோகத்தில் தோன்றினார்கள் என்று யாவரும் அறியக்கிடக்கிறதல்லவா? ஆனால் அவர்கள் இப்போது தர்மத்தை அடியோடு கை நழுவவிட்டு அதன் விரோதியோடு உடன்படிக்கை செய்துகொண்டு அதற்குத் துணையிருந்தும் வருகிறார்கள். அம்மட்டோ! அவர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய சிறப்புக் குணங்களையும் செயல்களையும் இவர்களுக்கு இயற்கையானவை என்று உலகம் சொல்லு

மாறு மேற்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். இதனாலும் வேலி பயிரை மேய்கிறதென்றேன். அடியேன் எதையும் தக்க ஆதாரமின்றிச் சொல்ல மாட்டேன் என்பது தேவரீருக்குத் தெரியாததல்ல.

வீரவாகுதேவர்:—(கோபத்தோடு) ஓய் நாரதரே! யோசித்துப் பேசும்.

நார:—(பயந்தவரைப் போல்) ஈடும் எடுப்புமில்லாத வீரர் பெருமானே! யான் யோசித்தே பேசுகிறேன்.

வீர:—செங்குந்தர்கள் தங்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் சிறப்புக் குணங்களை விடுத்தார்கள் என்றீர்களே அதை ரூபிப்பீர் ஒன்று சொல்லும் பார்ப்போம்.

நார:—ஒன்றல்ல; பல எடுத்துக் காட்டுவேன். தாங்கள் விருப்பத்தின்படி இப்போது ஒன்றை மாத்திரம் சொல்லுகிறேன். போர் வீரர்களுக்கு அவசியம் வேண்டப்படுவது ஒற்றுமையும், தம் தலைவர் கட்டளையைத் தட்டாமையு மன்றோ? அவ்வாறாக, இப்போது கக்ஷி இல்லாத ஒரு செங்குந்த கிராமத்தைக் காண்பது அருமையிலும் அருமையாயிருக்கிறது. செங்குந்தர்கள் குடியேறிய பிரதேசங்களை 72 நாடுகளாகப் பிரித்து அவற்றிற்குத் தலைமையாக ஒரு மகா நாட்டை ஏற்படுத்தினீர்கள். இப்போது பார்த்தாலோ மகாநாடு ஒன்றல்ல; பல. குலத்தலைவராகிய ஆண்டவரும் இப்போது ஒருவரல்ல; பலர். ஒரு சிறு கிராமத்தில் நான்கு குடும்பங்கள் சேர்ந்த ஒரு கக்ஷிக்குத் தலைவராய் நாட்டாண்மை பட்டம் பெற்ற ஒருவர், அவ்வூரார் என்ன சொல்லியும் கேளாமல் ஊர் கெட்டாலும் (கக்ஷிப்பிரதி கக்ஷியால்) தாம் நாட்டாண்மைக்காரராகவே இருக்கவேண்டுமென்ற (முட்டாள்) பேராசையால் ஊரை ஒன்றுபடுத்த இடங்கொடுப்பதே இல்லை. சில நாட்டுத் தலைநகர்களில் நாட்டாண்மை பெரியதனம் என்பதே கிடையாது. அத்தகைய ஊர்களிலுள்ள ஒவ்வொரு செங்குந்தனும் (குழந்தைகள் உள்பட) நாட்டாண்மை அதிகாரம் செலுத்துவான். இப்படிப்பட்ட ஊர் எவ்வளவு ஒற்றுமையோடும் க்ஷேமத்தோடும் இருக்குமென்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். நாட்டுத் தலைநகரே இவ்வாறிருக்குமானால் கிராமங்களைப் பற்றிச் சொல்லுவானேன்.

அநேக ஊர்களில் இரண்டு முதல் பத்துக் கக்ஷிகளும், சில ஊர்களில் கக்ஷிக்குள் கக்ஷிகளும், தெருவிற்கொன்று முதல் பல கக்ஷிகளும், மற்றுஞ் சில இடங்களில் வீட்டிற்கொரு கக்ஷியாகவும் இருக்கின்றன. இதனாலன்றோ தற்போதய அரசாங்கத்தார் செங்குந்தர்களைப் படைவீரர்களாகச் சேர்ப்பதில்லை? இதுவே போதாதா! நான் எதையும் ஆதாரமின்றிச் சொல்லவே மாட்டேன்.

தங்கள் வழித்தோன்றல்களாகிய செங்குந்தர்களைப் பற்றிய உண்மைகளைத் தாங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமல்லவா? அன்றியும், ஒருவரிடத்துள்ள குற்றத்தை அவர் எதிரிலாவது அவர் க்ஷேமத்தைக் கோருவோரிடத்திலாவது எடுத்துச் சொல்லுவது நன்மையின்பாற் படுமேயன்றித் தீமையின்பாற் படாது. 'நகுதற்பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண், மேற்சென் றிடித்தற்பொருட்டு' என்பது மறைவாக்கன்றோ? தாங்கள் இங்கு வீற்றிருப்பதை அறிந்தேதான் இதைச் சொல்ல முன் வந்தேன். தேவரீர் எனக்கு ஆப்த நண்பராகையால் இவ்விஷயத்தில் எனக்குப் பாதகமுண்டல்லவா?

வீர:—ஐயா நாரதரே! குற்றமில்லாதவர்கள் யார்? 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்' என்னும் திருக்குறளை நீர் அறியீரோ? அக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் விசேஷ உரையில் 'மிகை யுடையவற்றை மிகை யென்றார். அவையாவன தலைமையானுக பன்மையானுக உயர்ந்தன' என்ற விடத்துத் தலைமையானுக என்றதைக் கவனிப்பீராக. 'சிவத் தொண்டையும் அடியார்த் தொண்டையும்' விடத்தலைமையான வேறொரு தர்மமுண்டோ? 'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்.' இதில் ஒரு எழுத்துக்கூடவிடாமல் பரிபாலித்து வருபவர்யார்? தண்தமிழ் நாட்டில் சிவனடியார்களைப்போற்றி உபசரிப்பவர் யார்? செங்குந்தர்களன்றோ? இக்குணம் ஒன்றே எத்துணைத் தீமையையும் தகித்துச் சாம்பலாக்குமன்றோ? நீர் திரிலோக சஞ்சாரியா யிருந்தும் இவற்றையெல்லாம் யோசியாது பேசுகிறீரே.

நார:—நான் யோசிக்காமல் பேசவேமாட்டேன். உண்மையைத் தக்கோரிடத்து உரைப்பதையே முதற் கடமையாகக் கொண்டுள்ள யான் யோசிக்காமல் பேசுவேனு? விசாரணையில் உண்மை விளங்காமற் போகாது. யாரிடத்தும் உண்மையைப் பேச யான் பின்வாங்கவே மாட்டேன். பொது நன்மையின் பொருட்டே யான் எதிலும் தலையிடுவது வழக்கம். அபிமானம் என்னும் கண்ணுடி கொண்டு விஷயத்தை நோக்குவோர்க்கு உண்மை ஒருபோதும் விளங்காது.

முரு:—நாரதரே! விஷயத்தைப் பூர்த்தி செய்யும்.

நார:—இதுதான் நான் சொல்லவந்தவிஷயம். நான் நன்மைக்குப் பாடுபட்டாலும், இப்படித்தானே என் பெயர் கெட்டுப் போகிறது. அதிலும் இந்தக் கலியுகத்தில் எனக்கு மதிப்பே கிடையாது. நாரதன் என்றால் கலகக்காரன் என்று அகராதிகளிலும் சேர்க்கப்பட்டு வருகிறதே! ஒரு கலகக்காரனைக் கண்டால் 'கலகத்திற்கு நாரதன் தானே' என்கிறார்கள். இதை யெல்லாம் பார்த்துத்தான் என் முயற்சியை வரவரக் குறைத்துக் கொண்டு வருகிறேன். சீக்கிரத்திலேயே என் உத்தியோகத்தை ராஜீனுமா செய்து விடலாமென்று யோசிக்கிறேன். காலம் வர வரக் கெட்டுப் போய் விட்டது.



முரு:—உம்முடைய ஸ்தானத்தில் வேறு யாரை நியமிக்கலாம்? யாரையாவது தயார் செய்திருக்கிறீரா?

நார:—ஸ்வாமீ! என்வேலையில் முக்காற்பாகத்தை தந்தி, தபால், பத்திரிகை முதலியவற்றிற்குக் கொடுத்துவிட்டேன். என் வேலையை இப்போது தந்தி தபால் செல்ல இயலாத இடங்களுக்கு மாத்திரம் சுருக்கிக்கொண்டேன். ஆகவே லோகாந்தரச் செய்திகள் மாத்திரம் என்னால் கொண்டுபோகப்படுகின்றன. ஏனெனில் கலி முதிர முதிரப் போலித் துறவிகள் மலிந்து வருகின்றனர். அதனால் என்னைப் போன்றவர்களுக்கும் செல்வாக்குக்குறைந்து வருகிறது. இனிஇந்தத் தொத்துவியாதி மற்ற லோகங்களுக்கும் பரவும்போ லிருக்கிறது. இதற்கிசைப் பூலோகத்திலுள்ள ரசாயன சாஸ்திரிகள் லோகாந்தர தந்தி ஏற்படுத்த முயன்று வருகிறார்கள். நான் இனி ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

வீர:—முனிவரே! சொல்ல வந்தது முடிந்ததா?

நார:—அறுமுகற்கோர் அரியதுணைவ! இன்னும் பூர்த்தியாகவில்லை. சொல்லத்தானே வந்திருக்கிறேன். தங்களுக்கும் தங்கள் துணைவர்களுக்கும் முகங்கள்சிவந்து கண்களில் நெருப்புப்பொறி பறக்கிறது. சாந்தமாய்க் கேட்பதானால் சொல்லுகிறேன்.

வீர:—உண்மையைக் கூறும். கோபித்துக்கொள்ளவில்லை. ஆனால் நீர் சொல்லும் ஒவ்வொன்றையும் ருஜுப்படுத்தவேண்டும்.

நார:—பொய் சொல்வானேன்? எனக்கென்ன வந்தது? உள்ளவற்றை உள்ளவாறே கூறுவதுதானே என் கடமை. ஒவ்வொன்றையும் ருஜுப்படுத்தத் தயாராயிருக்கிறேன். சாந்தமாக மாத்திரம் கவனித்துக் கேளுங்கள். எக்காலத்திலும் யாரிடத்தும் பொய் பேசாத யான் சந்நிதானத்தில் தானு பொய் சொல்லப் போகிறேன்?

வீர:—எங்களுக்குக் கோபமில்லை 1008 அண்டங்களையும் பொதுநீக்கியாண்ட சூராதிகளை அழித்து விண்குடியேற்றிய நம் வழித்தோன்றிய செங்குந்தர்கள்! மூவுலகும் போற்றும் புகழ்பெற்ற வீரச் செங்குந்தர்கள்!! இதோ வீற்றிருக்கும் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் வழிவந்த செங்குந்தர்கள்!!! தர்மத்திற்காகவும் புகழுக்காகவும் தங்கள் உயிரைக் கொடுத்த செங்குந்தர்கள்!!!! இத்தகைய கேவலமான ஸ்திதிக்கும் வந்துவிட்டார்களா! என்றுதான் வருந்துகிறோம்.

நார:—தங்களுக்கு வருத்தமாயிருந்தால் நிறுத்திக் கொள்ளுகிறேன்.

வீர:—இல்லை; இல்லை! இவ்வளவு தூரம் வந்த பிறகும் தெரிந்துகொள்ளாம லிருக்கலாமா? தெரிந்தவற்றைச் சொல்லும். சீக்கிரம் சொல்லும்.

நார:—எம்மையாளுடைய இறைவனே! நற்றிறல் வாய்ந்த நவவீரர்களே! யான் சொல்ல வேண்டியவதைச் சுருக்கமாகவே சொல்லுகிறேன். பரத கண்டத்தில் தற்போது சூரபத்மனைக் காட்டிலும் பன்மடங்கு திறல் வாய்ந்த வேறொரு சூரன் தோன்றியுள்ளான். இவ்வரக்கன் மிகுந்த தந்திரசாலி. இவன் வெளிப்படையாகத் தோன்றுவதில்லை. சூக்கும தேகங்கொண்டு உலாவி வருகிறான். செங்குந்தர்கள் அன்று சூரபத்மாதியரை அழித்த வீரர்களின் வழிவந்தவர்கள் என்பதை நன்குணர்வான். ஆகையால் தனது ஆட்சியைப் பரதகண்ட முழுதும் பரப்ப வேண்டுமாயின் முதல் முதல் செங்குந்தர்களைச் சீர்குலைத்துத் தன் வசமாக்க வேண்டும் என்கிற எண்ணம் கொண்டு அஞ்ஞானமென்னும அவ்வல்லரக்கன், வேற்றுமை, தரித்திரம் என்னும் இரு தம்பியரோடும் (நால்வகைச் சேனைகளையும் பிறவற்றையும் விரித்துரைக்க என் மனம் கூசுகிறது) புறப்பட்டுச் செங்குந்தர்களை எதிர்த்துப் போர்செய்யத் தொடங்கினான். அநேக யுத்தங்கள் நடந்தன. கடைசியாய்ச் செங்குந்தர்கள் முறியடிக்கப்பட்டு லக்ஷக்கணக்கானவர்கள் பகைவனுக்கு அடிமைகளானுர்கள்.

ஆகவே அவன் ஏவலின்படி பல அதர்மங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். செங்குந்த உலகம் தலைகீழாயிற்று. ஒற்றுமை குலைந்தது. தெய்வ பக்தி முடி சாய்ந்தது. புலாலுண்ணவும் கள் குடிக்கவும் ஆரம்பித்தார்கள். சுருக்கமாக எல்லாத் துறைகளிலும் பிற்போக்குள்ளவர்கள் இவர்களே என்று சொல்லும்படி ஆனுர்கள். இதனால் பிற இனத்தவரின் நன்மதிப்பையும் இழந்தார்கள். இது பெரும்பான்மையோரது நிலைமையாகும். என்றாலும் உயர்குணம் வாய்ந்த உத்தமர்களும் இல்லாமற் போகவில்லை. இவ்வளவே யான் சொல்ல வந்தது. ருஜு வேண்டுமானால் அவ்வவ்விலாகா அதிகாரிகளை விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

# செங்குந்தர் கிளர்ச்சி

## செங்கற்பட்டு ஜில்லா

### காஞ்சிபுரம் செங்குந்த மகாஜன சங்க நிருவாகக் கூட்டம்.

பிரமோதூத ஆடி 26-ம் நாள் மாலை 5 மணிக்குச் செங்குந்தர் இரவு பாடசாலையில் சங்கத்தின் நிருவாகக் கூட்டம் நடைபெற்றது.

திருவாளர்கள் ம. த. சாமிநாத முதலியார், திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார், ம. கங்காதர முதலியார், அ. செல்லபெருமாள் முதலியார், சி. அருணாசல முதலியார், D. முத்துக்குமாரசாமி முதலியார், P. துரைசாமிமுதலியார், வச்சிரவேல் முதலியார் B.A., பக்கிரிசாமி முதலியார், முதலியவர்கள் விஜயஞ் செய்திருந்தனர். திரு. ம. த. சாமிநாத முதலியார் தலைமை வகித்தனர்.

1. நமது பாடசாலையின் செலவுக்காக நன்கொடை, உண்டி வசூல், சந்தா முதலியன வசூல் செய்து பாடசாலையை இன்னும் நல்ல நிலைமையில் நடத்தவேண்டு மென்று தீர்மானிக்கப் பெற்றது.

2. இதுவரையும் மகா நாட்டுக்கு வசூலான வரவு செலவு கணக்குகளும் பாங்கி ரசீதும் அடுத்த புதன்கிழமைக் கூட்டத்தில் காரியதரிசி ஆசர்ப்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது.

8. திருச்செங்கோடு T. R. கந்தப்ப முதலியாரவர்கள் 10-8-30-ல் இவ்வுலக வாழ்க்கையை நீத்து மரணமடைந்ததற்கு இக்கூட்டத்தார் தமது ஆற்றொணுத் துயரத்தை அன்னார் குடும்பத்தினருக்கு அனுதாபத்துடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.

பின் இரண்டாவது மகா நாடு சம்பந்தமாக நெடுநேரம் பேசி, இவ்வருடத் தைமாதத்தில் அவசியம் நடத்தவேணு மென்றும் அதற்கான வசூல் வேலைகளை விரைவாகச் செய்யவேணு மென்றும் முடிவுசெய்யப் பெற்றபின் கூட்டம் இனிது நிறைவேறியது.

* * *

### காஞ்சீபுரம் செங்குந்த மகாஜன சங்கம் அமாவாசை பொதுக்கூட்டம்

சென்ற ஆவணி 7உ மாலை 6 மணிக்கு மண்டபத் தெரு மண்டபத்தில் சங்கப் பொதுக்கூட்டம் திரு. இரத்தின முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. 'நமது முன்னேற்றம்' என்பதுபற்றி நாய்க்கன் பேட்டை தணிகைராயன் என்னும் ஹைஸ்கூல் மாணவர் ஒரு அழகானசொற்பொழிவியற்றினார். பின் இரண்டாவது மகாநாடு என்பதுபற்றி திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார் பேசுகையில் ஷை மகாநாட்டு வரவேற்புக் கழகத்தார் இதுவரையில் இருந்து வந்த நித்திரை விட்டெழுந்து இனியாவது சுருசுருப்புடன் வேலை செய்து கூடிய சீக்கிரம் மகாநாட்டைக் கூட்ட முயல வேண்டுமென்றும், உலகத்திலுள்ள செங்குந்த மக்கள் அனைவரும் பேராவலுடன் எதிர்பார்த்திருக்கும் மகாநாட்டை அடுத்த தையிலாவது கூட்டாவிடில் பொதுவாக நமது ஜில்லாச் செங்குந்தர்களும் சிறப்பாக இந்நகரத்தாருக்கும் அபகீர்த்தி யுண்டாகுமென்றும் எடுத்துக் கூறினார்.

பின் காஞ்சிச் செங்குந்த மாணவர் கழகத்தாரால் இரவு பாடசாலைக்காக வசூலிக்கப்பட்ட உண்டி வசூல் விபரம் படித்துக் காட்டப்பட்டு வந்தனோபசாரத்துடன் 9-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

* * *

### சவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் திருநாட் கொண்டாட்டம்.

4-9-30உ மாலை 6 மணிக்கு மண்டபத்தெரு மண்டபத்தில் ஒட்டக் கூத்தர் புலவர் பெருமானின் உருவ வழிபாடு செய்யப் பெற்றுக் கடவுள் வணக்கம் நடத்தப் பெற்றது.

பின் ஐயன்குளம் திரு. க. பொன்னுசாமி முதலியாரவர்கள் தலைமை வகித்துக் "கூத்தர் பெருமை" என்னும் விஷயமாக நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்கள். "கல்வி" என்பதாகத் திரு. சிதம்பரமுதலியார் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்கள். பின்பு திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., அவர்களால் வந்தனோபசாரங் கூறப்பெற்றதும் சந்தன தாம்பூலாதிகள் விநியோகங்களுக்குப் பின் கொண்டாட்டக் கூட்டம் இனிது நிறை வேறியது.

C. அருணசலம்,
காரியதரிசி.

---

## திருச்சி ஜில்லா.

### உன்னியூர் செங்குந்தர் சங்கம்.

17-9-30தேதி யன்று மாலை 5½ மணிக்கு உன்னியூர் செங்குந்தர் சங்கம் போர்டு பாடசாலையில் திரு. R. மாணிக்கமுதலியாரவர்களது தலைமையில் கூடியது. சங்க மெம்பர்களும், இதர கிராமப் பொது ஜனங்களும் குழுமியிருந்தனர். கடவுள் வணக்கம் பாடியபின் காரியதரிசியால் சென்ற கூட்டத்தின் நடவடிக்கையை வாசித்துக் காட்டிய பிறகு அன்பர்களிற் சிலர் சங்கமும் நமது கடமையுமென்பது பற்றி உபந்யாசித்தனர். பின்னர் அடியிற் கண்ட தீர்மானம் ஒன்று தலைவரால் பிரேரேபிக்கப் பெற்று எல்லா மெம்பர்களாலும் ஏகமனதாய் ஆமோதிக்கப் பெற்றது.

### நிறைவேறிய திர்மானம்.

திருச்சி ஜில்லா கிராமத்தொகுதிக்கு நடந்த சென்னை சட்டசபை எலெக்ஷனில் அபரிமிதமான எண்ணிக்கை பெற்று, தேர்ந்தெடுக்கப் பெற்ற பொதுஜன நலப்பிரியர்களான மின்னும்



பள்ளி ஜமீன்தாரரும், திருச்சி ஜில்லாபோர்டு உப தலைவருமாகிய, உயர் திருவாளர். K. C. M. வெங்கிடாஜல ரெட்டியார் அவர்களையும், திருச்சி ஜில்லா போர்டு தலைவரும் பிரபல வழக்கறிஞருமான உயர் திருவாளர் T. M. நாராயணசாமி பிள்ளை M. A. B. L. அவர்களையும், இச்சங்கம் பாராட்டுவதுடன் அவர்களுக்குக் குன்றாவளமும், தளரா ஊக்கமும் கொடுத்துப் பொதுஜன சேவையில் அதிகம் ஈடுபட்டுழைக்கவேண்டிய எல்லா நலனையும் கொடுத்தருளுமாறு இச்சங்கம் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறது.

இந்தத் தீர்மானம் நிறைவேறியதும் கடவுள் வாழ்த்துடன் இரவு 8 மணிக்குக் கூட்ட ம் இனிது கலைவுற்றது.

* * *

### ஒட்டக்கூத்தர் திருநாள்.

(உன்னியூர் செங்குந்தர் சங்கம்)

4-9-30 மாலை 5 மணிக்குக் கூத்தர் பெருமானின் திருவுருவப்படத்தைப் புஷ்பவிமானத்தில் அலங்காரம் செய்து ஊர்வலமாக மேளவாத்தியத்துடனும் செங்குந்த திருப்புகழ் பஜனைக் கோஷ்டியார், பஜனை பாடிக்கொண்டும், ஜே கோஷத்துடன் பவனி வந்து பாவோடித் தோப்பில் அகஜனக விநாயகரது ஆலயத்தில், இதற்கென்றேதயார் செய்யப்பெற்ற அழகிய கொட்டகையின்கண் புஷ்ப விமானத்தை இறக்கிவைத்துக் கடவுளர்க்கு மிகச் சிறப்பாக அபிஷேக ஆராதனை நடந்ததும், ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் தேங்காய், பழம் முதலிய தீபாராதனைக்கு வேண்டிய சாமான்களுடன் ஸ்திரீகளும் விநாயகரது ஆலயத்திற்கு வந்து கடவுள் தரிசனம் செய்து சென்றது குறிப்பிடத் தக்கது. பெண்களும் ஆண்களும் நிறைந்த பெருத்த கூட்டத்தில் கூத்தர் பெருமானுக்கு ஜே, செங்குந்தத் தலைவர்களுக்கு ஜே என்ற பெருத்த ஆரவாரத்தினிடையே தலைவர் உயர்திரு R. மாணிக்க முதலியார் அவர்களது தலைமையின் கீழ் மாபெருங் கூட்டம் கூடியது. தமிழ்ப் புலவர் திரு. கு. மாரியப்ப முதலியார், கூத்தர் பெருமானின் ஜீவிய சரித்திரம் மிக விரிவாய் எடுத்துச் சொல்லியதும், முடிவுரைக்குப் பின் மஹா ஜனங்கள் யாவருக்கும் கடலைச் சுண்டல், தேங்காய் பழம் முதலியவைகள் வழங்கிய பிறகு இரவு 8 மணிக்கு விழா சிறப்பாக நடந்து கூட்டம் இனிது கலைவுற்றது.

பி. மாரியப்ப முதலியார்.

---

## கோவை ஜில்லா

### பொள்ளாச்சி தாலுக்கா வடசித்தூர் செங்குந்தர் சங்கம்.

17-8-30-ல் திரு. கப்பல் குப்பண்ண முதலியார் அவர்கள் கட்டடத்தில் மாலை 3 மணிக்கு கூட்டம் ஆரம்பஞ் செய்து கருப்ப முதலியார் மகன் அங்கப்ப முதலியார் குடும்பத்திற்கும் கணபதி முதலியார் மகன் இராக்கி முதலியார் குடும்பத்திற்கும் ஏற்பட்ட சண்டை சச்சரவை வடசித்தூர் நாட்டாண்மை பெரியதனம் பொது ஜனங்கள் இருந்து ஒற்றுமை செய்து இந்த மாதம் நல்ல முகூர்த்தநாளில் ஸ்ரீகாமாக்ஷியம்மன் ஆலய வேலை துவக்குவதென்றும் இன்று தலைவர் இல்லாததாலும் கோதவாடி பணப்பட்டிக்காரர்கள் வந்து சேராததாலும் அடுத்த மாதம் இச் சங்கம் ஒத்திவைக்கப்பட்டது. ஏகமனதாய்க் கடவுள் வணக்கத்துடன் சபை இனிது கலைந்தது.

உபாத்தியாயர் நே.சி.கா. பழனியப்ப முதலியார்
காரியதரிசி.

* * *

### பவானி காமாக்ஷி வாசக சாலை.

4-8-30-ல் காமாக்ஷியம்மன் கோவிலில் மாலை 6 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. முக்கியமாய்ச் செங்குந்தர்களும், பல இதர வகுப்புப் பிரமுகர்களும் விஜயஞ் செய்திருந்தனர். அச்சமயம் சேலம் திரு. ப. மா. பழனிசாமி பண்டாரம் அவர்கள் 'மதுவிலக்கு' என்பதைப் பற்றி 2 மணி நேரம் பேசினார். பின்னர் திரு. ஜ. க. பெருமாள்சாமி முதலியார் அவர்கள் அதை ஒட்டிச் செங்குந்த சங்கத்தினர் அதனை அவசியம் ஒழிக்கவேண்டுமென்றும், கல்வியில்லாமையால் நமது சமூகம் தாழ்வாகக் கருதப்படுகிறதென்றும், நமது சமூகத்தில் கல்வி பரவாமைக்குக் கட்குடியே காரணம் என்றும் சுமார் 1 மணி நேரம் பேசி, நமது சமூகத்தார் இராப்பாடசாலை ஒன்றை அவசியம் அமைக்க வேண்டுமென வற்புறுத்திக் கூறினார். அதன் பயனாக திரு, வை. ரா. பழனியப்ப முதலியார் அவர்களின் முயற்சியினால் இராப்பாடசாலையை 15-8-30-ல் நியமிப்பதென முடிவு செய்யப்பட்டது. திரு. S. P. சென்னியப்ப முதலியார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் கலைந்தது. 8-8-30-ல் செங்குந்தர் வீதி காமாக்ஷியம்மன் கோவிலில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அதில் திரு ஜ. க. பெருமாள்சாமி முதலியார் அவர்கள் கல்வி என்பதைப் பற்றிப் பேசிச் செங்குந்தர்கள் தங்கள் குழந்தைகளைத் தவறாமல் பாடசாலைக்கு அனுப்பி வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தமது சொற்பொழிவை முடித்தார். பின்னர் திரு, ப. மா. பழனிசாமி பண்டாரம் அவர்களால் காமாக்ஷி வாசகசாலை யென்று பெயரிடப் பெற்ற வாசகசாலை திறக்கப்பட்டது அதிலிருந்து காமாக்ஷி வாசகசாலை நடந்து வருகிறது. குழந்தைகளும் 30க்கு மேல் வந்து வாசித்துக் கொண்டிருக்கின்றனர். அம்முப்பது பேரில் பாதி பெண் மக்களா யிருப்பதைக் கண்டு நாம் ஆனந்தமடைகிறோம் அப்பாடசாலை சிறப்புடன் நடந்துவரப் பவானியிலுள்ள தனவந்தர்கள் உதவி புரியுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

B. S. குழந்தைவேல் முதலியார்,
பவானி.

## கோயமுத்தூர் ஜில்லா

### செங்குந்த வாலிபர் சங்கம்

செங்குந்த குலத்திற்குத் திலகமாகவும், நமது முதல் மகாநாட்டில் வரவேற்புச் சபைத் தலைவருள் ஒருவராகவும் விளங்கிய உயர் திரு. திருச்செங்கோடு தி. ரா. கந்தப்ப முதலியார் அவர்கள் அகால மரணத்தைக் குறித்து ஷை சங்கத்தின் அநுதாபக் கூட்டம் 6-9-30ல் கோவை விக்டோரியா டவுன் ஹாலில் மாலை 4 மணிக்குக் கோவை ஜில்லா போர்டு பிரஸிடெண்டு உயர் திருவாளர் ராவ்பகதூர் C. S. ரத்தின சபாபதி முதலியார் தலைமையில் கூடிற்று.

காலஞ் சென்ற திரு. கந்தப்ப முதலியார் அவர்களின் அரியபொது நல ஊழியங்களைக் குறித்தும். சமூகத் தொண்டுகளைப் பற்றியும் தலைவரும், திருவாளர்கள் E. V. சிங்காரவேலு முதலியார் B.A., V. S. செங்கோட்டையா முதலியார், K. பெருமாள் முதலியார் அவர்களும் விரிவாகக் கூறினர். பின்னர், "பல பொது நல சேவைகளிலும், செங்குந்த சமுகத்தின் முன்னேற்றத்திற்கும் உழைத்த திரு முதலியாரின் அகால மரணத்திற்காக இக்கூட்டம் அநுதாபத்தை அவருடைய குடும்பத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறது" என்ற தீர்மானம் ஏகமனதாய் நிறை வேறியது. கூட்டத்திற்குக் கணபதி, விளாங்குறிச்சி, இரணம், வடவழி, கொளத்துப் பாளையம், வடசித்தூர், பொள்ளாச்சி மூதலிய பல இடங்களிலிருந்தும் 300 பேர்களுக்கதிகம் வந்திருக்கின்றனர்.

பின்னர் மாலை 5 மணிக்குத் திருவாளர் V. S. செங்கோட்டையா முதலியார் தலைமையில் ஷை சங்கத்தின் காரியக் கூட்டம் கூடியது. தலைவர் பல அசந்தர்ப்பங்களால் பலமாதங்களாக கூட்டம் கூட முடியாதிருந்ததைக் கூறினார். காரியதரிசி முதல் கூட்டத்தின் குறிப்பை வாசித்தார். திரு. E. V. சிங்காரவேலு முதலியார் B. A., செங்குந்தர்களிடையிருக்கும் குறைகளைப் பற்றியும் அவற்றை நீக்கும் வழிகளைப்பற்றியும் கூறிக் கூட்டங்கள் அடிக்கடி கூடவேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறினார்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின:—

1. மாதாமாதம் அவசியமாய் ஒரு கூட்டம் கூட வேண்டும். ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வொரு கிராமத்தில் கூடவேண்டும். அடுத்த கூட்டம் பேரூரில் அமாவாசை தினத்தன்று (22-9-30) கூட வேண்டும்.

2. முன் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட காரிய நிர்வாகக் கமிட்டியின் ஜாப்தாவைச் சரியானதென்று வைத்துக்கொள்ளவேண்டும்.

3. சங்கத்தின் அங்கத்தினராதற்கு வருட கட்டணம் அணா எட்டு. அதைப் பொருட் காப்பாளரிடம் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.

4. நமக்குள் கிளர்ச்சியையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தக் கூடிய நமது இரண்டாவது மகாநாட்டை நடத்துவதாக ஏற்றுக்கொண்ட செங்கல்பட்டுஜில்லா மகாஜனங்கள் அதை இன்னும் நடத்தாமல் இருப்பதற்கு இக்கூட்டம் வருந்துகிறது. இன்னும் காலதாமதம் செய்யாமல் சீக்கிரம் நடத்தும்படி அவர்களை இக்கூட்டம்கேட்டுக் கொள்கிறது.

5. அன்னிய நாட்டுத் துணிகளைப் பகிஷ்கரித்துக் கையால் நூற்று நெசவு செய்த துணிகளை மட்டும் உபயோகித்து நம்மவர் தொழிலை அபிவிருத்தி செய்ய ஒவ்வொருவரும் பிரதிக்ஞை செய்து கொள்ள வேண்டுமென்று எல்லாச் செங்குந்தர்களையும் இக கூட்டம் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறது.

பின்னர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

E. V. சிங்காரவேலு முதலியார், காரியதரிசி.

* * * *

### ஷை செங்குந்த வாலிபர் சங்கத்தித்தின் 4-வது கூட்டம் 5-10-30.

#### முத்தி பாளையம்.

#### கட்சிப் பிரதி கட்சிகளுக்குச் சாவுமணி.

#### பெண்கள் சத்தியாக்கிரகம்.

சென்றமாதம் 22-9-30-ல் பேரூரில் செங்குந்தர் மடத்தில் கூடிய கூட்டத்தில் நிறைவேறிய 5-வது தீர்மானப்படி பௌர்ணமி சமயத்தில் தொண்டாமுத்தூரை யடுத்த முத்தி பாளையத்தில் கக்ஷிப் பிளவுகளை நீக்கி ஒற்றுமைப் படுத்த 5-10-30 ஞாயிற்றுக் கிழமை ஷை சங்கக்கூட்டம் கொல்லங்கோடு திருவாளர் கே. முத்துக் குமாரசாமி முதலியாரவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது.

கடவுள் வாழ்த்து இனியவோசைக் கருவிகளுடன் பாடப்பட்டது. பின்னர் காரியதரிசி திரு. ரா. ரா. இரத்தினகிரி முதலியார் முந்திய கூட்டத்தின் குறிப்பை வாசித்தார். அதன்பின் தலைவர் தமது முன்னுரையில் செங்குந்தரின் முன்னோர்களாகிய நவவீரர், ஒட்டக்கூத்தர் மகிமைப் பிரதாபங்களையும் தற்காலத்தில் செங்குந்தர்களது தாழ்ந்து பலஹீனமடைந்த நிலைமையையும், அதற்குக் காரணங்களான கக்ஷிப்பிளவுகள், அநாவசியமான பிடிவாதங்கள், ஒற்றுமை யின்மை, மூட வழக்கங்கள், போதிய கல்வி யின்மை, முதலியவற்றை நீக்கினால் தான் முன்னேற்றமடைய முடியும் என்பதையும் தெளிவாக வலியுறுத்திக் கூறினர்.



பிறகு, திருவாளர் மூலத்துறை ஈ. வி. துரைசாமி முதலியார் பல திருஷ்டாந்தங்களுடன் நன்கு விளங்கும்படி கட்சிகளினால் வரும் தீமைகளை விளக்கி, முத்தி பாளையத்தில் பெண்மக்கள் எப்படி தான் சில மாதங்களுக்கு முன் சொன்னபடி தங்களது ஜனங்களை அழிக்கச் செய்யும் மதுபானத்தை விட்டொழிக்கச்செய்தார்களோ அதே மாதிரி தங்கள் தங்கள் புருடர்களைக் கக்ஷிகளை யொழித்து ஒற்றுமைப்படும்படி சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்று உருக்கமாய்க் கேட்டுக் கொண்டார். பின்பு திருவாளர்கள் காரமடை அ. சாமிநாத முதலியார், கோவை பருத்தி விதை மண்டி க. பெருமாள் முதலியார், ஈ. வே. சிங்காரவேலு முதலியார் பி. ஏ., வி. வி. வெள்ளியங்கிரி முதலியார் முதலியோர், "செங்குந்தர்கள் வழக்குகளும் அவற்றை நீக்கும் முறைகளும்" என்ற விஷயத்தை விரிவாக மூன்று மணிநேரம் எடுத்துக் கூறினர்.

பின்னர் அவ்வூர் ஜனங்களின் குறைகள் விசாரிக்கப்பட்டன. சுமார் 37 வருடங்களாக இருந்து வந்த சண்டை சச்சரவுகளுக்கும், மனஸ்தாபங்களுக்கும் செங்குந்தரின் இழிவுக்கும் காரணமான கட்சிப் பிரதிகக்ஷிகளுக்கு முக்யஸ்தர்களாயிருந்த ஸ்ரீமான்கள் ந. அய்யாவு முதலியார், பெ. கந்தசாமியார், க. வெள்ளியங்கிரி முதலியார், ஆறுமுக முதலியார் முதலியோர் தங்கள் தங்கள் வாதங்களையும் மனஸ்தாபங்களையும், ஒற்றுமையையும் குலாபிவிருத்தியையும்முன்னிட்டு, விட்டொழித்துக் கக்ஷி பிரிவுகளை நீக்கி ஒன்றுபட்டார்கள். முத்திபாளையத்தில் செங்குந்தர்களின் முக்ய குறையான கக்ஷி பிரதிகக்ஷிகளுக்குச் சாவுமணியடித்துக் குலமுன்னேற்றத்திற்கு ஒற்றுமையென்ற முத்தியை மற்ற செங்குந்த கிராமங்கள் அடைய வழிகாட்டினார்கள். இதை மற்ற கிராமத்தவர்களும் பின்பற்றுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டன:

1. செங்குந்தரிடையிருக்கும் கக்ஷி பிரதிகக்ஷிகளை யொழிக்கவும், அடிக்கடி ஏற்படுகின்ற சண்டை சச்சரவுகளால் கோர்ட்டுகளுக்கும் இதராளிடமும் சென்று பணஞ் செலவிட்டு வழக்கு முறையிட்டு அவமானப்பட்டு நிற்பதைவிட்டு நம்மவருள் சில பெரியோர்கள் கொண்ட ஒரு பஞ்சாயத்து சபையை தேர்ந்தெடுத்து அச்சபையாரிடம் முறையிட்டு வழக்குகளைத் தீர்த்துக்கொள்வது நலம் என்றும், இந்த ஜில்லாவிலுள்ள எல்லாச் செங்குந்தர்களும் அதன் மூலம் தங்கள் குறைகளை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும் என்றும் இக்கூட்டம் எல்லாக் கிராமத்தாரையும் கேட்டுக் கொள்கிறது.

2. கீழ்க்கண்டவர்களை இக்கூட்டம் பஞ்சாயத்தார்களாக நியமிக்கின்றது. திருவாளர்கள் கோவை வ. செ. செங்கோட்டையா முதலியார், கொல்லங்கோடு கே. முத்துகுமாரசாமி முதலியார், காரமடை அ. சாமிநாத முதலியார், கோவை க. பெருமாள் முதலியார், கோவை பி. கப்பினி முலிதயார், கணபதி மா. ரா. இரத்தினகிரி முதலியார், வடவழி வி. வெள்ளியங்கிரி முதலியார், ஈரோடு வா. மு. மொட்டையப்ப முதலியார், பொள்ளாச்சி ஆறுமுக முதலியார்.

3. செங்குந்தரின் குறைகளுக்குமருந்தான கல்வியைப் பெண்மக்களுக்குப் பத்து (10)வருடவரையும் ஆண்பிள்ளைகளுக்கு 14 வருடவரையும் பெற்றோர்கள் அவசியம் புகட்டவேண்டும்.

4. அடுத்த கூட்டம் செங்குந்த சமூகச் சீர்திருத்தத்திற்காக சூலூரையடுத்த முதலிபாளையத்தில் அடுத்த பௌர்ணமி சமயத்தில் கூடும்.

பின்னர் தலைவரின் உருக்கமான முடிவுரையும் வந்தனோபசாரமும் கூறப்பட்டன. இக்கூட்டத்திற்குக் கோவைஜில்லாவின் பலபாகங்களிலிருந்து பிரமுகர்கள் வந்தருந்தனர். 300-க்கு மேற்பட்ட தொகையினர் கூடியிருந்தனர். முத்திபாளையம் மகா ஜனங்கள் கூட்டத்தாருக்கு மாலைச் சிற்றுண்டியும், இரவு விருந்தும் சிறப்பாக நடத்தினது இங்குகுறிப்பிடத்தக்கது. அனைவரும் கட்சிப்பிளவுகளை யொழித்த சந்தோஷத்தோடு தத்தம் ஊருக் கேகினார்கள்.

---

## திருநெல்வேலி ஜில்லா

### சங்கரநாயனார் கோவில்

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

10-7-30உ இரவு 7 மணிக்கு முதலியப்பபுரம 2 செ. தெருவில் உயர்திரு A. முத்தய்யா முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் கூட்டம் கூடிற்று. கடவுள் வணக்கம் பாடியதும் திரு. S. பழனி முதலியார் அவர்கள் 'இளையான் குடிமாற நாயனார்' என்பது பற்றியும், திரு. M. திருவுடையா முதலியார் அவர்கள் 'குழந்தை வளர்ப்பு' என்பது பற்றியும் உபந்யசித்தார்கள். இடையிடையே சுப்பிரமண்ய முதலியார் அவர்கள் தேவார பஜனையும் மாணவர்கள் செங்குந்த முன்னேற்றக் கீர்த்தனைகளுமாகப் பாடினார்கள். மணி 11க்குக் கூட்டம் இனிது நிறைவேறியது. 14-8-30உ இரவு மணி 7க்கு முதலியப்பபுரம் 3 செ. தெருவில் உயர் திரு. A. முத்தய்யா முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் கடவுள் வணக்கம் பாடியதும் தலைவர் அவர்களால் சேனூனியனை சரித்திரம் என்பது பற்றி நடந்தேறிய பின் M. திருவுடையா முதலியார் அவர்கள் 'ஒற்றுமையின் உயர்வு', 'மெட்ரூஸ் மகாஜன தலைச் சங்கத்தின் தொண்டு' இவைகளைப் பற்றியும் சொற் பொழிந்தார்கள். தலைவர் அவர்கள் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் இரவு மணி 12க்குக் கூட்டம் கலைந்தது.

31-8-30உ இரவு மணி 7க்கு தேவி பட்டணம் தெருவில் தலைவர் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய கூட்டத்தில் கடவுள் வணக்கம் பாடியதும் திரு. T. P. S. அருணகிரி முதலியார் அவர்கள்

திரு 'நீலகண்ட நாயனார்' என்பதுபற்றி உபன்யசித்தபின்னர் திரு. M. திருவுடையாமுதலியார் அவர்கள் 'குல முன்னேற்றத்தைப் பற்றி சொற்பொழிவு நிகழ்த்திப் பின் தலைவர் அவர்கள் ஈஸ்வர பக்தியில் ஈடுபட வேண்டும் என சங்கீதத்துடன் உபன்யசிக்க திரு. ஜவுளி திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் தலைவர் அவர்களுக்கும் பிரசாரர்களுக்கும் பூமாலை சூட்டத் தலைவர் அவர்கள் வந்தனோபசாரங் கூற மணி 11க்குக் கூட்டம் கலைந்தது. சுபம்.

12-9-30வ இரவு 7 மணிக்குத் திருவுடையாபுரம் தெருவில் தலைவர் திரு. A. முத்தைய முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் திரு. S. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் கடவுள் வணக்கம் பாடியதும் திருவாளர்கள் S. பழனியாண்டி முதலியார், திருவுடையா முதலியார் இருவரும் 'அமர் நீதி நாயனார்' 'ஈஸ்வரனும் ஈஸ்வர பக்தியும்' என்பவை பற்றி முறையே உபந்யசித்தனர். திரு. சுடலைமுத்து நாடார் அவர்கள் மாலை சூட்ட வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

A. முத்தைய முதலியார், தலைவர்.
தி. மு. தி. சங்கரபாண்டிய முதலியார், காரியதரிசி.

* * *

## பழயப்பேட்டை
### கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் திருநக்ஷத்திரக் கோண்டாட்டம்.
#### செங்குந்தர் வாசகசாலை.

1106ஸு ஆவணி 19வ பகல் 12 மணிக்கு இவ் வாசகசாலையில் நமது குலதிலகராகிய ஒட்டக்கூத்தப்பெருமான் படத்திற்குக் கும்பம் சேவித்து அலங்காரஞ் செய்து நைவேத்யாதிகள் நடத்தி வந்திருந்த பிரமுகர்களுக்கு சந்தன தாம்பூலாதி வழங்கப்பட்டன.

மாலை $3\frac{1}{2}$ மணிக்கு திரு D. பழனியாண்டி முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. திரு. R. கோமதிநாயக முதலியார், திரு. சொ. கோமதிநாயக முதலியார், திரு. சொ. சுப்பையா முதலியார், திரு. சச்சிதானந்த முதலியார் ஆகியவர்கள் நம் கூத்தர் பெருமானது புகழ் நிரம்பிய சரிதத்தை எடுத்துச் சொன்னார்கள். ஏராளமான செங்குந்தர்கள் வந்திருந்தார்கள்.

இரவு 8-30 மணிக்குச் சக்கரவர்த்தியாரது படம் சப்பரத்தில் வைத்து அலங்கரித்து நம் குல விருதுகளுடன் வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாகக் கொண்டுவரப்பெற்றது. ஊர்வலத்திற்குத் திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். வீடுகள் தோறும் திருக்கண் சாத்தினார்கள். 12 மணிக்கு ஊர்வலம் முடிந்ததும் பூஜை நைவேத்தியம் செய்யப்பட்டுப் பிரசாதம் வழங்கப் பெற்றது. அநேக குலாபிமானிகள் பொருளுதவி செய்தார்கள்.

விழாச் சமயத்தில் நம் குலப் பெரியோர்கள் ஒன்று கூடி இவ்விழாவை வருஷந்தோறும் இவ் வாசகசாலையிலேயே நடத்தவேண்டு மென்று தீர்மானித்து அதற்கு வேண்டிய பொருளுதவியைத் தாங்கள் செய்வதாகவும் வாக்களித்தார்கள்.

R. கோமதிநாயக முதலியார், காரியதரிசி.

---

## மதுரை ஜில்லா
### செங்குந்த இளைஞர் சங்கம்
### முதலாம் ஆண்டு விழா.

சென்ற 7-9-30 மாலை $3\frac{1}{2}$ மணிக்கு ஷை சங்கத்தின் ஆண்டு விழா மிக்க சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அவைத்தலைவர் திருப்பாதிப்புலியூர் வக்கீல் உயர்திரு C. P. ரத்தினசபாபதி முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்களைத் திரு. S. R. M. சுந்தர முதலியாரவர்கள் இல்லத்திலிருந்து மோட்டாரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டது.

முதலில் தலைவர் அவர்களும் பிறரும் செங்குந்தர் இலவச வாசகசாலைக்கு விஜயஞ் செய்து அதனைப் பார்வையிட்டு அதன் நிர்வாகத்தைப் பற்றிச் சிலாகித்து எழுதினர். பிறகு ஆண்டு விழா மண்டபத்திற்கு ஏகினர். கடவுள் வணக்கம் திரு. A சித்து மாணிக்கம் அவர்களால் பாடப்பட்ட பின் தலைவர் முன்னுரை கூறினர். பிறகு சிவகங்கை ராஜா ஹைஸ்கூல் தலைமையாசிரியர் திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியாரவர்கள், B.A.,L.T., 'சமூக முன்னேற்றம்' என்பதுபற்றி வீரஞ்செறிந்த உரை நிகழ்த்தினார். பின்னர் இந்நகர் அட்வகேட் திரு. S. லக்ஷ்மிரதன் பாரதி, M.A., B.L., அவர்கள் "இளைஞர் இயக்கம்' என்பது குறித்து விரிவுரை ஆற்றினார். பின் தலைவர் அவர்கள் சமூகம், தேசீயம், சமூகப் போக்கு இவைகளை உள்ளடக்கி ஓர் அரிய பின்னுரை கூறினார்.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

"சென்னை மாகாணத்தில் சுமார் 6 லக்ஷம் ஜனத்தொகையுள்ள செங்குந்தர்களின் சார்பாக ஓர் பிரதிநிதி இதுகாறும் சட்டசபையில் நியமனம் செய்யப்படாததாலும், செங்குந்தர்களின் குறைகளை நிவர்த்திக்க அன்னவர்களின் பிரதிநிதி அத்தியாவசியமானதாலும் வரும் சட்ட சபையில் சென்னை அட்வகேட் உயர்திரு V. இரத்தின முதலியார் B.A., B.L., அவர்களைச் செங்குந்தர்களின் சார்பாக நியமனம் செய்யும்படி கவர்ன்மெண்டாரவர்களை இக் கூட்டம் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறது.

"செங்குந்தர் இலவச வாசகசாலையின் அபிவிருத்தியின் பொருட்டு ஓர் நிதி சேர்க்க லாட்டரி சீட்டு நடத்த இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

விஜயஞ் செய்திருந்த பிரமுகர்கள் ஒரு சிலர்:—

திருவாளர்கள் W. P. A. சௌந்தர பாண்டியம், M. T. தியாகராஜமுதலியார், துளசிராம், கே. ஆர். வெங்கட்டராமய்யர், கோபால கிருஷ்ணக்கோன், பாண்டிய நாடார், அழகர்சாமி, கூடலிங்கம்.



## இராமநாதபுரம் ஜில்லா
### செங்குந்த வாலிபர் சங்கம்
### ஸ்ரீவில்லிபுத்தூர்.

15-8-30வ மாலை 7 மணிக்குக் கீழப்பெருமாள் பட்டி தெரு ஸ்ரீ ஆனந்த விநாயகர் ஆலயத்தில் திரு. சு. மாயாண்டி முதலியாரவர்கள் தலைமையில் கூட்டம் கூடியது. கடவுள் வணக்கம் ஆனதும் திரு. ச. சோமசுந்தர முதலியாரவர்கள் 'தற்கால நிலைமையும் நமது கடமையும்' என்பது பற்றி விரிவாகச் சுமார் ஒரு மணி நேரம் பேசினார். திரு, ஆ. ராமசாமி முதலியாரவர்கள் 'தற்கால நாகரீகத்தில் சிறந்தது கல்வி' என்றும், 'கல்வியை நம்சமூகத்திடையே பரவச் செய்ய நம் சமூகப் பெரியார்களும் வாலிபர்களும் தீவிர முயற்சி செய்ய வேண்டுமென்றும், அநாவசியமாய்க் கோயில்களுக்கும் புரோகிதர்களுக்கும் செலவிடும் பொருள்களை நமது ஏழைச் செங்குந்தர்களுக்குக் கல்விக்காக செலவு செய்யவேண்டு' மென்றும் வற்புறுத்திப் பேசினார்.

கடைசியாகத் தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் இரவு 10-30 மணிக்கும் கூட்டம் இனிது கலைந்தது.

உபகாரியதரிசி ச. சோமசுந்தர முதலியார்.

---

## நன்கொடைகள்

### தலைச்சங்கத்துக்குத் திருமண நன்கொடை.

[மாயவரம் தாலூக்காவைச் சேர்ந்த கிழையூர் திரு. அ. சொக்கலிங்க முதலியார் அவர்கள் மூலம் வசூல் விவரம்].

1. பிரமோதூதஸு ஆவணிமீ 25வ திருச்செம்பொன்பள்ளி நாட்டைச் சேர்ந்த செம்மனார் கோவில் திரு ப. பாவாடை முதலியார் குமாரர் இரத்தின முதலியாருக்கும், சிதம்பரம் திரு. பா. துரைசாமி முதலியாரவர்கள் குமாரத்தி, ஸ்ரீமதி. அபுரூபத்தம்மாளுக்கும், நடந்தேறிய திருமணத்தில், நமது தலைச் சங்கத்திற்கு நன்கொடை யளித்தது ரூ. 1—0—0 ஒன்று.

2. பிரமோதூதஸு ஆவணிமீ 26வ சீர்காழி நாட்டைச் சேர்ந்த மேலப்பாதி, திரு. வலம்புரி முதலியார் குமாரர்கள் இருவருக்கும் நடைபெற்ற, திருமணங்களில் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடை அளித்தது ரூ 1-0-0 ஒன்று

3. பிரமோதூதஸு ஆவணிமீ 27வ திருச்செம்பொன்பள்ளி நாடு ஷை நாட்டின் தலைவர் வெ. சரவண முதலியாரவர்களின் சிரேஷ்ட குமாரர் வேலாயுத முதலியாருக்கும் ஷை நாட்டின் தலைக் கிராமம் புஞ்சை சோ. வே. கோவிந்தசாமி முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி காவேரியம்மாளுக்கும் நடைபெற்ற திருமணத்தில் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடையளித்து ரூ 2-0-0 இரண்டு.

4. பிரமோதூதஸு ஆவணிமீ 29வ சீர்காழி நாட்டைச் சேர்ந்த கிழையூர் திரு. ஜ. மு. வீரப்ப முதலியாரவர்களின் குமாரர் திரு நிறைச்செல்வர் மாணிக்க முதலியாருக்கும் தென் திருநாகேஸ்வரம் நாடு ஷை நாட்டின் தலைவர் தெற்குவீதி திரு. ரு. சீனுவாச முதலியாரவர்களின் குமாரத்தி ஸ்ரீமதி முத்துலெக்ஷ்மியம்மாளுக்கும் மிக்க விமரிசையாக நடைப்பெற்ற விவாக சுப முகூர்த்தத்தில் முறையே மணமகன் வீட்டாரிடம் ரூ. 2-0-0 மணமகள் வீட்டாரிடம் ரூ 1-0-0ம் கூடிய ரூபாய் மூன்றும் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

### கரணபூஷண நன்கொடை

5. பிரமோதூதவருஷம் புரட்டாசிமாதம். 9-வ திருச்செம்பொன்பள்ளி நாட்டைச் சேர்ந்த ஆக்கூர் கிராமாதிகாரி திருவாளர் ந. கோவிந்தசாமி முதலியாரவர்களின் அருந்தவப் புதல்வன் சிரஞ்சீவி ரெத்தினசபாபதிக்குக் கர்ணபூஷண சுப முகூர்த்தம் மிக்க விமரிசையாகவும் குதூகலமாகவும் நடைப்பெற்றதில் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பெற்றது ரூ 2-0-0 இரண்டு.

### இதர திருமண நன்கொடைகள்.

1. மானூர் திரு. கொண்டா முதலியார் குமாரர் திரு. கொ. மருதமுத்து முதலியார் அவர்கள் திருமண நன்கொடை ரூ. 1—0—0
2. மருதவரை நீழல் திரு. V. P. மருதப்பா முதலியார் அவர்கள் திருமண நன்கொடை. ரூ. 2—4—0
3. மருதவரை நீழல் திரு. S. இராமசாமி முதலியார் திருமண நன்கொடை ரூ. 2—8—0
4. கோவை ஜவுளி திரு. ர. தேவகிருஷ்ண முதலியார் திருமண நன்கொடை ரூ. 1—4—0
5. ஐயங்கார் குளம் திரு. S. லக்ஷ்மண முதலியார் திருமகன் திருமணநன்கொடை ரூ. 5—0—0
6. காரைக்கால் திரு. உ. துரைசாமி முதலியார் அவர்கள் குமாரர் திரு. அம்பலவாண முதலியார் திருமண நன்கொடை (திரு. R. குமரவேல் முதலியார் மூலம்) ரூ. 1—0—0

### மற்ற நன்கொடை விபரங்கள்

1. திரு. புதுவை ஆ. வே. முத்தைய்ய முதலியார் ரூ. 5—0—0
2. திரு. பழைய வண்டிபாளையம் வை. கந்தசாமி முதலியார். ரூ. 0—10—0
3. தென்னாப்பிரிகா பிரிடோரியா திரு. V. V. இராமசாமி நாயடுகாரு, (ஒரு: பவுன்) ரூ. 13—8—0
3. காவலிப்பாளையம் செங்குந்தர்கள் நன்கொடை ரூ. 1—0—0

## ‘செங்குந்த மித்திரன்’ பஞ்சாங்கம்

பிரமோதூதஸு ஐப்பசிமீ (1930ஸு அக்டோபர்மீ—நவம்பர்மீ)

தக்ஷிணாயனம், சரத்ருது.

(அக்டோபர்மீ — நவம்பர்மீ; பிரமோதூதஸு—ஐப்பசிமீ)

| இங்கிலீஷ் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | வாக்கிய சிரார்த்த திதி | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | வெ | தச 27-18 | ஆ 24-45 | ம 60 | 1 | ½ | ஏகா | தெற்கு | |
| 18 | 2 | சனி | ஏகா 20-25 | ம19-45 | அ 19-45சி | 1 | ½ | துவா | மேற்கு | |
| 19 | 3 | ஞா | துவா 13-15 | பூ 14-30 | சி 14-30 அ | 0 | ½ | திர | வடமே | |
| 20 | 4 | திங் | திர 6-13 | உத் 9-15 | சி 60 | 0 | ½ | சது | வடகிழ | தீபாவளி பண்டிகை |
| | | | சது 59-28 | | | | | | | |
| 21 | 5 | செ | அ● 53-5 | அஸ் 4-18 | சி 60 | 0 | 0 | அமா | பூமி | சர்வத்ர அமாவாசை |
| 22 | 6 | புத | பிர 47-58 | சித் 0-3 | சி 60 | 0 | 0 | பிர | கிழக்கு | [கேதாரி கவுரி |
| | | | | சு 56-40 | | | | | | [விரதம் |
| 23 | 7 | வியா | துதி 44-0 | விசா 54-45 | சி 60 | 0 | ½ | துதி | வடக்கு | |
| 24 | 8 | வெ | திரி 41-35 | அனு 54-18 | சி 54-18ம | 0 | ½ | திரி | தென்கி | |
| 25 | 9 | சனி | சது 40-55 | கே 55-40 | சி 60 | 0 | ½ | சது | தெமே | |
| 26 | 10 | ஞா | பஞ் 42-0 | மூ 58-38 | அ 58-38 சி | 1 | ½ | பஞ் | தெற்கு | |
| 27 | 11 | திங் | சஷ் 44-55 | பூர 60... | ம 60 | 1 | ½ | சஷ் | மேற்கு | கந்தர் சஷ்டி சூரஸம் |
| 28 | 12 | செ | சப் 49-23 | பூ 3-23 | சி 3-23 அ | 1 | ½ | சப் | வடமே | [ஹாரம் |
| 29 | 13 | புத | அஷ் 54-58 | உத் 9-33 | அ 9-33 சி | 1 | ½ | அஷ் | வடகிழ | |
| 30 | 14 | வியா | நவ 60... | தி 16-30 | சி 60 | 1 | ½ | நவ | ஆகாசம் | |
| 31 | 15 | வெ | நவ 1-8 | அவி 24-0 | சி 60 | 2 | ½ | தச | ஆகாசம் | |
| 1 | 16 | சனி | தச 7-15 | ச 31-20 | அ 31-20 ம | 2 | 0 | ஏகா | பூமி | |
| 2 | 17 | ஞா | ஏகா13-3 | பூர 38-3 | சி 38-3 அ | 2 | 1 | துவா | கிழக்கு | |
| 3 | 18 | திங் | துவா 17-58 | உத் 43-35 | சி 60 | 2 | 1 | திர | வடக்கு | |
| 4 | 19 | செ | திர 21-28 | ரேவ 48-0 | சி 60 | 2 | 1 | ... | தெகிழ | |
| 5 | 20 | புத | சது 23- 48 | அ 51-3 | ம 51-3 சி | 2 | 1 | சது | தெமே | |
| 6 | 21 | வியா | ○ 24-35 | பர 52-45 | சி 52-45 ம | 2 | 1 | பௌ | தெற்கு | பௌர்ணமி |
| 7 | 22 | வெ | பிர 24-3 | கி※ 53-13 | சி 53-13 ம | 2 | 1 | பிர | மேற்கு | கிருத்திகை |
| 8 | 23 | சனி | துதி 22-18 | ரோ 52-33 | அ 52-33 சி | 2 | 1 | துதி | வடமே | |
| 9 | 24 | ஞா | திரி 19-28 | மிரு 51-0 | சி 60 | | 1 | திரி | வடகி | |
| | | | | | | 2 | | சது | | |
| 10 | 25 | திங் | சது 15-55 | திரு 48-43 | சி 48-48 அ | 2 | 1 | பஞ் | ஆகாச | |
| 11 | 26 | செ | பஞ் 11-43 | புன 45-55 | சி 60 | 2 | 0 | சஷ் | பூமி | |
| 12 | 27 | புத | சஷ் 7-[illegible] | பூச 42-48 | சி 60 | 2 | ½ | சப் | கிழக்கு | |
| 13 | 28 | வியா | சப் 2-0 | ஆ 39-18 | சி 39-18 அ | 1 | ½ | அஷ் | வடக்கு | |
| | | | அஷ் 56-45 | | | | | | | |
| 14 | 29 | வெ | [illegible] 51-25 | ம 35-20 | [illegible]-35-20 சி | 1 | ½ | நவ | தெமே | |
| 15 | 30 | சனி | [illegible] 46-3 | பூர 32-5 | சி 32-5 ம | 1 | ½ | தச | தெற்கு | |




# மின்சார ரசம்

சகல வியாதிகட்கும் தேவாம்ருதம் போன்றது.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது.

**7 வருஷ பார்ச வாய்வு.**

* மின்சார ரசத்தை 2 நாள் சாப்பிட்டேன். எனக்கு 7 வருஷகாலமாய் இருந்த பார்ச வாய்வு உபாதி சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிச்சுகமடைந்ததைப் பற்றி நான் சந்தோஷமடைந்தேன்.

N. S. ராமசாமி ரெட்டியார்,
ஹெட்மாஸ்டர்,
எம். கரட்டிப்பட்டி.
17—10—29.

**25 வருஷ க்ஷயம்.**

** ஒருவர் சுமார் 25 வருஷ காலமாய் க்ஷயம், பெரும் சுவாசம், அதிக இரும்பல், இரும்பும்போது இரத்தம் கட்டி கட்டியாக வருவதுமாக மிக்க பாதை பட்டுக்கொண்டிருந்தார். மின்சார ரசத்தைக் கொடுத்துப் பூர்ண சௌக்கியமாய்ச் சுகமாக இருக்கிறது.

கிருஷ்ணசாமி முதலியார்,
வியாபாரம், 38/78, பிடாரியார்கோவில் தெரு, சென்னை.
15-4-29.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம்.
—
ஒரேமுறை பரீக்ஷியுங்கள்.
—
கேட்லாக் இனாம்.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.

**மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்.**



### மதன சுந்தரி மாத்திரைகள்

இம்மாத்திரையை உட்கொண்டவர்களுக்கு சிற்றின்பம் இன்னதெனப் பூர்த்தியாய் விளங்கும். இந்திரபோகத்தைத் தரும். ஆண் தன்மை அன்றியவர்களுக்கும் சந்ததி இல்லாதவர்களுக்கும் இது சஞ்சீவிபோன்றது. தேக வலிமை நரம்புகளுக்குச் சக்தியும் உண்டாக்குவதன்றி இருபாலார்க்கும் இன்பத்தையுண்டாக்கும். ஒரு தடவை இம்மாத்திரைகளை உண்டு அநுபவித்தவர்களுக்கு நாங்கள் மறுபடியும் சொல்ல வேண்டுவது இல்லை. தேவாமிர்தம்.

இதன் விலை டப்பி 1-க்கு ரூ. **1—0—0**

தபால் செலவு பிரத்தியேகம்

ரூபீஸ் பெஸிபிக் ஔஷதாலயம்,

நெ. 30, நம்மாழ்வார் தெரு, மதராஸ்.



### நமது தலைவர்களின் அழகிய போட்டோ படங்கள்

| தபாற்செலவு உள்பட விலை | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஒட்டக்கூத்தர் ... | 1 | 4 | 0 |
| தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22-பேர் கொண்ட படம்) .... | 2 | 8 | 0 |
| ம. சண்முக சுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் .... | 1 | 8 | 0 |

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத்தெருவு, சென்னை.

# எங்கள் கூட்டுறவு பாலிஸி ஏற்பாட்டில் சேரவேண்டுவது அவசியம்

# ஏன் ?

**1.** முக்கிய அம்சங்கள் : (1) வைத்தியப் பரீக்ஷை கிடையாது. (2) 18-வ முதல் 55-வயது வரை யாவரும் பாலிஸிதாரராகச் சேரலாம். (3) மாதம் ரூ. **1-0-0** செலுத்தவேண்டியது 12 வருஷங்கள் வரைதான். (4) ப கலெக்டர்கள் தீர்மானப்படி பாலிஸிதாரின் உரிமைகளைக் ஸ்டாம்பு ஒட்டப்பட்ட பாலிஸிகள் கொடுக்கப்படுகின்றன. கனைப்போல் வெறும் கட்டுகளல்ல.

**2.** மிகவும் லாபகரமானது

மாதம் ரூபா **10** செலுத்திய கீழ்க்கண்ட ஒவ்வொரு பாலிஸிதாரின் வாரிசுகளுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைத் தொகை.

**ரூ. 5**

161, 230, 67, 274, 302, 150, 269, 880, 206, 228,
213, 678, 169, 1000, 855, 259, 522, 1027, 926, 818,
840, 130, 11, 1268, 1588, 1382, 1257, 1393, 912, 774,
2938, 1379, 2087, 1028, 108, 483, 104, 2581, 1470, 1765.

**3.** கவர்ண்மெண்டார் மேற்பார்வையுள்ளது

முதல் வருஷத்திலேயே

சேர்ந்துள்ள பாலிஸிதார்கள் 10,
கம்பெனியால் கொடுக்கப்பட்ட உரிமைத் தொகை ரூ. 20
கவர்ண்மெண்டு செகியூரிடிகள் ரூ. 22

ரூ. 40 மாதச் சம்பளத்திலாவது கமிஷனுக்காவது ஏஜண்டுகள் தேவை

ரூல்ஸ் புஸ்தகங்களுக்கும் மற்ற விவரங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு

## தி ஸ்டார் ஆப் இந்தியா

இண்டஸ்ட்ரியல் அண்டு ஜெனரல்

அஷ்யூரன்ஸ் கம்பெனி, (லிமிடெட்

23, 2-வது லைன் பீச், மதராஸ்.


| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

This Journal is published by N. T. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswamy, at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.